பிரேம பஞ்சமி

தமிழ்நாட்டுச் சிறுகதைகள்

1. மங்கையர்க்கரசியின் காதல்
2. ராஜாஜி குட்டிக் கதைகள்
3. கன்யாகுமாரி
4. சந்தனக் காவடி
5. சக்ரவாகம்
6. கனகாம்பரம்
7. தோட்டியை மணந்த அரசகுமாரி
8. பவழ மாலை
9. வெண் தாமரை
10. அழகி
11. வைர டோலக்
12. லக்ஷ்மீ கடாக்ஷம்
13. வாடா விளக்கு
14. ஜடாதரன்

ஸண்டே டைம்ஸ் பிரஸ்,
சென்னை. - (19411117).

நாவல் சக்கரவர்த்தி பிரேம்சந்த் எழுதிய

பிரேம பஞ்சமி

★

ஹிந்தியிலிருந்து மொழிபெயர்த்தவர்:

பண்டித ஜைலானி
(விசாரத்)

★

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை

 [ரூ. 1-6-0

பொருளடக்கம்

1. சரி

சதி

1

சிந்தா தேவியின் பூதவுடல் மறைந்து இரண்டு நூற்றுண்டுகளாயின. ஆனுல் அவள் புகழ் உடம்போ இன்றும் தெய்விக ஜோதியுடன் பிரகாசிக்கின்றது. புந்தேல்கண்ட் கிராமத்தில், இன்றும், ஆண் பெண் அனைவரும் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் சிந்தா தேவியைப் பூஜிக்கின்றனர். அன்றைத்தினம் அக் கோயிலானது இன்னிசைக் கீதங்களாலும் நவ நவமான ஆடையலங்காரப் பிரியர்களின் கூட்டத்தாலும் மங்களகரமான அலங்காரங்களாலும் பொலிவுற்று விளங்கும்.

தேவியின் ஆலயம் உயர்ந்ததொரு சிறு குன்றின்மீது கட்டப்பட்டிருக்கிறது. கோபுரத்தின் முடியிலுள்ள தங்கக் கலசம் தன் ஒளியை நாலா பக்கங்களிலும் வீசி, தாசர்களை அருட்பிரகாசத்தால் அணைப்பதுபோன்றிருக்கும். ஆலயம் சிறியது; அதற்குள், ஒவ்வொருவராகத்தான் சென்று சேவித்து வரமுடியும். மூலஸ்தானத்தில் சிந்தா தேவியின் சிறு விக்கிரகத்தைத் தவிர்த்து வேறு உருவங்கள் இல்லை. குன்றின் அடிவாரத்திலிருந்து கோயில் வரையில் அழகான படிக்கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. கூட்ட நெருக்கடியில், ஜனங்கள் தவறி விழுந்து விடாமல் தடுக்க, படிக்கட்டுகளின் இருபுறங்களிலும் கைப்பிடிச் சுவர்களை அமைத்திருக்கின்றனர்.

சிந்தா தேவி சதியாகப் பூஜிக்கப்படுகிருள். அவளும் அவளுடைய கணவனும் இங்கே தெய்விக வடிவில் சூக்ஷ்ம

தேகத்தில் கோயில் கொண்டிருக்கின்றனர் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

சிந்தா தேவி எல்லோரையும்போல் கணவனுடன் சதியானுள் என எண்ணுவது சரியல்ல. அவ்வாறு நிகழவில்லை. கணவனின் சடலத்துடன் அவள் சதியாகவில்லை. சிந்தா தேவியின் கணவன் உயிருடன் கைகூப்பி அவள்முன் நின்றுன். ஆனுல் அவள் அவனை ஏறிட்டும் பார்க்கவில்லை. அவள் கணவனின் சடலத்துடன் சதியாகவில்லை. ஆனுல் தன் காதலனின் ஆத்மாவுடன் சதியாகி இருக்கிருள். அந்த இடத்தில் கணவனின் பொய்யுடல் இல்லை. ஆனுல் அவனுடைய முந்திய புகழுடம்பு மாத்திரம் இருக்கிறது.

2

யமுனு நதி தீரத்தில் காலபி என்பது ஒரு சிறு நகரம். சிந்தா அந்த ஊரில் ஒரு வீரக் குலத்தில் பிறந்தவள். சிந்தா சிறு குழந்தையாய் இருக்கும்போதே அவளுடைய தாயார் விண்ணுலகடைந்தாள். அவளுடைய தகப்பனே, தாயும் தகப்பனுமாக இருந்து அவளை வளர்த்துவந்தார். அச்சமயத்தில் போர் சதா நடந்த வண்ணம் இருந்தது. போர் நடக்கும்போது, போர் வீரர்களுக்குக் குதிரையை விட்டுக் கீழே இறங்கக்கூட அவகாசம் கிடைக்காது. குதிரையின்மேல் இருந்துகொண்டே போஜனம் செய்வார்கள். களைப்பாறுவதும் சேணத்தின்மேல் சாய்ந்தபடியேதான்.

சிறுமியான சிந்தா, தன் தந்தையுடன் பாலைவனப் பிரதேசத்தில் வசிக்க நேர்ந்தது. தகப்பனுர், அவளை மலைக் குகைகளிலாவது அல்லது அங்கே அபூர்வமாகத் தோன்றும் மரநிழலிலாவது விட்டுவிட்டுப் போர்க்களம் சென்றுவிடுவார். சிந்தா, பயமும் கவலையும் அற்று அங்கே அமர்ந்து, மண்ணுலும் மணலாலும் கோட்டை கட்டுவதும், அதை அழிப்பதுமாக விளையாட்டில் பொழுதைக் கழிப்பாள். சில சமயங்களில் மாலை நேரமாகியும் தகப்பனுர் திரும்பி வரமாட்டார். ஆனுல் சிந்தாவோ சிறிதும் அச்சம் கொள்ளமாட்டாள். ஜன நடமாட்டம் இல்லாத அந்த இடத்தில் அவள் தனியாகப் பசியையும் தாகத்தையும் பொருட்படுத்தாது தகப்பனுரின் வரவை எதிர்பார்த்து, இரவு முழுவதும் தூங்காமல் அமர்ந்திருப்பாள். அவள் அணில் ஆட்டுக் கதைகளையாவது, ஆமை முயல் கதைகளையாவது கேட்க விருப்பம் கொள்ளமாட்டாள். வீர புருஷர்கள், வீர மாதர்கள் இவர்களின்

வீர வாழ்க்கையைப் பற்றிய கதைகளேயே, வீரர்கள் வாய்மூலமாக அவள் கேட்டுக் களிப்பாள்.

ஒருமுறை, போர்க்களம் சென்ற தகப்பனுர் மூன்று நாட்கள் வரையில் திரும்பி வரவில்லே. அவரைப்பற்றிய தகவலும் கிடையாது. சிந்தா ஒரு மலேயடிவாரத்தில் உட்கார்ந்துகொண்டு, எதிரிகளேத் தடுக்க எப்படிக் கோட்டைகள் கட்டுவது, அமைப்பு எவ்விதம் இருக்கவேண்டும் என்று மனத்தில் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தாள். இரவில் தூங்கும்போது கனவில்கூட அதே எண்ணந்தான்.

மூன்ரும் நாள் மாலே, தந்தையின் தலேமையில் போருக்குச் சென்ற சில வீரர்கள் மாத்திரம் திரும்பிவந்தனர். அவர்கள் கண்களில் நீர் வழிந்தது. தன் தந்தையை அதிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சிந்தா அவர் வராததைக் கண்டு ஏமாற்றமும் சந்தேகமுங்கொண்டு வீரர்களின் முகத்தைப் பார்த்தாள். அவர்கள் சோகத்தால், வாய் திறக்க முடியாது, தலேகுனிந்து கண்ணீர் வடித்தனர். சிந்தா ஆர்வத்துடன், “அப்பா எங்கே? நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?” என்று அவர்களேக் கேட்டாள்.

ஆனுல் ஒருவரும் வாய்திறந்து பதில் கூறவில்லே. தந்தை வீர சுவர்க்கம் அடைந்தார் என்பதைச் சிந்தா யூகித்து உணர்ந்தாள். அப்பொழுது சிந்தாவுக்கு வயது பதின்மூன்றுதான். தந்தையின் மரணத்தை அறிந்தாள். ஆனுல் அவள் முகத்தில் கவலேத் தோற்றம் இல்லே. கண்களில் ஒரு சொட்டு நீர்கூட வரவில்லே. மனவருத்தமும் அடையவில்லே. விரக்திகொண்டு பெருமூச்சுக்கூட விடவில்லே. அவள் முகத்தில் வீர ஒளி மட்டும் ஜ்வலித்தது. அவள் வாயிலிருந்தும் வீரச் சிரிப்புத் தோன்றிற்று. புன்முறுவலுடன், “என் தந்தை வீரகதி யடைந்தாரேயானுல் நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? சுத்த வீரர் களுக்கு மரணம் போர்க்களத்தில்தான் நேரிடும். வீரனுக்குப் போர் முனேயில் வீர சுவர்க்கம் அடைவதைக்காட்டிலும் பெரும் பேறு இல்லே. அவர் சுத்த வீரத்திற்கு இதுவே தகுந்த வீரப்பரிசு. அவர் வீரசுவர்க்கப் பதவி அடைந்ததற்காகச் சந்தோஷம் கொண்டாட வேண்டும். கண்ணீர் விட்டுப் பேடியைப்போல் அழக்கூடாது” என்ருள் வீராங்கனே.

வீரர் — ஆயினும், நீங்கள் இனிமேல் எங்கே வசிப்பீர்கள்? உங்களேப் பராமரிப்பது பற்றித்தான் கவலே கொள்ளுகிறேம்.

சிந்தா — (வீரத்துடன்) என்னைப்பற்றி நீங்கள் கொஞ்சமும் கவலைப்படத் தேவையில்லை. நான், வீரத்தந்தையின் குமாரத்தி. அவர் என்னென்ன செய்தாரோ, அவைகளையே நானும் கைக்கொள்ளுவேன். தாய்நாட்டைக் காப்பதற்காகப் போராடி என் தந்தை எதிரிகளின் கையில் உயிர் நீத்தார். நானும் என் தாய் நாட்டுச் சேவைக்குத் தயாராக இருக்கிறேன். நீங்கள் உடனே சென்று நம் படைவீரர்களை யெல்லாம் ஒன்று சேருங்கள். எனக்காக ஒரு குதிரையையும் ஆயுதங்களையும் தயார் செய்யுங்கள். உங்களைப்போன்றே பின்னடையாமல் போர்புரியும் சக்தியை எனக்குக் கடவுள் கொடுப்பார். ஒரு சமயம் நான் புறமுதுகிட்டு ஓடினால், நீங்கள் தயங்காது என்னை ஒரே வெட்டாக வெட்டிக் கொன்று விடுங்கள். இதுவே என் மனவுறுதி; சத்தியப் பிரதிக்கினை. செல்லுங்கள்; படையைத் திரட்டுங்கள். தாமதம் செய்யாதீர்கள்" என்று கட்டளையிட்டாள். சிந்தாவின் இந்த வீர முழக்கத்தைக் கேட்டு மற்ற வீரர்கள் ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தனர். இச் சின்னஞ் சிறுமி எவ்வாறு தன் வீரப் பிரதிக்கினையை நிறைவேற்ற முடியும் என்று சந்தேகித்தனர்.

3

ஐந்து வருடங்கள் கடந்தன. சிந்தா தேவியின் வீரமும் புகழுமே எங்கும் பேச்சாயிருந்தன. எதிரிகளின் கை தளர்ந்தது; கர்வம் குன்றிற்று. அவளுடைய வெற்றி மிக்க வீர உருவம், பாய்ந்துவரும் குண்டுகளுக்கும் அம்புகளுக்கும் முன்னிலையில் நின்று தன் படைவீரர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் புகட்டிக் கொண்டிருக்கும். அவளுடைய வீர உற்சாகத்தையும் வீரப் போர் ஒலியையும் கேட்டு எந்த ஆண் பிள்ளைதான் பின்னடையத் துணிவான்? ஒவ்வொரு வீரனும் இளம் வீரச் சிங்கம்போல் வீராவேசத்துடன் போராடி வெற்றிமாலை புனைந்தான்.

எதிரிகளின் நிலைமையோ இதற்கு மாறாக இருந்தது. சிந்தாவின் வீரப் போர் முறையைக் கண்டு அவர்கள் கலங்கினர். அவள்முன் எந்த வீரன்தான் நிற்கமுடியும்? அக்கோமளாங்கியை எதிர்க்க எந்த ஆண் மகன்தான் துணிவான்? அழகியின் முன்னர் ஆடவர் வீரம் என்ன செய்யும்?

இந்த வீர ரமணியின் வீர மொழிகளைக் கேட்ட ஒவ்வொருவர் மனத்திலும் புத்துணர்ச்சி ஏற்பட்டது. அவள் வீர கர்ஜனை வீர ஆவேசத்தை ஊட்டிற்று. கேவலமான பேடியையும் அது

வீரனுக்கிற்று. அவள் எங்கே சென்ருலும் 'வெற்றி,' 'வெற்றி'-- வெற்றிதான்.

வீரத் தலைவியான சிந்தாவின் கீர்த்தி இமயமலை முதல் குமரி வரையில் பரவிற்று. அவளுடைய சேனையும் புகழ்பெற்றது.

உயிரை அற்பமாகக் கருதும் சுத்த வீரர்களான வண்டுகள் சிந்தாவாகிய இம்மெல்லிய மலரைச் சுற்றி வீர ரீங்காரம் செய்து களித்தன. இவ்வீரர்களுக்குள் ரத்னசிங் என்பவன் ஒருவன். இவர்களோ வாட்போரில் ஒப்பற்ற வீரர்கள். அவள் வாய்திறந்து ஒரு வார்த்தை சொன்னால் அக்கட்டளையை நிறைவேற்ற உயிரையும் கொடுப்பார்கள். சமிக்ஞை செய்தால், எச்சரிக்கையின் கட்டளையை உணர்ந்து அதை நிறைவேற்றத் துள்ளிக் குதித்து எழுவார்கள். ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களைக் கொண்டுவரச் சொன்னாலும், தயங்காமல் முன்னடைவார்கள்.

ரத்னசிங் இவர்களுள் தலை சிறந்தவன். சிந்தா இவனை மனத்தில் காதலித்து வந்தாள். மற்ற வீரர்களைப்போல் ரத்னசிங்கிற்குக் கர்வம் கிடையாது. மற்ற வீரர்கள் தங்கள் தங்கள் வீரப் பிரதாபங்களைக் கதை கதையாகச் சொல்லுவார்கள். தற்புகழ்ச்சியிலேயே நோக்கத்தைக் கழிப்பார்கள். ஆனால் அவர்கள் என்ன செய்தாலும் சிந்தாவுக்காகவே செய்வார்கள். நியமம், அந்தஸ்து இவைகளைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை.

ரத்னசிங்கோ சாந்த சொரூபி. எக்காரியம் செய்தாலும் அடக்கமாகவே செய்து முடிப்பான். தற்புகழ்ச்சி என்பது அவனிடம் கிடையாது. அவன் அஞ்சா நெஞ்சம் படைத்த வீராதி வீரன். சிங்கமே தன்னை எதிர்த்துப் பாய்ந்தபோதிலும் கலங்காத நெஞ்சுத் திடம் கொண்டவன். விநயமும் பணிவும் அவனுக்குத் தனிப்பட்ட வசீகரத்தைக் கொடுத்து வந்த ஆபரணங்கள். மற்றவர்கள் காதலில் பகட்டு மிகுந்திருக்கும். ஆனால் ரத்ன சிங்கின் காதலிலோ உண்மையான அன்பும் தியாகமுமே கலந்திருந்தன. இரவில் மற்றவர்கள் படுத்துத் தூங்குவார்கள். ரத்னசிங்கோ ஒவ்வொரு விநாடியும் விழித்திருந்து தலைவிக்குக் காவல்புரிவான். மற்ற வீரர் ஒவ்வொருவரும், சிந்தா தன்னைத்தான் விரும்புகின்றாள் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தனர். ஆனால் ரத்னசிங்கின் மனத்தில் அம்மாதிரி நம்பிக்கை கிடையாது. ஒரு தலைவி, தனக்குக் கீழுள்ள சிப்பந்தியைக் காதலிப்பாளா என்ற சந்தேகத்தால் அவன் மனம் ஊசலாடிக் கொண்டிருந்தது. அதனால் தன் காதலை எவ்விதத்திலும் அவன் வெளிக்காட்டவே

மாட்டான். அவன் காதல் அவன் இருதயத்திலேயே ஊன்றி வளர்ந்துவந்தது. காதல் காரணமான பொருமையால் வரும் துவேஷமும் பகைமையும் அவனுக்கு இல்லே. அவன் எல்லோருக்கும் நல்லவன் என்றே பெயரெடுத்தான்.

நள்ளிரவுக்குமேல் ஆய்விட்டது. சிந்தா தன் கூடாரத்தில், களைப்புத்தீரத் தூங்கிக்கொண்டிருந்தாள். சேனைகளும் அலுத்துப் படுத்திருந்தனர். இவர்கள் பாளையம் இறங்கியிருந்த இடத்திற்கு எதிர்ப்புறத்தில் அடர்ந்ததொரு காடு இருந்தது. அக்காட்டை அடுத்து எதிரிகளும் படைவீட்டை அமைத்துக் கொண்டு தங்கியிருந்தனர்.

மாலேயில் வெளியில் சென்ற சிந்தா இவ்விஷயத்தை வேவு பார்த்து அறிந்துகொண்டாள். உடனே தன் படைவீட்டை விரைந்து அடைந்தாள். விஷயத்தைப் படைவீரர்களுக்குத் தெரியப்படுத்தி, மறுநாள் காலேயில் போர்புரியத் தயாராக இருக்கும்படி உத்தரவிட்டுப் படுக்கச் சென்ருள்.

தான் வேவு பார்த்துவந்ததை எதிரிகள் அறிந்திருக்க மாட்டார்களெனச் சிந்தா எண்ணிஞள். ஆனல் உண்மை வேறு விதமாக இருந்தது. இவளுடைய படையில் எதிரியின் ஒற்றர்கள் இருப்பதை இவள் தெரிந்துகொள்ளவில்லே. அவ்வொற்றர்கள், இரவோடு இரவாகச் சென்று, சிந்தாவின் நடவடிக்கைகளேத் தங்கள் தலேவனுக்கு அறிவித்துவிட்டனர். சிந்தாவைச் சூதாகக் கொன்ருல்தான் வெற்றிபெற முடியுமெனத் தீர்மானித்த எதிரிகள் அதற்கான இரகசிய ஏற்பாடுகளும் செய்தனர். சிந்தாவின் படையிலிருந்த மூன்று துரோகிகள் இப்படுபாதகக் கொலேயைச் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

சிந்தாவும் அவள் மெய்காப்பு வீரர்களும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அந்த நள்ளிரவில், கொலேபாதகத் துரோகிகளான மூவரும், ஓசைப்படாமல் சிந்தாவின் கூடாரத்தை நாடிவந்தனர். படைவீரர்கள் யாவரும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்ததால் இவர்களுக்கு யாதொரு தடையும் ஏற்படவில்லே. முதலேகளேப் போல், மார்பிஞல் ஊர்ந்தவண்ணம், சிறிதும் ஓசை செய்யாமல் கூடாரத்தை அவர்கள் நெருங்கி வந்துகொண்டிருக்கின்றனர்.

அச்சமயத்தில் ஒரே ஒரு சிப்பாய், கண்விழித்துத் தன் தலேவிக்குக் காவல் இருப்பதை அவர்கள் அறியவில்லே.

அவன்தான் ரத்னசிங். ரத்னசிங் இன்றுதான் இவ்விதம் விழித்திருப்பதாக எண்ணக்கூடாது. ஒவ்வோர் இரவும் இதே மாதிரிதான், மற்றவர்கள் கவலையற்றுத் தூங்கும்போது இவன் கண்விழித்துச் சிந்தாவின் கூடாரத்தின்மீதே கண்ணாக அமர்ந்திருப்பான்.

அக் கொலைபாதகர்கள் நகர்ந்து வருவதால் ஏற்பட்ட சிறு சலசலப்பும் ரத்னசிங்கின் காதிற்கு எட்டிவிட்டது. துடித்து எழுந்து நாலாபக்கமும் பார்த்தான். அக் கொலைபாதகர்களைக் கண்டுவிட்டான். வாளை உருவிக் கையில் வைத்துக்கொண்டான். அவர்களோ மூவர். ஒருவன் தனியாக நின்று அவர்களை வெல்வது கடினந்தான். ஆனல் சப்தம் போட்டாலோ தூக்கக் கலக்கத்திலும், இருட்டிலும் தன் படைவீரர்களே, குழப்பமடைந்து, தங்களுக்குள்ளாகவே, ஒருவரோடொருவர் அடையாளம் தெரியாது, எதிர்த்துச் சண்டை போட்டுக் கொண்டால் பேராபத்தாக முடியுமே என்ற எண்ணமும் அவன் மனத்தில் பட்டது. எனவே, யாது செய்வதென நிச்சயிக்க முடியாது தத்தளித்தான்.

கொலையாளிகளோ தலைவியின் கூடாரத்தை நெருங்கி விட்டனர். யோசிப்பதற்கும் நேரமில்லை. தன் உயிரைக் கொடுத்தாயினும் தலைவியைக் காக்கத் துணிந்தான். உருவிய வாளைக் கையிலேந்தி அம்மூவரையும் நோக்கிப் பாய்ந்தான். எதிரிகளும் எதிர்க்கத் தயாராயினர். ஆனல் ரத்னசிங் அவர்கள் வாளுக்கு அகப்படாமல் தப்பி ஓடினன். ரத்னசிங் படைவீரர்களை எழுப்பிவிடச் செல்வதாக எண்ணிப் படையை எழுப்புமுன் அவனை ஒரே வெட்டாக வெட்டிவிட வேண்டுமென அவர்கள் துரத்தினர். அவன் இவர்கள் வாளுக்கு அகப்படாமலே போக்குக் காட்டிச் சென்று, படைவீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த ஓர் ஒதுக்கான இடத்தை அடைந்ததும் அவர்களை எதிர்த்துப் போராடினன்.

கடும்போர் நடந்தது. சிறிது நேரத்தில் அம்மூவரும் ரத்னசிங்கின் வாளுக்கு இரையாயினர். அவர்கள் இறந்தனர் எனச் சந்தேகமறத் தெரிந்துகொண்டதும் ரத்னசிங்கும் நிலைதளர்ந்து மண்ணில் சாய்ந்தான். மூவரைத் தனித்து நின்று எதிர்த்ததால் அவனும் பலத்த காயங்களை அடைந்தான்.

பொழுது விடிந்தது. சிந்தாவின் படைவீரர்கள் யுத்தத்திற்குத் தயாராயினர். ஆனல் ரத்னசிங்கைக் காணது திகைத்தாள் சிந்தா.

படைவீட்டைச் சுற்றியும் தேடினள். காட்டுக்குள் சற்றுத் தூரத்தில் மரமடர்ந்த இடத்தில் ரத்னசிங், வாளைக் கையில் பிடித்தபடி இரத்த வெள்ளத்தில் கிடந்தான். அவனுக்குச் சமீபத்தில் அந்தத் துரோகிகள் மூவரும் உயிர் இழந்து கிடந்தனர்.

ரத்னசிங்கின் நிலைமையைக் கண்டதும் சிந்தாவின் உள்ளம் பதறிற்று. ஓடிச்சென்று அவன் நிலைமையைக் கவனித்தாள். வெட்டுக் காயத்தால் ஏற்பட்ட இரத்தப் பெருக்கைக் கண்டு மூர்ச்சையுற்றாள்.

தன்னைப் பெற்றுவளர்த்த சொந்தத் தகப்பனார் இறந்த செய்தியைக் கேட்டும் ஒரு சொட்டுக் கண்ணீர் விடாத வீரமங்கையான சிந்தா, இப்போது தாரைதாரையாகக் கண்ணீர் வடித்தாள். ரத்னசிங்கின் சிரசை எடுத்துத் தன் மடிமீது வைத்துக்கொண்டு, தன் இருதயத்தில் கற்பித்துக்கொண்ட ஒரு சுயம்வரத்தில் தன் காதல் வெற்றிமாலையை அவனுக்குச் சூட்டினாள்.

4

ரத்னசிங் படுத்த படுக்கையாக ஒரு மாதத்துக்கு மேல் கிடக்கிறான். சிந்தா, இராப் பகலாகக் கண் விழித்து அவனுக்குச் சிசுருஷை செய்து வந்தாள். இந்த ஒரு மாத காலமாகத் தூக்கமென்பதையே அவள் மறந்தாள். ஒரு விநாடியும், அவனைவிட்டுப் பிரியாமல் பணிவிடை செய்தாள். இதுவரை அவன் கண் திறந்தபாட்டையே காணோம். சிந்தா, தனது பிரஜைகளைப் பற்றியோ, எதிரிகள் முன்னேக்கி வருவதைப்பற்றியோ சிந்திக்கவே இல்லை. தன் உயிரைப்பற்றியும் கவலை கொள்ளவில்லை. ரத்னசிங் பிழைத்தால் போதும் என்ற ஒரே எண்ணத்தில் ஆழ்ந்திருந்தாள்.

மாதக் கடைசியில் ரத்னசிங் சிறிது கண் திறந்து பார்க்கலானான். உடம்பும் சிறிது குணப்பட்டு வந்தது. சிந்தாவின் கவலையும் தணியலாயிற்று.

ரத்னசிங் கட்டிலில் படுத்திருக்கிறான். சிந்தா அவன் பக்கத்தில் அமர்ந்து விசிறிக்கொண்டிருக்கிறாள். அவன் கண் திறந்து சிந்தாவைப் பார்த்தான். முகத்தில் புதிய ஒளி ஒன்று ஜ்வலித்தது. அவன் சிந்தாவைப் பார்த்துப் பலவீனமான குரலில், "விசிறியை என்னிடம் கொடுங்கள். எனக்காகத் தாங்கள் ஏன் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ளவேண்டும்?" என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் சிந்தா அளவற்ற ஆனந்தம் அடைந்தாள். ஒரு மாதத்துக்குமுன் உயிர் போகும் நிலைமையில்

இருந்த ரத்னசிங் இன்று வாய்திறந்து பேசுவது கண்டு ஆனந்தத்தால் பூரித்தாள்.

சிந்தா (அன்பும் மகிழ்ச்சியும் தோன்ற) "பிராண நாதா! இதிலென்ன கஷ்டம்? நாம் சதா கவலையும் கஷ்டமும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறோம். சுகம் என்றால் என்ன என்பதே எனக்குத் தெரியாது" என்று காதல் நிறைந்த கனிமொழியால் கூறினாள்.

"பிராண நாதா" என்ற அவ்வார்த்தை அவன் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கிற்று. அவன் கண்கள் ஜ்வலித்தன. அவன் நரம்புகளில் புதுச் சக்தி ஒன்று பரவிற்று. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கிற்று. இரத்த ஓட்டமின்றித் தளர்ந்திருந்த தோள்கள் புதிய வலிமை கொண்டு பூரித்தன. இந்த ஒரு வார்த்தையின் சக்தியே சக்தி. என்ன மகிழ்ச்சி, எவ்வளவு உற்சாகம்? என்ன பூரிப்பு! இதே நிமிஷத்தில் எதிரி களின் மீது பாய்ந்து அவர்கள் எல்லோரையும் நிர்மூலமாக்கிக் காதலியை மகிழ்விக்கவேண்டுமென்று அவன் உள்ளம் துடித்தது. காதல் மிக்க கடைக்கண் பார்வை, உலகத்தினையே பொருது வெற்றி பெறவும் தூண்டும் என்பது பெரியோர் வாக்கல்லவா?

ரத்னசிங்கின் மறுமலர்ச்சியைக் கண்டு உள்ளூற ஆனந்தம் கொண்டாள் சிந்தா. இதைத் தவிர, தான் உலகில் வேண்டுவது வேறொன்றும் இல்லையென்று மனத்திற்குள் எண்ணிச் சற்று மகிழ்ந்தாள். அந்தத் தியாக வீரன்மீது அளவிலாக் காதல் கொண்டாள். ஆனால் இன்னும் தன் விருப்பம் அனைத்தையும் அவனிடம் கூறவில்லை. ஆனால் "எனக்காகத் தாங்கள் இவ்வளவு கஷ்டம் அனுபவிக்க நேர்ந்ததே!" என்று பச்சாத்தாபம் தோன்ற மொழிந்தாள்.

ரத்னசிங், "கஷ்டப்படாமல் பலன் கிடைக்குமா?" என்று சொல்லிக்கொண்டே மெதுவாக எழுந்து உட்கார முயன்றான். சிந்தா, உடனே தன் மெல்லிய கரங்களால் அவனை மெதுவாகப் பற்றிக்கொண்டு, "இந்த அற்பமானவளுக்காகத் தாங்கள் இந்த முயற்சியைச் செய்யவில்லை. ஏன் பொய் கூறுகிறீர்கள்? என்னுடைய நிலைமையில் வேறு எந்த அபலை இருந்திருந்தாலும் அவளைக் காப்பாற்ற நீங்கள் முயற்சி எடுத்துக்கொண்டுதான் இருப்பீர்கள். நான் என் வாழ்நாள் முழுவதும் பிரம்மசாரிணி யாகவே இருந்துவிடலாமென்று உறுதிகொண்டிருந்தேன். ஆனால், உங்களுடைய உள்ளன்பும், வீரமும் என் உறுதியைக்

குலைத்துவிட்டன. உங்கள் உயிரைப் பொருட்படுத்தாமல் என் உயிரைக் காப்பாற்றிய தீரம் என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது." என்றாள்.

ஆடவர்களின் அழகையும் நாகரிகக் கோலத்தையும் புன்சிரிப்பையும் கண்டு மயங்குபவள் நான் அல்ல. அவ்விதம் செய்வது கௌரவமான செய்கையென்றும் கருதமாட்டேன். அவர்கள் செய்யும் வாலிபக் குறும்பை ஒரு வேடிக்கை யென்றே நான் கருதுவேன். உம்முடைய இதயத்தில்தான் நான் உண்மையான காதலைக் கண்டேன். என் உள்ளமும் உமக்கு அடிமையாயிற்று. நான் தங்கள்பால் அநேக நாட்களாகக் கொண்டிருந்த எண்ணமும் நிறைவேறிற்று" என்று வெட்கத்தாலும் சந்தோஷத்தாலும் தலைகவிழ்ந்தபடி கூறி முடித்தாள்.

5

எங்கும் நிசப்தம். காதலர்கள் உள்ளத்தில் காதல் உணர்ச்சி அலைபோல் எழுந்து ஊசலாடிக்கொண்டிருக்கிறது. சந்திரனின் வெண்ணிலா ஆனந்தமயமாகப் பிரகாசிக்கின்றது. இருவரும் புதுக்காதல் புரிந்து பூரிப்படைகின்றனர்.

இச்சமயத்தில் எதிரிகள் படையெடுத்து வந்துள்ள செய்தியை ஒற்றர்கள் வந்து தெரிவித்தனர். எதிரிகள் என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த வாளைப் பாய்ந்தெடுத்துப் போருக்குச் செல்ல ஆயத்தமானான் ரத்னசிங். சிந்தா, அவனைத் தடுத்து, "இந்தத் தேக ஸ்திதியில் நீங்கள் போகலாகாது. சிப்பாய்களை அனுப்புங்கள். நீங்களே போக வேண்டுமென்று என்ன அவசியம் இருக்கிறது?" என்று காதல் உணர்ச்சியும் கருணையும் ததும்பக் கூறினாள்.

ரத்னசிங் போகத் துணிந்தான். துப்பாக்கியைத் தோளில் வைத்தவண்ணம், "எதிரிகள் சேனை பலமாக இருக்கிறதாம். இதில் என்ன நேரிடுமோ என்று எனக்கே சந்தேகமாய் இருக்கிறது" என்றான்.

சிந்தா — அப்படியானால் நானும் வருகிறேன்.

ரத்ன — நேரம் ஆகிறது. அவர்களோ வெகு துரிதமாக வந்து கொண்டிருக்கின்றனர். நான் ஒருவனே முன்னின்று அவர்களை யெல்லாம் புறமுதுகிட்டு ஓடச் செய்வேன். கடவுள் இக்காதல் இரவை வெற்றி இரவாக்குவாரென நம்புகிறேன்.

சி — ஏனே என் மனத்தில் ஒருவிதமான பயம் ஏற்படுகிறது. தங்களுக்கு விடை கொடுத்தனுப்ப என் மனம் துணியவில்லை.

ர — (அவளுடைய மென்மேனியை அணைத்தபடி) சிந்தா! பயப்பட வேண்டியதில்லை. நான் நாளைக் காலையிலேயே வெற்றியுடன் திரும்பிவருவேன்.

சி — (தன் கணவனை இறுகத் தழுவியபடி) நீங்கள் திரும்பி வருவதற்கு அதிக நாளாகுமென என் மனத்தில் படுகிறது. நீங்கள் வரும்வரையில் என் உடல் இங்கேயும், உள்ளம் உங்களிடமும் தான் இருக்கும். சந்தோஷத்துடன் சென்று வாருங்கள். ஆனுல், தினசரி எனக்குத் தகவல் தெரிவித்து வரவேண்டும். இன்னொரு விஷயத்தையும் கவனிக்கவேண்டும். எதிரிகளைக் கண்ணெதிரில் கண்ட மாத்திரத்தில் அவர்கள்மீது பாய்ந்து விடுவது உங்கள் குணமாக இருக்கிறது. ஆனுல் சமய சந்தர்ப்பத்தை யோசித்தறிந்து எதிர்க்க வேண்டும் என்பதே என் கோரிக்கை. சரி, சந்தோஷத்துடன் செல்லுங்கள். வெற்றி மாலை சூடித் திரும்புங்கள்.

இவ்வாறு கூறிக் கண்ணீர் பெருகத் தன் காதலனுக்கு விடைதந்து போர்க்களம் அனுப்புவித்தாள்.

சிந்தாவின் நெஞ்சம் படபடவென அடித்துக்கொண்டது. வெற்றி வீரத்தால் மகிழ்ச்சி யடைந்துவந்த இதயம், இன்று காதல் இன்பத்தை நாடிற்று. எதிரிகள் படையில் சிங்கவேறு போல் பாய்ந்து பொருத உள்ளம் இன்று பயத்தால் நடுங்கிற்று.

கணவன் குதிரையேறி யுத்தத்திற்குச் செல்வதை, வாசலில் நின்றபடியே கண்ணுக்கு மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்தாள் சிந்தா. அவள் இதயத்தை ஒருவித பயம் பீடிக்கத் தொடங்கிற்று. தன் காதலனுக்கு யாதொரு ஆபத்தும் வராமல் காப்பாற்றவேண்டும் எனக் கடவுளை அவள் துதித்தாள். குன்றின்மீது ஏறி, ரத்னசிங்கின் உருவம் மறையும் மட்டும் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் அந்தத் தூரக் காட்சியும் மறைந்தது. அவள் கண்கள் கலங்கின. நெஞ்சம் திகில் கொண்டு துடித்தது. குன்றின்மேலிருந்து இறங்கினுள். ஏதோ ஓர் அபூர்வ வஸ்துவை இழந்துவிட்டவள் போல், கவலையும் மனக் கஷ்டமும் அடைந்தாள். அன்றிரவு முழுவதும் தேம்பித் தேம்பி அழுது கண்ணீர் பெருக்கிய வண்ணம் படுக்கையிற் புரண்டுகொண்டே இருந்தாள்.

6

ரத்னசிங்கின் படையில் நூறு வீரர்கள்தான் உண்டு. ஆனால் அனைவரும் உயிருக்குத் துணிந்த தீரர்கள்; வாள்வீரர்கள். அஞ்சா நெஞ்சமும் ரோஷமும் கொண்ட இளங்காளைகள். அவர்கள் வீர கீதங்களைப் பாடிக்கொண்டே உற்சாகத்துடன் முன்னேறிச் சென்றனர். இவர்கள் பாடிய வீர கீதத்தின் எதிரொலி, மலைகளிலும் கானகத்திலும் கேட்டது. இவர்கள் ஊர்ந்து சென்ற போர்க் குதிரைகளும், இவர்களுடைய பாட்டுக்குக் கால்களால் தாளம் போட்டபடி விரைந்து சென்றன. இம்மாதிரியே இரவு முழுவதும் பிரயாணம் செய்தனர்.

சூரியனும் தன் பொன்கதிர்களை வீரர்கள்மீது வீசி வரவேற்றான். எதிரிகளின் படைவீடும் சற்றுத் தூரத்தில் தென்பட்டது.

ரத்னசிங் தலை குனிந்த வண்ணம் முன்சென்று கொண்டிருக்கிறான். ஆனால் அவன் ஞாபகமெல்லாம் தன்னுடைய ஆருயிர்க் காதலியிடமே இருந்தது. குதிரைதான் அவனைச் சுமந்து கொண்டு சென்றது என்றும் கூறலாம். யுத்தகளத்திற்குச் செல்ல மனம் தடுமாறியது. அவன் வாழ்க்கையிலேயே இப்படிக் கலங்குவது இதுதான் முதல் தடவை. சண்டையின் முடிவு என்ன ஆகுமோ என எண்ணி அவன் மனங் கலங்கினான். அவன் காதலியின் சந்திரன் போன்ற திருமுக தரிசனத்தை விட்டுச் செல்ல நேர்ந்தது அவன் உள்ளத்தைப் புண்படுத்திற்று. அவளுடைய வசீகரக் காதல் பார்வை அவனைப் பின்னுக்கு இழுப்பதுபோல் தோன்றிற்று. திரும்பி வீடு சென்று காதல் இன்பத்தை அனுபவிக்கலாமா என்றும் எண்ணி அவன் மனம் தடுமாறிற்று. அவன் சிந்தை முழுவதையும் சிந்தாவின் எண்ணமே கவர்ந்திருந்தது. போரைப்பற்றி எண்ணவும் அங்கே இடமில்லை.

யுத்த பேரிகை முழங்கும் சப்தம் கேட்ட ஒரு சிப்பாய் தன் தலைவனை நெருங்கி, "தலைவரே! எதிரிகளுக்குச் சமீபத்தில் வந்து விட்டோம். அவர்கள் பெரும் படைக்கு முன்னர் நம் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. தங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டபோதுதான் ரத்னசிங், தன் சுய அறிவைப் பெற்றான். ரத்னசிங்கும் எதிரிகள் படையைப் பார்த்தான். அது பிரம்மாண்டமாக அவன் கண்ணுக்குத் தோற்றிற்று. தன் சிப்பாய் களுக்கு எவ்விதமான உத்தரவு தருவது என்பதைப்பற்றி யோசிக்கவே அவன் மனோநிலை இடந்தரவில்லை. சிப்பாய் கேட்ட

கேள்விக்கு ரத்னசிங் "ஆம், என்ன செய்வது?" என்று அச் சிப்பாயையே திருப்பிக் கேட்டான்.

சிப்பாய் — போர் தொடுக்க வேண்டியதுதான்.

ரத்னசிங் — உங்கள் இஷ்டம்போலவே செய்வோம். ஆனல் அவர்கள் அநேகம் பேர் இருக்கின்றனரே! யோசித்துத்தான் செய்யவேண்டியிருக்கிறது.

சிப் — எண்ணிக்கையில் அவர்கள் அதிகம் இருந்தால் என்ன? இதைவிடப் பிரம்மாண்டமான சேனைகளை யெல்லாம் முறியடித்திருக்கிறோமே!

ர — உண்மைதான். ஆனல் இப்பொழுது இவர்களை எதிர்ப்பது நெருப்பில் குதிப்பதுபோல் இருக்குமென்று என் மனத்தில் படுகிறது. சுலபமாக வெற்றி பெறுவது சந்தேகந் தான்.

சிப் — தலைவ! தாங்கள் கூறுவது என்றுமில்லாத நூதன பாஷையாக இருக்கிறதே! சிப்பாய்களின் கடமையே நெருப்பில் குதிப்பதுதானே? உடனே யுத்தம் தொடங்கத் தங்கள் உத்தரவை எதிர்பார்க்கிறோம். உத்தரவு கொடுங்கள். மற்றவைகளை நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம்.

ர — இரவெல்லாம் பிரயாணம் செய்து களைப்படைந் திருப்பீர்கள். சற்று நேரம் இளைப்பாறுவது நல்லது.

சிப் — நாம் நெருங்கி வந்துவிட்ட விஷயம் எதிரிகள் காதில் பட்டால், நாம்தான் அதிகக் கஷ்டப்பட வேண்டிவரும். காலதாமதம் செய்வது ஆபத்து. உடனே உத்தரவு கொடுங்கள்.

இவ்வாறு வற்புறுத்தவே ரத்னசிங்கும் வேண்டா வெறுப்பாய் உத்தரவு கொடுத்தான். படைவீரர்களும் அம்புபோல் பாய்ந்து எதிரிகளை நெருங்கினர். எதிரிகளோ, முன் ஜாக்கிரதை யாகக் கோட்டை கொத்தளப் பாதுகாப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர்.

போரைத் தொடங்க ரத்னசிங்கின் உத்தரவுக்காக ரத்னசிங் இருந்த இடத்தை நோக்கினர். ஆனல் அங்கே அவனைக் காணோம். எங்கே சென்றானோ, அவனுக்கு என்ன நேர்ந்ததோ என்று யாருக்கும் தெரியாது.

ரத்னசிங் எங்கேயாவது மறைந்திருந்து எதிரிகளைப் பிடிக்கச் சாதனங்களை ஆராயச் சென்றிருப்பான் என்றும், தங்களைக்

கைவிடமாட்டான் என்றும் வீரர்கள் எண்ணி அவன் வரவை எதிர்நோக்கிச் சற்றுத் தாமதித்தனர். ஆனல் இவர்கள் நெருங்கி வந்துவிட்டதை அறிந்த எதிரிகள் போரை ஆரம்பித்தனர். இவ்வீரர்களோ, "ரத்னசிங், ரத்னசிங்! போர் ஆரம்பமாகி விட்டது. எதிரிகள் நெருங்கிவிட்டனர். இந்தச் சமயத்தில் எங்கே சென்றீர்? சீக்கிரம் உத்தரவு தாருங்கள். ஏன் பேசாமல் இருக்கிறீர்? ஆபத்து நெருங்கிவிட்டது. உடனே வந்து எங்களுக்கு வீர உற்சாகத்தைக் கொடுத்துப் போரை நடத்துங்கள்" என்று கூவி யழைத்தனர். ஆனல் ரத்னசிங்கோ வரவே இல்லை.

இரண்டு சேனைகளும் கைகலந்து கடும்போர் புரிந்தன. ரத்னசிங்கின் வீரர்கள் நூறு பேர்களும், ஆளுக்குப் பத்து வீரர்களை எதிர்த்துத் தீவிரப் போர் புரிகின்றனர். இது சாதாரணச் சண்டையல்ல. உயிரைப் பந்தயம் கட்டி விளையாடும் ஒரு சூதாட்டம் போன்றிருந்தது. இந்த வீரசிங்கங்கள் மதயானைக் கூட்டத்தில் புகுந்த சிங்கங்கள்போல் தாக்கினர். எதிர்ப் படைத் தலைவனையும் வெட்டி வீழ்த்தி நெருங்கிச் சென்றனர். ஆனல் எதிர்ப் படையிலோ, ஆயிரத்துக்கு மேற்பட்ட வீரர்கள் இருந்தனர். அதனல் சிங் படையில் அநேகர் உயிர் நீத்தனர். இருந்தும் அவர்கள் வீரம் குன்றவில்லை. ரோஷமும் ஆவேசமும் கொண்டு தாக்கினர். எதிரிகளின் யானைகள்மீது பாய்ந்து ஏறி அவைகளின்மீதிருந்த வில் வீரர்களையும் வெட்டிச் சாய்த்தனர். ஆனல் எதிரிகளோ இவர்களைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக இருந்தனர். அந்தப் பெருஞ் சேனை வெள்ளத்தைக் கொஞ்சம் பேரான இவர்கள் எப்படிச் சமாளிக்க முடியும்? இவர்களுடைய வீரப் போர்முறையைக் கண்டு, பகை வீரர்களும் ஆச்சரியமுற்றுப் புகழத் தொடங்கினர். 'சபாஷ்! சபாஷ்!' என்று சந்தோஷ ஆரவாரம் செய்தனர். இந்த நூறு வீரர்களின் போர்முறை ஒப்பற்றதெனக் கொண்டாடினர். ஆனல் அவர்களால் இப்போது எதிரிகளை முறியடித்து வெற்றிபெற முடியவில்லை. ஒருமணி நேரத்திற்குள் போர் முடிந்தது. நூறு வீரர்களும் மடிந்தனர். எதிரிகள் வெற்றி முழக்கம் செய்தனர்.

ரத்னசிங் போரில் மடிந்து விழுந்திருப்பானென எண்ணி எதிரிகள் பிணக்குவியலைத் தேடினர். ஆனல் அவன் சடலத்தைக் காணவில்லை. அவன் உயிரோடு இருந்தால் மறுபடியும் ஆபத்து வருவது நிச்சயம் என்றெண்ணி, எதிரிகள் மலைக் குகைகளிலும்

காடுகளிலும் அவனைத் தேடினர். ஆனால் அவன் அகப்படவே இல்லை.

7

சிந்தா, தன் காதலனின் பிரிவை ஆற்றாது வருந்திக் கொண்டிருக்கிறாள். அவள் உடலும் உள்ளமும் தளர்ந்து பலவீனமாகத் தோற்றுகிறாள். பிறந்ததுமுதல் இதுவரையில் அவள் துன்பங்களுக்கு இடையிலேயே வாழ்ந்து வந்தாள். ஒவ்வொரு விநாடியும் கஷ்டங்களையும் ஆபத்துக்களையும் எதிர்பார்க்க வேண்டியவளாக இருந்தாள். பாவம்! சின்னஞ் சிறு குழந்தையாக இருக்கும்போதே தாய் இறந்தாள். பின் தந்தை யுடன் காடு காடாக அலைந்தாள். குன்றுகளிலும் குகைகளிலும் காடுகளிலும் வசித்துவந்தாள். பின் தந்தையையும் இழந்தாள். அன்றுமுதல், பயங்கரப் போர்களில் ஈடுபட்டு உழன்றாள். ஒரு விநாடிகூட மன அமைதியும் சுகமும் அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை. சிந்தாவின் சிந்தை சதா ஆகுலத்திலேயே கொதித்துக் கொண்டிருந்தது.

இந்த ஆகுலத்திற்கு மருந்தைத் திருமணத்தால் அடையலா மென அவள் எண்ணியும் இருக்கலாம். அதனால்தான் வீரப் போர் வாழ்க்கையை நீத்து, காதல் உலகில் பிரவேசித்தாள் போலும்! அவள் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது பரிசுத்தக் காதல். அக்காதல் இன்பத்தை அனுபவிக்க ஆரம்பித்ததும், காதலனைப் போர்ச்சேவை அழைத்துச் சென்றது. சிந்தாவின் சிந்தை முழுவதும், தன் காதல் கணவன்பால் சென்று லயித்திருந்தது. அவள் உள்ளத்தில் நவநவமான எண்ணங்கள் எல்லாம் துளிர்க்கலாயின. தன் இல்லற வாழ்க்கையை நடத்துவதற்கான பற்பல திட்டங்களைப்பற்றி மானசீக ஆராய்ச்சி செய்தாள். தன் கணவன் வீர வெற்றிகொண்டு குதூகலத்துடன் திரும்பிவந்ததும், ஒரு கிராமத்திற்குச் சென்று வசித்து, புதுமை இல்லற வாழ்க்கையை நடத்தி, காதலன் மகிழப் பதிசேவை செய்து உத்தமியெனப் பேரெடுக்க வேண்டுமென்றும், இதுவரையில் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன, போர் போர் என்ற வார்த்தையைக்கூட இனிக் காதாலும் கேட்கக் கூடாதென்றும் அவள் தீர்மானித்தாள்.

இப்போதுதான் அவள் உள்ளத்தில் பெண்மை உணர்ச்சி மலர்கிறது.

மாலைநேரம் ஆகிவிட்டது. பகலவன் தோல்வியடைந்தவனைப் போல் தலைகுனிந்து மலையிடையில் மறைந்தான். அப்போது சிப்பாய் ஒருவன், கிழிந்த ஆடையுடனும் அலங்கோலத் தோற்றத்துடனும் வந்து சிந்தாவின்முன் நின்றான். அவன் தோற்றத்தைக் கண்டதும் சிந்தா இடிவிழுந்தவள்போல் திகில் கொண்டாள். ஒரு விநாடி உணர்ச்சியற்று உட்கார்ந்துவிட்டாள். பின்பு உணர்ச்சி பெற்று, "என்ன! என்ன இது! யாராவது பிழைத்தார்களா?" என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

வீரன் — ஒருவரும் இல்லை!

"ஒருவரும் இல்லையா? ஒருவரும் இல்லையா?" என்று அலறினாள் சிந்தா.

வீ — மராட்டியர்கள் இங்கேயும் வந்துகொண்டிருக்கின்றனர்.

சி — மிகச் சமீபத்தில் வந்துவிட்டார்களா?

வீ — ஆம்.

சி — சரி, நான் சதியாகவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்.

வீ — நாங்கள் தோற்றுப் போவோமென்று அதைரியம் கொள்ள வேண்டாம். எதிரிகளை எதிர்த்துச் சின்னாபின்னப் படுத்தி முறியடிக்கத் தயாராக இருக்கிறோம்.

சி — நீங்கள் உங்கள் இஷ்டப்பிரகாரம் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள். என் கடமையை நான் எண்ணியபடியே செய்வேன்.

வீ — கோட்டைக்குள்ளிருந்தபடியே ஒரு மாத காலம் தளராமல் யுத்தம் செய்யலாம்.

சி — சரி. சென்று சண்டை செய்யுங்கள். நான் இனிமேல் எந்த யுத்தத்திலும் பிரவேசிக்கப்போவதில்லை.

8

மராட்டியர் வெற்றிப் போர்முரசு கொட்டி முன்னேறி வருகின்றனர். இங்கே கோட்டைக்குள், சதிச் சடங்குகளுக்கான முன் ஏற்பாடுகள் யாவும் தயாராக இருக்கின்றன. ஓரிடத்தில் மங்கள அலங்காரங்களுடன் கட்டைகள் அடுக்கப்பட்டிருக்கின்றன. சுமங்கலிப் பெண்களும் பல ஆண்களும் நீராடித்

திலகமிட்டுப் பக்தியுடன் நிற்கின்றனர். மந்திரோச்சாடனங்களுடன் சிதையில் நெருப்பு மூட்டப்பட்டது. சிந்தா, பதினுன்கு விதமான மங்கள அலங்காரம் செய்துகொண்டு, முகத்தில் புன்சிரிப்பும் திருப்தியும் தவழ, சிதையை வலம்வந்து, மங்கள கோஷங்கள் ஒலிக்க அக்கினிப் பிரவேசமானுள்.

சதியைத் தரிசிப்பது கிடைத்தற்கரிய பெரும் புண்ணியமெனக் கருதி அவ்வூரார் முழுவதும் அங்கேவந்து சூழ்ந்து நின்றனர். சிந்தா அடையப்போகும் ஜோதி சொரூபத்தைக் காண, யாவரும் அவளையே கண்கொட்டாமல் பார்த்து நின்றனர். எதிரிகள் கோட்டைக்குள் நுழைவதைக்கூட அவர்கள் கவனிக்கவில்லை. சிலர் இக்காட்சியின் கொடுமையை - ஒரு பெண் உயிருடன் தீயில் பொசுக்கப்படுவதைக் - காணச் சகியாது, துக்கமும் வருத்தமும் கொண்டு கண்ணீர் வடித்தனர். சிலர், சிந்தா அடையப்போகும் தெய்விக ஜோதி நிலைமையை எண்ணி ஆநந்தக் கண்ணீர் வடித்தனர்.

அச்சமயத்தில் ஒரு குதிரை வெகு வேகமாக அந்த ஸ்தலத்தை நோக்கி வந்தது. எல்லோரும் அத்திக்கை நோக்கினர். ரத்னசிங்! ரத்னசிங்கைக் கண்டதும் யாவரும் திகைத்து நின்றனர்.

ரத்னசிங் தன் காதலியின் நிலைமையைக் கண்டான். குதிரையிலிருந்து குதித்து ஓடிச் சிதையை நெருங்கி, "சிந்தா! சிந்தா! நான் உயிருடன் இருக்கிறேன். நான் உயிருடன் இருக்கிறேன். நீ என்ன காரியம் செய்யத் துணிந்தாய்?" என்று பதட்டத்துடன் கூவிக்கொண்டே சிதையைக் கலைக்க யத்தனித்தான்.

நெருப்போ சுற்றிலும் பரவி ஜ்வாலைவிட்டு எரிகிறது. சிந்தாவைச் சூழ்ந்துகொண்டது; சேலையிலும் பற்றிவிட்டது. ரத்னசிங் எரியும் நெருப்பில் பாய்ந்து தன் காதலியைக் காப்பாற்ற முயற்சிக்கிருன். மற்ற ஜனங்களும் விறகுக் கட்டைகளைப் பிடுங்கி எறிந்து சதி நெருப்பை அவிக்க யத்தனித்தனர். ஆனுல் சிந்தாவோ, தன் புருஷன் முகத்தை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. தன் முகத்தை அப்புறம் திருப்பிக் கொண்டாள். தன்னைத் தொட வந்த ரத்னசிங்கைத் தன் கையால் தடுத்து, 'விலகிப் போ' என்று மாத்திரம் சொன்னுள்.

ரத்னசிங்:—ஹா! என் காதலி! உனக்கு என்ன நேர்ந்தது? உன் புருஷனுன என்னை, ஏன் கண்ணெடுத்தும் பார்க்க

மறுக்கிருய்? இதோ நான் - உன் கணவன் - உயிருடன்தான் இருக்கிறேன். உண்மையாக நான்தான் உன் காதலன் ரத்னசிங்!

சிந்தா — உம்முடைய பேர் ரத்னசிங்தான். ஆனுல் நீங்கள் என்னுடைய ரத்னசிங் அல்ல.

ர — இல்லே, இல்லே. உன் ரத்னசிங்தான். உன் அடிமை - உன் அன்பிற்குரியவன் - உன் நாதன்.

சி — என் காதல் கணவனுர் வீரசுவர்க்கம் அடைந்து விட்டார்.

ர — ஐயோ! எப்படி உனக்கு நம்பிக்கை வரும்படி செய்வேன்? எப்படி அக்கினியை அவிப்பேன்? காதலி! நான் உன்னுல் காதலிக்கப்பட்ட கணவன் ரத்னசிங்தான். இதோ கண் கொண்டு பார். இன்னுமா தெரியவில்லே?

அச்சமயம் அக்கினிஜ்வாலே சிந்தாவின் முகத்தையும் தகிக்கத் தொடங்கிற்று.

சிந்தா (உரத்த குரலில்), "நன்ருகத் தெரிகிறது. நீ என் ரத்னசிங் அல்ல. என் காதல் ரத்னசிங், உண்மை வீரன். அவன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள - தன் அற்ப உடலேக் காத்துக் கொள்ள - க்ஷத்திரிய தருமத்தை ஒருகாலும் கைவிடமாட்டான். நான் எந்தக் காதலனுக்கு அடிமைப்பட்டேனே, அவன் இன்று வீர சுவர்க்கத்தில் பெருமையுடன் இருக்கிருன். நீ அந்த வீர ஆத்மாவின் பெயருக்கு ஏன் கேடு தேடுகிருய்? அவர் சுத்த வீர ரஜபுத்திரர். அவர் எக்காலத்தும் போர் முனேயில் புறமுதுகு காட்டுபவர் அல்ல" என்று கூறியதும், அக்கினி அவள் தலேக்கு மேல் ஓங்கி வளர்ந்து அவ்வீரச் சதியைத் தன்னுள் அடக்கிக் கொண்டது.

அவ் வீர மங்கை, தன் சுத்த வீரத்தன்மையையும், கற்பின் மகிமையையும், காதலின் மகத்துவத்தையும் உலகுக்குக் காட்டும் புனித ஜோதியாக என்றென்றும் பிரகாசிக்கலானுள்.

சிறிது நேரத்தில், அவ்வீர மங்கையின் புனித தேகம் அக்கினியுடன் ஒன்ருகக் கலந்து மறைந்தது.

ரத்னசிங் இக்காட்சியைக் கண்டு சற்று நேரம் உணர்வற்றுத் திகைத்து நின்ருன். பிறகு திடீரெனச் சிதையில் பாய்ந்து தன் காதலியுடன் ஒன்ருனுன்.

௨. தூர்க்கா தேவியின் கோயில்

துர்க்கா தேவியின் கோயில்

1

வ்ரஜநாத பாபு சட்டப் புத்தகம் படிப்பதில் மூழ்கி யிருந்தார். அப்பொழுது அவருடைய குழந்தைகள் சண்டை செய்வதில் முனைந்திருந்தனர். "என்னுடைய பொம்மைகளை முன்னு பிடுங்கிக்கொண்டான்" என்று சியாமா அழுது கொண்டிருந்தாள். "என் மிட்டாய்களைச் சியாமா சாப்பிட்டு விட்டாள்" என்று முன்னு அழுதுகொண்டிருந்தான்.

வ்ரஜநாத பாபுவுக்குக் கோபம் பொங்கிற்று. "இந்தத் துஷ்டப் பிள்ளைகளை அப்புறப்படுத்துகிருயா அல்லது, நானே இவர்களுக்குப் பாடம் கற்பிக்கட்டுமா?" என்று தன் மனைவியாகிய பாமாவிடம் அவர் கேட்டார்.

பாமா அடுப்பு மூட்டிக்கொண்டிருந்தாள். "அடேயப்பா, இன்னுமா படிப்பு? அந்தி யிருட்டாகியும் கூடவா? கொஞ்ச நேரமாவது இளைப்பாறக் கூடாதா?" என்று தன் கணவரான வ்ரஜநாத ப்ாபுவிடம் அவள் கூறினள்.

வ்ரஜ — ராஜாத்திக்கு எழுந்திருக்கக்கூட முடியவில்லையோ? உட்கார்ந்துகொண்டே சட்டம் பேசுகிருயே! நான் எழுந்துவந்து யாரையாவது கையால் தொட்டால் அப்போது, "குழந்தையைக் கொல்லுகிறீர்களே" என்று அலறிக்கொண்டு ஓடிவருவாய்.

பாமா — நான் உட்கார்ந்துகொண்டோ அல்லது தூங்கிக் கொண்டோ இருக்கவில்லை. பையனுக்குக் கொஞ்சம் விளையாட்டுக்

காட்டினுல் என்ன குறைந்துவிடும்? நானேதான் அவர்களைக் கவனிக்கவேண்டுமென்று எங்கே எழுதியிருக்கிறது?

வ்ரஜநாத பாபு ஒரு பதிலும் கொடுக்காமல் புத்தகத்தை மூடி விட்டு நாற்காலியில் சாய்ந்துகொண்டார். கோபம் மேன்மேலும் அதிகரித்தது. பாபு சட்ட வாதத்தில் நிபுணர்தான். ஆனுல் மனைவியின் நியாய வாதத்திற்கு எதிர்வாதம் செய்ய அவரால் முடியவில்லை. பாபு திடீரென எழுந்து வாதிப் பிரதிவாதிகளான ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வோர் அறை கொடுத்துவிட்டுச் சட்டப் புத்தகத்தைக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு 'காலேஜ் பார்க்' வழியாக நடக்கலானுர்.

2

அது ஆடி மாதம். மேகக் கூட்டங்களின் ஆட்சி ஓங்கியிருந்தது. பல நாட்களாகக் கவிழ்ந்திருந்த மேகமானது அன்று சற்றுக் கலைந்தது. மாலைச் சூரியனின் பொன்னிற வெயில் படவே பசுமையான புற்றரைகள் பூமிதேவியின் தங்க மயமான போர்வைகள்போல் ஜ்வலித்தன. இளம் தென்றல் காற்று 'ஜில்'லென்று வீசிற்று. பறவைகள் கிளைகளில் உட்கார்ந்துகொண்டு இன்னிசை பாடியவண்ணம் ஊஞ்சலாடின. பார்க்கில் போடப் பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து, பாபு புத்தகத்தைத் திறந்தார். புத்தகத்தைக் காட்டிலும் இயற்கைக் காட்சியே அவர் மனத்தைக் கவர்ந்தது. ஆகாயத்தில் காணப்படும் அற்புதங்களையும், செடி கொடிகளின் இயற்கை அழகையும், எதிரே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களையும் பார்த்து ரஸித்துக்கொண்டிருந்தார் பாபு. அவரது பார்வை நாற்புறமும் சஞ்சரித்து இயற்கை அழகின் இன்பத்தை அநுபவித்தது. அப்பொழுது புற்றரையில் கிடந்த காகிதப் பொட்டலம் ஒன்று அவர் கண்ணில் பட்டது. "இதில் என்ன இருக்கிறது பார்ப்போம்" என்று அவர் எண்ணினுர். அவரது மனச்சாட்சி, "உனக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? அது அங்கேயே இருக்கட்டுமே" என்று மனத்தோடு சொல்லிற்று. ஆனுல் ஆசை என்கின்ற மாயை, பொட்டலத்தை எடுக்கும்படி தூண்டிற்று. மனத்திற்குள்ளேயே மாயையுடன் போராட்டம் நடந்தது. கடைசியில் மாயைதான் வென்ருள். "ஒரு வேளை யாராவது கைதவறிப் போட்டிருக்கலாம், பார்ப்போம்" என்று எண்ணி, பாபு பொட்டலத்தை எடுத்துப் பிரித்தார். அதில் எட்டுப் பவுன்கள் இருந்தன. பாபுவின் குதூகலத்திற்கு அளவேயில்லை! அவருடைய மனம் படபடவெனத்

துடிக்க ஆரம்பித்தது. அந்த எட்டுப் பவுன்களையும் கையில் வைத்துக்கொண்டு யோசிக்கலானார்: 'இவைகளை நாம் என்ன செய்வது? நாம் இவைகளை இங்கேயே வைத்துவிட்டால் வேறு யார் கண்ணிலாவது பட்டு அவர்கள் எடுத்துக்கொண்டு சென்று விடுவார்கள். எனவே, இங்கே வைப்பது உசிதம் இல்லை. இதைப் போலீஸாரிடம் ஒப்புவித்துச் சொந்தக்காரரிடம் சேர்ப்பதே மேல். போக்கடித்தவர்கள் போலீஸ் தாணுவில் வந்து வாங்கிச் செல்லட்டும். ஒரு சமயம் சொந்தக்காரர்களுக்குக் கிடைக்காவிட்டாலும், அது என்மேல் குற்றம் இல்லை. நான் என் கடமையை நிறைவேற்றினவனாவேன்.'

மறுபடியும் திரை மறைவில் நின்று மாயை மந்திரம் போடலானாள். பாபு தாம் யோசித்தபடி போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்லவில்லை. மாயையின் தூண்டுதலால் மனம் மாறுபட்டது. "இந்நேரம் வீட்டில் சாப்பாடு தயாராய் இருக்கும். இந்தப் பவுன்களை பாமாவிடம் காட்டிச் சிறிது தமாஷ் செய்து பார்ப்போம். நாளைக்குக் கண்டிப்பாய்த் தாணுவில் ஒப்புவித்து விடுவோம்" என்று தீர்மானித்த பாபு வீடு நோக்கிப் புறப்பட்டார்.

பாபு தம் வீட்டிற்குச் சென்று பவுன்களை மனைவியிடம் காட்டினார். பாமா, பவுன்களைக் கண்டதும் அளவற்ற ஆனந்தம் கொண்டாள்.

"ஏது?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"என்னுடையது" என்றார் பாபு.

"போங்கள், கேலிப் பேச்சு வேண்டாம். எங்கே கிடைத்தது?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

"கீழே கிடந்தது" என்றார் பாபு.

"பொய்! பொய்!! சுத்தப் பொய்!!! உங்களுக்கு ஏது இவ்வளவு பாக்கியம்? உண்மையாகவேயா கிடைத்தது? எங்கே? யாருடையது? சொல்லமாட்டீர்களா?" என்றாள் பாமா.

"உண்மையாகவே பார்க்கில் கண்டெடுத்தேன்" என்றார் பாபு.

"ஆணையாகச் சொல்லுங்கள்" என்று பாமா ஆர்வத்துடன் கேட்டாள்.

"ஆம். ஆணையாகச் சொல்லுகிறேன். நான் ஏன் பொய் சொல்லவேண்டும்?" என்று பாபு கூறினார்.

உடனே பாமா, பவுன்களைப் பாபுவிடமிருந்து பிடுங்க யத்தனித்தாள்.

"ஏன் பிடுங்குகிறாய்?" என்றார் பாபு.

"கொடுங்கள், நான் அவைகளைப் பெட்டியில் பத்திரமாய் வைத்துக்கொள்ளுகிறேன்" என்றாள் பாமா.

"அதிருக்கட்டும், இதைத் தாணாவில் கொண்டுபோய் ஒப்புவிக்கவேண்டும்" என்று பாபு கூறவே, பாமாவின் முகம் வாடிற்று.

"கீழே கிடந்த செல்வத்தை, ஏன் தாணாவில் ஒப்புவிக்க வேண்டும்?" என்றாள் பாமா.

பாபு — பின் என்ன? இந்த எட்டுப் பவுன்களுக்காக நாம் நம் மனச்சாட்சியையே இழப்பதா?

பாமா — சரி, உங்கள் இஷ்டம். காலையில் போனால் என்ன? இப்பொழுது போனால் வருவதற்கு நேரமாகிவிடுமே.

இப்பொழுது போனாலும் ஒன்றுதான்; காலையில் போனாலும் ஒன்றுதான் என்று நிச்சயம் செய்துகொண்டு, பாபு பவுன்களைத் தம் பெட்டியில் வைத்துப் பூட்டினார். பிறகு இருவரும் சாப்பிட்டு விட்டுப் படுத்துக்கொண்டனர். பாமா புன்முறுவலுடன் தன் நாயகனை நோக்கி, "கிடைத்த செல்வத்தை ஏன் கைவிட வேண்டும்? 'நெக்லஸ்' மீது எனக்கு ரொம்ப நாளாகவே ஆசை. எத்தனைதரம் உங்களிடம் நெக்லஸ் ஒன்று வாங்கிக் கொடுக்கும் படியாக மன்றாடியிருக்கிறேன். இப்பொழுதோ பவுன் இருக்கிறது. செய்துகொண்டால் என்ன?" என்றாள்.

இப்பொழுது மாயை பாமாவின் மனத்தில் புகுந்து வேலை செய்கிறது போலும்! பாபு, பாமாவின் வார்த்தைக்கு இடம் கொடுக்கவில்லை. மறுத்து, "நெக்லஸ் ஆசைக்காக மானத்தை இழந்து கழுத்தில் சுருக்குப் போட்டுக்கொண்டா சாவது? வெட்கமில்லாமல், வேறு மனிதனின் பவுனிலா செய்து போட்டுக் கொள்வது?" என்று இடித்துக் கூறினார்.

3

வ்ரஜநாத பாபு அலகாபாத் ஹைக்கோர்ட்டில் ஒரு மொழி பெயர்ப்பாளர் (Translator); சட்ட கலாசாலை ஆராய்ச்சிப் பிரசங்கியுங்கூட. அவருக்குப் பதவி மோகம் அதிகம் கிடையாது.

சதாகாலமும் உண்மைக்கே உழைப்பார். எப்பொழுதும் சட்ட ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருப்பார்.

தமது கோர்ட்டு வேலே தவறிப் போனலும் பரவாயில்லே; எப்படியாவது பவுனைப் போலீஸ் தாணவில் ஒப்புவிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு பாபு, அவசர அவசரமாக வெளி அறையில் ஆடைகள் அணிந்துகொண்டிருந்தார். அப்பொழுது கோரேலால் முன்ஷி என்ற நண்பர் ஒருவர் பாபுவின் வீட்டிற்கு வந்துசேர்ந்தார். அவர் பாபுவிடம் தமது குடும்பக் கவலேயைப்பற்றி ராமாயணம்போல் விஸ்தாரமாய்க் கூறினர். "ஒரு வேலேயிலும் புத்தி செல்லமாட்டேன் என்கிறது. நீங்கள் இந்த ஊருக்குப் பெரிய மனிதர். இந்தச் சமயத்தில் கொஞ்சம் உதவி செய்ய வேண்டும். அதிகம் இல்லே; ஒரு முப்பது ரூபாய் கொடுத்தால் போதும். எப்படியாவது எனது இச்சமயக் கஷ்டத்தைச் சமாளித்துக் கொள்வேன். இன்று தேதி முப்பது. நாளேக்குச் சாயந்திரம் சம்பளம் கிடைத்துவிடும். நாளேக்கே கண்டிப்பாய்த் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்" என்று அழாத குறையாகக் கேட்டார்.

உண்மையில் பாபு பெரிய பணக்காரர் அன்று. ஆனல் பெருந்தன்மை வாய்ந்தவர். நண்பர்களுக்கு உதவி செய்வதில் மிகுந்த பிரியம் உள்ளவர். தமது பெருந்தன்மையைக் காட்டும் பொருட்டுச் சிறியதொரு காரியத்திற்கும் தம்மிடமுள்ள பெரிய பொருளேயும் தானம் செய்துவிடுவார். ஆனல் பாமா இந்தப் படாடோபத்தை வெறுத்தாள். பலமுறை ஜாடையாகப் பாபுவைக் கண்டித்தும் வந்தாள். இந்த மாதிரியான சம்பவம் ஏற்படும் பொழுதெல்லாம் வீட்டில் கொஞ்ச நேரமாவது சண்டை ஏற்பட்டுத்தான் தீரும். பகட்டுக்காகவும், பெருமைக்காகவும் எல்லாவற்றையும் வாரிக் கொடுப்பதில் பயன் இல்லேயென்று கருதினள் பாமா. பாபுவை அடியோடு மறுத்துப் பேசுவதற்கும் பாமா பயப்படுவாள். என்ன இருந்தபோதிலும் புருஷன் அல்லவா?

கோரேலால் முன்ஷியைச் சிறிது நேரம் உட்காரும்படி சொல்லிவிட்டுப் பாபு வீட்டிற்குள்ளே சென்றார். பாமாவை நெருங்கி, "உன்னிடம் முப்பது ரூபாய் இருக்கிறதா? கோரேலால் கேட்கிறார். ரொம்ப அவசரமாம்" என்று சற்றுத் தயக்கத்தோடு கேட்டார்.

பாமா — (கோபக் குரலுடன்) என்னிடம் பணமும் இல்லே, காசும் இல்லே.

பாபு — இருக்கும் பார்! தெரியும்........நீ என்னை ஏமாற்று கிருய்!

பாமா — நானு ஏமாற்றுகிறேன்? ஆமாம், இது என் தலைவிதி. நிஜத்தைச் சொன்னுல் நம்பமாட்டீர்கள்.

பாபு — சரி, நான் அவரிடம் இல்லையென்று சொல்லி விடட்டுமா?

பாமா — வீட்டில் பணம் இல்லை என்று சொல்லிவிடுங்கள். உங்களால் சொல்ல முடியுமானுல் சொல்லுங்கள். இல்லையானுல் நான் திரை மறைவில் நின்றுகொண்டு சொல்லிவிடுகிறேன்.

பாபு — சொல்லிவிடுவது கஷ்டமான காரியம் அல்ல. ஆனுல் வைத்துக்கொண்டே அவன் நம்மை ஏமாற்றுகிருன், கொடுக்க மனம் இல்லை என்று கோரேலால் நினைத்துக் கொள்வார்.

பாமா — நினைத்தால் நினைத்துக் கொள்ளட்டுமே. அதனுல் என்ன மூழ்கிப்போய்விடும்?

பாபு — பாமா! என்னிடம் வந்து, உதவி செய்யும்படி கேட்பவர்களிடம் வெடுக்கென்று பேச எனக்கு மனம் வராது. கோரேலால் என் பழைய நண்பர். இரவு பகலாக என்னுடன் இருந்து வேண்டிய உதவிகளைச் செய்தவர். அவரிடத்தில் இல்லை என்று எவ்வாறு சொல்லுவது?

பாமா — நல்லது, உங்கள் இஷ்டம்போலச் செய்யுங்கள். கடைசியாகச் சொல்லுகிறேன். என்னிடத்தில் பணம் இல்லை! இல்லை!! இல்லை!!!

பாபுவின் மனம் மிகவும் புண்பட்டது. எப்படியாவது நண்பருக்கு உதவி செய்யவேண்டுமென்று மனம் தூண்டிற்று. உடனே பெட்டியைத் திறந்து இரண்டு பவுன்களை எடுத்தார். கோரேலாலைப் பார்த்து, "இது ஒருவனுடைய அடமானப் பொருள். நான் இப்பொழுதே கொண்டுபோய் அவனிடம் கொடுக்கலாம் என்று எண்ணி யிருந்தேன். பாவம்! தங்களைப் பார்த்தால் மிகவும் துக்கமாய் இருக்கிறது. இதைத் தாங்கள் இப்பொழுது பெற்றுக்கொள்ளுங்கள். நான் நாளைக்கு அவனிடம் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டும். நாளைக்குக் கொடுக்கா விட்டால் நான் முகத்தை வெளியே காட்டவே முடியாது" என்று கூறிப் பவுனைக் கொடுத்தார்.

4

முதல் தேதி. மாலை நேரம். பாபு வாசற்படியில் உட்கார்ந்து கொண்டு கோரேலால் முன்ஷியின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

மணி ஐந்து அடித்து விட்டது. அதுவரையிலும் முன்ஷி வரவில்லை. பாபுவின் கண்கள் பாதையையே கவனித்துக் கொண்டிருந்தன. பாபுவின் கையில் ஒரு கடிதம் இருந்தது. அவரது மனம் கடிதத்தைப் படிக்க இடங் கொடுக்கவில்லை. ஒவ்வொரு நிமிஷமும் பாதையையே கவனித்து வந்தார். "இன்று சம்பளம் வாங்கும் தினம். ஆதலால்தான் வருவதற்கு நேரமாகிறது. எப்படியும் வந்து விடுவார்" என்று நினைத்தார். மணி ஆறும் அடித்து விட்டது. கோரேலால் வருவதாகக் காணோம். கோர்ட்டில் வேலை செய்பவர்கள் எல்லோரும் வந்து விட்டனர். வழியில் வருபவர்கள் எல்லோரையும், பாபு பார்த்துப் பார்த்து ஏமாந்துவிட்டார். பாதையில் யாரோ ஒரு மனிதர் வந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்து, "அதோ வருகிறார். கண்டிப்பாய் அவரேதான், அதே சட்டை, அதே குல்லாய், அதே நடை, இந்தப் பக்கமேதான் வந்துகொண்டிருக்கிறார். அவரேதான்! இவ்வளவு நேரமாயிற்று வருவதற்கு!" என்று பலவாறாக எண்ணினார்.

அம் மனிதர் பக்கத்தில் வந்தவுடன்தான் தெரியவந்தது, அவர் கோரேலால் அல்லவென்று. பாபுவின் மனம் வருந்திற்று. தாம் உட்கார்ந்திருந்த நாற்காலியினின்றும் எழுந்து வாசற்படியில் நின்று கொண்டு வருபவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். ஆனால் கோரேலால் முன்ஷி வந்தபாடில்லை. முன்ஷி வீட்டிற்குப் போகலாமா என்று பாபு எண்ணினார். பாதையிலும் அடியெடுத்து வைத்தார். ஆனால் அவர் மனம் துடித்தது. கோரேலாலிடம் சென்று பணம் கேட்டுக் கிடைக்காவிட்டால், 'இந்த அல்பத்திற்காக வீடு தேடி வந்துவிட்டான்' என்று நினைப்பாரே. ஆதலால், நாம் ஏன் அங்கே போகவேண்டும் என்று யோசனை செய்தார். இதற்குள்ளாக வேறு ஒரு மனிதன் பாதையில் வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டு அவன்தான் முன்ஷியோ என்று நினைத்தார். மறுபடியும் அதே ஏமாற்றம்.

பிறகு கவலையுடன் தாழ்வாரத்திற்குள் சென்று இளைப்பாறினார். இவ்வளவு நேரம் வரையில் ஏன் வரவில்லை? என்ன? இவ்வளவு நேரமாகியும் கச்சேரியினின்றும் வந்திருக்க மாட்டாரா? ஒருபோதும் அப்படியிருக்காது. அவருடைய ஆபீஸில்

வேலை செய்பவர்கள் எல்லோரும் சீக்கிரமே வந்துவிட்டனர். அவர் நாளைக்குக் கொடுப்போம் என்று எண்ணியிருக்க வேண்டும். இல்லையானால் வேண்டுமென்றே கொடுக்கக்கூடாது என்று நிச்சயம் செய்திருக்கவேண்டும். இந்த இரண்டில் ஒன்றுதான் நடந்திருக்கவேண்டும். அந்தச் சமயம் அவருக்குப் பணம் தேவையாயிருந்தது. பல்லைக்காட்டிக் கெஞ்சி வாங்கிச் சென்றார். இந்தச் சமயத்தில் நமக்குப் பணம் தேவை. நாம்தான் அவரைக் கெஞ்சிக் கேட்கவேண்டும். முன்ஷி வீட்டிற்கு யாரையாவது அனுப்பினால் என்ன? யாரை அனுப்புவது? முன்னுவை அனுப்பலாம். பாதையில்தான் வீடு இருக்கிறது—என்று நினைத்துக்கொண்டு அறைக்குள் சென்றார். விளக்கை ஏற்றித் தன் பையனிடம் பணம் கொடுத்தனுப்ப வேண்டுமென்று முன்ஷிக்குக் கடிதம் எழுதலானார். கடிதத்தில் கவனம் செல்லவில்லை. கதவையே கவனித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது எதிர்பாரா வண்ணம் யாருடைய கால் சப்தமோ காதிற்பட்டது. உடனே கடிதத்தைப் புத்தகத்தில் வைத்துவிட்டுத் தாழ்வாரத்திற்குச் சென்றார். ஆனால் அங்கே பக்கத்து வீட்டுக்காரன் ஒருவன் ஒரு தந்தியைப் படித்துக் காட்டும்படி கேட்க வந்திருந்தான்.

“ஐயா, இப்போது ஓய்வு இல்லை. கொஞ்சம் பொறுத்து வாருங்கள்” என்றார் பாபு.

“தந்தி என்றதும் வீட்டில் என்னவோ ஏதோ என்று திகில் கொண்டிருக்கின்றனர். லேசாக ஒரு பார்வை பார்த்து விடுங்களேன்” என்றான் பக்கத்து வீட்டுக்காரன்.

பாபு தந்தியை வாங்கி ஒரு முறை பார்த்துவிட்டு, “பணம் வந்து சேரவில்லையாம்” என்று சொல்லிக் கொடுத்துவிட்டார். அவன் குழப்பத்தோடு “யார் அனுப்பினது, சொல்லுங்களேன்?” என்றான்.

பாபு அருவருப்போடு தந்தியை எறிந்து விட்டு, “இப்பொழுது எனக்கு நேரம் இல்லை” என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

மணி எட்டு அடித்தது. இரவும் ஆகிவிட்டது. ‘இந்த இருட்டில் முன்னு தனியாகப் போக முடியாது. நான்தான் போகவேண்டும். நான் போனால் அவர் ஏதாவது நினைத்துக் கொள்வாரே. நினைத்துக் கொண்டால்தான் என்ன? கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்பதில் குற்றம் என்ன இருக்கிறது? பணத்தைக் கொடுத்துவிடுங்கள் என்று கண்டித்துக் கேட்டுவிட

வேண்டியதுதான். நாணயம் கெட்டவனிடம் நாணயம் கெட்ட முறையில்தான் நடந்து கொள்ளவேண்டும். இந்த மாதிரி நடத்தை யுள்ளவனிடம் நான் சம்பந்தம் வைத்துக்கொண்டதே முட்டாள்தனம்' என்று பலவாறாக நினைத்துக்கொண்டே மனைவியிடம் சென்று, "ஓர் அவசரகாரியமாய் வெளியே போகிறேன். கதவைத் தாளிட்டுக்கொள்" என்று கூறிவிட்டு, முன்ஷியைப் பார்க்க வெளியே கிளம்பினார். செல்ல மனது வந்தது. ஆனால் கால்களோ தயங்கித் தயங்கிச் சென்றன. முன்ஷியின் வீடு வெகுதூரத்தில் காணப்பட்டது. 'அங்கே சென்று அவரிடம் எப்படிப் பணம் கேட்பது?' என்று பலவாறாக யோசனை செய்தார். "நாம் சென்றவுடன், 'இந்தா பணம். தாமதமானதற்கு மன்னிக்கவேண்டும்' என்று சொல்லிப் பணத்தைக் கொடுத்துவிட்டால் நமக்குத்தானே அவமானம்? அப்படிக் கொடுக்காவிட்டால் 'பணத்தைக் கொடுங்கள்' என்று எப்படித் தயை தாக்ஷண்யமின்றிக் கேட்பது? ரூபாயைப்பற்றி ஏன் பேசவேண்டும்? வீட்டில் மனைவிக்கு வயிற்றுவலி. உங்களிடத்தில் ஏதாவது மருந்து இருந்தால் கொடுங்கள் என்று கேட்போம். இப்படிப் பேசினால் வந்த உண்மையைக் கண்டு பிடித்துவிடுவார். நாம் ஏன் இவ்வளவு கஷ்டப்படவேண்டும்? நாம் போனவுடனே எதற்கு வந்திருக்கிறான் என்று தெரிந்து கொள்வார்" என்று பலவாறாக எண்ணிக்கொண்டே பாபு, முன்ஷியின் வீட்டை நோக்கி நடந்து சென்றார்.

சமுத்திரத்தில் அலைகள் பலவாறாக அடித்தபோதிலும் படகு எவ்வாறு கடைசியில் கரைக்கு வந்துசேருகிறதோ, அதேபோல பாபு பலவாறாக எண்ணிக்கொண்டே முன்ஷியின் வீட்டை நோக்கி நடந்தார். முன்ஷியின் வீடு வந்துவிட்டது. கதவுகள் தாளிடப்பட்டிருந்தன. பாபு அவரைக் கூப்பிடச் சங்கோசப் பட்டார். வீட்டில் அனைவரும் சாப்பிட்டுப் படுத்திருப்பார்கள்; முன்ஷியைக் கூப்பிடுவோமா வேண்டாமா என்று தயங்கி நின்றார். சிறிது துணிவுடன் உள்ளே என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஒட்டுக் கேட்டார். இருட்டானதால் ஒருவரும் பார்த்துவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கை பாபுவுக்கு இருந்தது. உள்ளே மெதுவாகப் பேசிக் கொண்டிருக்கும் சப்தம் கேட்டது. அப்பொழுது ஒரு பெண், முன்ஷியிடம் "பணம் வாங்கியோ மூன்று மாதம் ஆகிவிட்டது. செலவும் செய்துவிட்டீர்கள். எப்படி அவரிடம் திருப்பிக் கொடுக்க முடியும்?" என்றாள்.

“என்ன! இது தெரியாதா? கொடுத்தால் போகிறது இன்னும் மூன்று மாதத்திற்குள்” என்ருர் முன்ஷி.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும், பாபுவின் முகத்தில் கரிபூசினதைப்போல் ஆகிவிட்டது. சோர்வும் களைப்பும் அடைந்த வனைப்போல் அங்கிருந்து புறப்பட்டுத் தள்ளாடித் தள்ளாடி வீடு வந்துசேர்ந்தார்.

5

பாபு இரவு முழுவதும் தூக்கமின்றிப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார். முன்ஷியின்பேரில் அளவு கடந்த கோபம். ‘எந்த ஏழையின் பணமோ? எவ்வாறு தவிப்பானே! நடந்தது நடந்துவிட்டது. இப்பொழுது வருத்தப்பட்டு என்ன பயன்?’ என்றெல்லாம் பலவாருக யோசனை செய்தார். ‘இவ்வளவு பணம் நமக்கு எங்கே கிடைக்கும்? முன்னமேயே கொடுக்க மறுத்திருக்க வேண்டும். இவ்வளவு பணத்தைச் சம்பளத்தில் எடுக்கவும் வழியில்லை. ஐந்து, பத்தாக இருந்தாலும் எப்படியாவது சரிசெய்துகொள்ள இடமிருக்கும். முப்பது ரூபாய் அல்லவா? அப்பா! யாரிடத்தில் சென்று நாம் கடன் வாங்குவது? எனக்கு யார் கொடுப்பார்கள்? இதுவரையில் யாரிடமும் கடன் வாங்கியதில்லையே? வாங்குவதற்குச் சந்தர்ப்பமும் ஏற்படவில்லை. கடன் தரும் நண்பர்களும் எனக்கு இல்லையே. இருக்கும் நண்பர்களும் என்னையே கடன் கேட்டுத் தொந்தரவு செய்கிருர்கள். எல்லோரும் முன்ஷியைப்போன்ற ஆசாமிகள்தாம்! சிலநாள் கோர்ட்டிற்குச் செல்லாமல் மொழி பெயர்க்கும் வேலையில் ஈடுபட்டால் ஒரு சமயம் பணம் கிடைக்கும். ஆனல் ஒரு மாதம் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டும். இப்பொழுதோ சாதாரண மொழிபெயர்ப்பாளர்கள் மலிந்து கிடக்கின்றனர். என்னமோ அதிர்ஷ்டந்தான் வேண்டும். ஆ! கடவுளே! நீதான் என்னை ஏமாற்றினுய்! எந்த ஜன்மத்தில் செய்த பிழைக்காக வஞ்சம் தீர்க்க என்னை இவ்வாறு வாட்டுகிருய்?’ என்று எண்ணித் தவிக்கலானர்.

மறுதினமே பணம் தேடும்கவலை அவரை உடும்புபோல் பற்றிக் கொண்டது. தீவிர முயற்சியை மேற்கொண்டார். சாயந்திரம் கோர்ட்டிலிருந்து வந்தவுடன் நள்ளிரவுவரையில் எழுதுவதே வேலை. சில சமயத்தில் பாபு தூங்குவதற்கு இரவு ஒரு மணி, இரண்டு மணியும் ஆகிவிடும். உடம்பிற்கு அதிக வலி ஏற்பட்டால் கட்டிலில் படுத்துச் சிறிது நேரம் களைப்பாறுவார்.

கஷ்டப்பட்டு உழைக்கும் அனுபவம் பாபுவுக்கு இல்லை. இப்பொழுதுதான் கஷ்டம் என்னும் துறையில் கால் வைத்திருக்கிறார். இவ்வாறு தொடர்ச்சியாகப் பல நாள் தூக்கம் கெட்டமையால் பாபுவின் உடம்பு அசௌக்கியம் அடைந்தது. பாபுவின் ஓயா உழைப்பும், நோய் அவஸ்தையும் பாமாவிற்குச் சங்கடத்தை உண்டாக்கின. பாமா, பல தடவை நயத்தாலும் பயத்தாலும் மன்றாடினாள். சில சமயம் சிடுசிடுப்புக் காட்டி, "உங்களைப்போல் இப்படி நாலுபேர் இருந்தால் உலகம் கெட்டுக் குட்டிச்சுவராய்விடும். உடம்பு என்னத்திற்காகும்? பெரிய தவ யோகி ஆகவேண்டியதுதான். கொஞ்சமாவது ஓய்வெடுத்துக் கொண்டால் என்ன?" என்பாள்.

இவ்வாறு மூன்று வாரங்கள் கழிந்தன. கையில் இருபத்தைந்து ரூபாய் கிடைத்தது. பாபுவுக்குச் சிறிது தைரியம் உண்டாயிற்று. இருபத்தோராம் நாள் வந்தது. பாபுவுக்கு அபாரமான காய்ச்சல் வந்துவிட்டது. மூன்று நாள் வரையிலும் காய்ச்சல் இறங்கினபாட்டைக் காணோம். லீவு எடுத்துக் கொண்டார். படுக்கைத் தெய்வமாக மாறிவிட்டார். பித்த குணமும் ஜன்னி தோஷமும் உண்டாயின. கண்டபடி பிதற்றலானார். பாமாவிற்குத் திகிலும் பயமும் உண்டாயின. அவள் மனத்தில் விபரீத எண்ணங்கள் தோன்றலாயின. பணத்தை இழந்தவன் சாபமோவென்றும் பயந்தாள். சில சமயங்களில் பாபுவுக்குப் பித்தம் அதிகம் ஏற்பட்டு உளறுவார். பாமா பயந்துகொண்டு வெளியிலுங்கூட ஓடிவிடுவாள். ஒரு வாரம் வரையில் ஜுரம் விடவில்லை. பல மருந்துகள் கொடுத்துப் பார்த்தார்கள். சொஸ்தமாகவில்லை. பணத்தை இழந்தவன்தான் ஏதோ சூனிய மந்திரம் செய்திருப்பான் என்று பாமா நிச்சயமாக நம்பத் தொடங்கினாள். இனி மருந்தை நம்பிப் பயன் இல்லை. கடவுளே கதி என்று நிச்சயித்தாள். கஷ்டம் வந்த காலத்தில்தானே மனிதர்கள் கடவுளை நினைக்கிறார்கள். பாமா ஜன்மாஷ்டமி, நவராத்திரி முதலிய விரதங்களைக்கூட ஒழுங்காக அனுஷ்டிப்ப தில்லை. ஆனால் இப்பொழுதோ நவராத்திரி விரதத்தை முறைப் பிரகாரம் அனுஷ்டிக்கத் தொடங்கினாள்.

இன்று எட்டாம் நாள். நேரம் அதிகாலை. பாமா கணவனுக்கு மருந்து கொடுத்துவிட்டு, இரண்டு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு துர்க்கா தேவியைப் பூஜிக்கக் கோயிலுக்குச் சென்றாள். அவள் இருதயத்தில் கடவுளிடம் பரிபூர்ண பக்தி நிறைந்திருந்தது. கோயிலின் பிராகாரத்தை அடைந்தாள். அங்கே வேதியர் துர்க்கா

தேவியின் தோத்திர மந்திரங்களை ஓதிக்கொண்டிருந்தனர். கோயிலின் உட்புறத்தே சென்ருள். துர்க்கா தேவியின் உருவம் ஜகஜ்ஜோதியாய் ஜொலித்துக்கொண்டிருந்தது. பவித்திரம் என்ற நிழல் அங்கே படிந்திருக்கிறது. இந்த ஜோதித் தோற்றத்தைப் பாமா கண்கொண்டு பார்க்க முடியவில்லை. அவளுடைய மனத்தில் உள்ள பரிபூரண உண்மையான பக்தியால் மிகவும் பயந்தாள்; நடுங்கினுள். கண்களை மூடிக்கொண்டு மண்டியிட்டு அடிபணிந்து கைகூப்பி இரக்கத் தொனியில், "தேவி! என்மேல் கிருபை செய்" என்று வேண்டினுள். பாமாவிற்கு, தன்னைக் கண்டு தேவி புன் முறுவல் செய்வதைப்போல் தோன்றிற்று. தேவியின் கண்களி னின்றும் வீசும் ஒளி தன் உள்ளத்தில் படிவதாகப் பாமா நினைத்தாள். அப்பொழுது தேவியின் திருவாயினின்றும், "பிறர் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடு" என்ற சப்தம் கேட்பது போல், பாமாவுக்கு ஓர் உள்ளுணர்ச்சி உண்டாயிற்று. உடனே பாமா எழுந்து உட்கார்ந்தாள். கண்களில் பரிசுத்த பக்தி நிறைந்த ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று.

அப்பொழுது வேறு ஒரு ஸ்திரீ அங்கே வந்து சேர்ந்தாள். அவளுடைய வாடிய முகத்தின் இருபுறமும் நீண்டு அடர்ந்த கேசம் அலங்கோலமாகத் தொங்கிக் கொண்டிருந்தது. உடம்பில் ஒரே ஒரு வெண்மையான சேலை அணிந்திருந்தாள். கையில் வளையலைத் தவிர வேறு ஆபரணம் இல்லை. துக்கமே உருவெடுத்து வந்தாற் போல் தோன்றினுள். அவள் தேவியின் முன்னிலையில் குனிந்து, முந்தானையைக் கையில் ஏந்திய வண்ணமாக, "யார் என்னுடைய செல்வத்தை எடுத்தார்களோ அவர்கள் அடியோடு நாசமாய்ப் போகட்டும்" என்று சபித்தாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே பாமா நடுங்கினுள். இச் சொற்கள் பாமாவின் உள்ளத்தில் கூரிய அம்பைப்போல் தைத்தன. என்ன செய்வாள் பாவம்! தேவியைக் கருணையுடன் நோக்கினுள். பாமாவின் இருதயத்திலிருந்தும், கோயில், மண்டபம், ஸ்தம்பம், மரம், தேவியின் வாய் முதலிய பல இடங்களிலிருந்தும், "பிறர் சொத்தைத் திருப்பிக் கொடுத்துவிடு. இல்லையானுல், நீ அடியோடு அழிந்துவிடுவாய்" என்ற வார்த்தைகள் ஒலித்தன. பாமா மிகவும் பயப்பட்டாள்.

பாமா அம் மங்கையை நெருங்கி, "ஏன் அம்மா! உன் செல்வத்தை யாராவது எடுத்துக் கொண்டார்களா?" என்று கேட்டாள். சமுத்திரத்தில் விழுந்து கஷ்டப்படுவோனுக்குத்

துரும்பு கைக்குக் கிடைத்தால் எப்படி இருக்குமோ, அதைப் போன்ற மனோபாவத்துடன் இருந்த அம்மங்கை பாமாவை நோக்கினாள். நமது கஷ்டத்தை இவள் எப்படித் தீர்க்கமுடியும் என்று நினைத்தாள். ஆனாலும் "ஆம், அம்மா!" என்றாள்.

"எத்தனை நாள் ஆயிற்று?"

"ஒன்றரை மாதம் ஆகிவிட்டது."

"எத்தனை ரூபாய்?"

"நூற்றிருபது ரூபாய்."

"எப்படிக் காணாமல் போயிற்று?"

"எங்கே விழுந்தது என்று தெரியாது. என் புருஷன் பரலோகம் அடைந்து அனேக வருஷங்களாயின. இப்பொழுது எனக்கு அரசாங்கத்தினின்றும் அறுபது ரூபாய் உபகாரச் சம்பளம் (பென்ஷன்) கிடைக்கிறது. இந்த இரண்டு மாதப் பென்ஷனைக் கஜானாவிலிருந்து வாங்கிவந்தேன். அப்பொழுது எங்கேயோ நழுவிவிட்டது. அவை எட்டு முழுப் பவுன்கள்."

"உனக்கு அவைகள் கிடைத்தால் என்ன செய்வாய்?"

"கிடைத்தால் அதில் உனக்கு ஐம்பது ரூபாய் கொடுத்து விடுகிறேன்."

"என்ன? இவ்வளவுதானா? பணத்தைத் தவிர வேறு ஏதாவது கொடுக்க முடியுமா? இன்று பணம் இருக்கும். நாளைக்குப் போய்விடும்."

"அம்மா! என்னிடத்தில் கொடுக்கக்கூடிய பொருள் வேறு என்ன இருக்கிறது? நான் உயிருடன் இருக்கும்வரை உன்னை வாழ்த்திக்கொண்டே இருப்பேன்."

"ஒருத்தியை இன்னொருத்தி இப்பாழும் உலகில் வாழ்த்திப் பயன் என்ன? வேறு ஏதாவது கொடுங்கள்."

"என்னிடத்தில் வேறு என்ன இருக்கிறது?"

"என்னுடைய கணவன் சீக்காய் இருக்கிறார். அவர் சுகமடையும்படி ஆசீர்வாதம் செய்யுங்கள். நான் உங்களுக்குப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்."

"என்ன? பணம் அவருக்கா கிடைத்தது? எனக்கு இவ்விஷயம் தெரியாதே. பாவம், நான் ஏன் அவரைச்

சபித்தேன்?" என்று கருணையுடன், "உன் கணவருக்கு நன்மை உண்டாகட்டும்" என்று வேண்டினாள்.

பாமா தேவியை அனுதாபத்துடன் பார்த்தாள். தேவியின் கண்களில் அன்பின் ஒளி மின்னிற்று. "செல்வாய்! உனக்கு நன்மை உண்டாகும்" என்று தேவி தன் உளத்தோடு கூறுவதைப்போல் ஓர் உணர்ச்சி பாமாவுக்கு ஏற்பட்டது. உடனே பாமா அம்மங்கையிடம், "இன்று மாலை என் கணவருடன் உங்கள் வீட்டிற்கு வந்து உங்கள் பணத்தைக் கொடுக்கிறேன். என் கணவருக்கு நன்மை ஏற்படுமானால் அதுவே போதுமானது. தாங்கள் இன்று என் கணவனை வாழ்த்தி ஆசீர்வதித்ததற்கு என் வாழ்நாள் உள்ளவரை நான் தங்களை மறக்கவே மாட்டேன்" என்று அன்புடன் கூறி விடை பெற்று, பாமா தனது வீட்டிற்குச் சென்றாள். அம்மங்கை துளசியும் அவ்விடத்தினின்றும் தன் இல்லத்தை நோக்கிப் புறப்பட்டாள்.

6

மாலை நேரம். பாமா தன் கணவனை ஜட்காவில் வைத்துத் துளசியின் வீட்டிற்குச் செல்கிறாள். இவ்வளவு நாளாகப் பாபு, இராப் பகலாக மொழிபெயர்ப்பு வேலையில் சம்பாதித்த செல்வ மெல்லாம், டாக்டர்களுக்கும், மருந்துக்குமாகச் செலவாய் விட்டது. பாமாவிடமோ வேறு பணம் இல்லை. எவ்வாறு துளசிக்குப் பணத்தைக் கொடுப்பாள்? வேறு வழி ஒன்றும் இல்லை. உடனே பக்கத்து வீட்டிற்குச் சென்று தங்கத்தால் செய்யப்பட்ட விலையுயர்ந்த தனது லோலக்கைக் குறைந்த விலைக்கு விற்றுக் கொஞ்சம் பணம் பெற்றுகொண்டாள். தன் புருஷனைக் காட்டிலும் லோலக்கு என்ன அவ்வளவு மதிப்புடையதா? தன் புருஷன்தானே வாங்கிக்கொடுத்தது? பாமா, லோலக் வாங்கும் பொழுது அடைந்த சந்தோஷத்தைக் காட்டிலும், இன்று அதை விற்கும்பொழுது அளவில்லாச் சந்தோஷம் அடைந்தாள். அவள் எட்டுப் பவுன்களைத் தன் கணவரிடம் காட்டினாள். அவைகளைக் கண்டதும் பாபு அளவிலா மகிழ்ச்சி யடைந்தார். அம்மகிழ்ச்சியை முகத்தில் காட்ட அப் பலவீன உடம்பில் ரத்த ஓட்டமில்லை. அன்று தம் கையாலேயே பவுன்களைச் சொந்தக் காரரிடம் ஒப்புவிக்கப் போகிறோம் என்ற மனப்பூர்வமான சந்தோஷம் அவர் கண்களில் ஜொலித்தது. அதரத்தில் ஆனந்தம் தாண்டவமாடிற்று. கன்னங்களில் ஒரு புதிய மினுமினுப்புத்

தோன்றியது. பாபுவின் ஒவ்வோர் அங்கமும் புத்துயிர் பெற்றுப் புன்னகை புரிந்தன. அப்பொழுது அவர் பெற்ற ஆனந்தம் கேவலம் பஞ்சேந்திரியங்கள் பெறும் ஆனந்தமன்று, ஆத்மானந்தம். அப்பொழுது அவர் பெற்ற ஆனந்தம் வெட்கத்தால் உள்ளே மறைந்து கிடக்கும் ஆனந்தம் அன்று; கர்வத்தால் தலை நிமிர்ந்து நிற்கும் ஆனந்தம்.

பாபுவை ஜட்காவில் வைத்துக்கொண்டு பாமா துளசி வீட்டிற்குச் சென்றாள். துளசியின் வீடு ஒரு சந்தில் இருந்தது. சந்தில் ஜட்கா செல்ல முடியாது. ஆதலால் பாபு வண்டியிலிருந்து இறங்கி பாமாவின் கையைப் பிடித்துக்கொண்டு துளசியின் வீட்டை அடைந்தார்.

பாபு பவுன்களைத் துளசியின் கையில் அன்புடன் கொடுத்தார். துளசி ஆர்வத்துடன் அவைகளைப் பெற்றுக்கொண்டு, "உனக்கு நன்மை உண்டாகட்டும்" என்று ஆசீர்வதித்தாள்.

வாடியிருந்த துளசியின் வதனம் மழை பெய்தவுடன் தளிர்க்கும் செடி கொடிகளின் தளிர்போலத் தள தள வென்று மலர்ந்தது. விசனத்தால் ஒடுங்கியிருந்த அங்கம் விரிந்தது. துளசியின் சுருங்கின தோல் விரிந்தது. காயகற்ப சிகிச்சை பெற்றவளைப்போல் அவள் புத்துடல் பெற்றாள்.

பிறகு பாபு தம் மனைவியுடன் வீட்டிற்குச் சென்றார். அங்கே கோரேலால் முன்ஷி ஏற்கெனவே பாபுவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இதைக் கண்டதும், பாபுவுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று.

"உடம்பு எவ்வாறு இருக்கிறது?" என்று முன்ஷி கேட்டார்.

பாபு—சுகமாக இருக்கிறது.

முன்ஷி—என்னை மன்னிக்க வேண்டும். பணத்தைத் திருப்பிக்கொடுப்பதற்கு இவ்வளவு நாள் ஆனதற்கு நான் மிகவும் வருந்துகிறேன். முதல் தேதியே கொடுத்திருப்பேன். ஆனால் ஊரிலிருந்து ஓர் அவசரமான கடிதம் வந்தது. ஆதலால் மூன்று மாதம் லீவு எடுத்துக்கொண்டு ஊருக்குப் போய்விட்டேன். அங்கே நடந்த ஆபத்தான கதைகளைச் சொன்னால் முடிவே அடையாது. விடிய விடியச் சொன்னாலும் முடியாது. தங்களுக்கு உடம்பு சௌகரியமில்லையென்று இன்றுதான் கேள்விப்பட்டேன்.

தங்களைப் பார்த்துவிட்டு வரலாம் என்று ஓடோடியும் வருகிறேன். இந்தாருங்கள் பணம். இதைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

பாபுவின் கோபம் சாந்தம் அடைந்தது. அன்புள்ள வார்த்தைகளிலும் விநயத்திலும் எவ்வளவு சக்தி இருக்கிறது!

பாபு—காய்ச்சல் இருந்தது உண்மைதான். ஆனால் குணமடைந்து விட்டது. தங்களுக்கு இப்பொழுது பணத்தின் அவசியம் இருந்தால் பின்னல் கொடுக்கலாம். இப்பொழுது எனக்கு அவ்வளவு அவசரம் இல்லை. இப்பொழுது நான் கடனற்றவன். என் கடன்காரர்களுக்குப் பணத்தைக் கொடுத்து விட்டேன்.

முன்ஷி பணத்தைப் பாபுவிடம் கொடுத்துவிட்டு, விடை பெற்று வீட்டுக்குச் சென்றார்.

பாபு பணத்தைப் பெற்றுக்கொண்டு வீட்டுக்குள் சென்றார். "உன்னுடைய பணத்தை நீயே வைத்துக்கொள்" என்று பாபு, பணத்தைப் பாமாவிடம் கொடுத்தார்.

பாமா—இது என்னுடைய பணம் அல்ல. துளசியின் பணம். போதும், போதும். ஒரு முறை பிறர் பணத்தை எடுத்து நல்ல பாடம் கற்றுக்கொண்டோம்.

பாபு—துளசிக்குத்தான் பூராப் பணமும் ஏற்கெனவே கொடுத்துவிட்டோமே!

பாமா—கொடுத்தால் என்ன? அவள் செய்த நன்றிக்கு, அவள் செய்த ஆசீர்வாதத்திற்கு, இந்தப் பொருளைக் காணிக்கையாகக் கொடுத்துவிடுவோம்.

பாபு—உன் காதுக்கு லோலக்கு எப்படி வரும்?

பாமா—லோலக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. எப்பொழுதும் காது இருக்கிறதே, அதுவே போதும்.

३. சாந்தி

சாந்தி

1

நான் மாமனுர் வீட்டுக்கு வந்தபொழுது எனக்கு ஒன்றுமே தெரியாது. உடைகளைச் சரியாக உடுத்தவோ நாசூக்காகப் பேசவோ தெரியாது. தலை எடுத்துக்கூட யாரையும் பார்க்க மாட்டேன். கண்கள் தாமாகவே மூடிக்கொள்ளும். யார் முன்னிலையிலும் செல்லமாட்டேன். ஏன்? பெண்கள் முன்னிலையில் சென்ருலுங்கூட முக்காடு போட்டுக்கொண்டுதான் செல்வேன். நான் கொஞ்சம் ஹிந்தி படித்திருக்கிறேன். நாடகம், நாவல் இவைகளைப் படிப்பதில் எனக்கு விருப்பம் கிடையாது. சமயம் கிடைத்தால் ராமாயணந்தான் படிப்பேன். அதில் என் மனம் லயித்துவிடும். நான் ராமாயணத்தை இயற்றியது மனிதன் என்று கருதவில்லை. கடவுள் சொந்தமாகத் தான் எழுதியிருக்க வேண்டுமென்று கருதுவேன். நான் நாள் முழுவதும் ஏதாவது வேலை செய்துகொண்டேதான் இருப்பேன். வேலை இல்லாவிட்டால் ராட்டினத்தை எடுத்து வைத்துக்கொண்டு நூல் நூற்க ஆரம்பித்துவிடுவேன். ஒரு நாள் நான் பருப்பில் கொஞ்சம் உப்பை அதிகம் போட்டுவிட்டேன். மாமி என்ன சொல்லுவாளோ என்று நடுங்கிவிட்டேன். என் மாமனுர் சாப்பிடும்பொழுது, "உப்பு அதிகமாய் இருக்கிறது. உப்பை நிதானமாய்ப் போட்டுப் பழகவேண்டும்" என்றுதான் சொன்னுர். இவ்வார்த்தைகள் என் இதயத்தைத் துடிக்கச் செய்துவிட்டன.

என் அறிவீனம் என் கணவருக்குப் பிடிப்பதில்லை. அவர் ஒரு வக்கீல். கல்வியில் அநேக உயர்ந்த பட்டங்கள் பெற்றுள்ளார். அவர் என்னை உண்மையில் காதலித்து வந்தார். ஆனால் அக்காதலில் இரக்கமே அதிகமாயிருந்தது. அதாவது என் அறிவீனத்தைக் கண்டு மனம் வருந்துவார். 'அவளுக்கு ஒன்றுமே தெரியாது, பாவம்! சிறு குழந்தைபோல் இருக்கிறாள்' என்று நினைத்து வருந்துவார். பெண் கல்வி, பெண்கள் நடவடிக்கை முதலிய விஷயத்தில் மிகவும் தாராள நோக்கம் கொண்டவர் அவர். அந்தச் சீர்திருத்த மனப்பான்மை யுடன் என்னைப் பார்க்கும்பொழுதெல்லாம் அவர் மனத்திற் குள்ளேயே வருந்துவார். என் பழக்க வழக்கங்களில் ஒரு குற்றமும் இல்லை. எனது நாகரிகமற்ற பழக்க வழக்கங்களுக்கு நான் ஜவாப்தாரி அல்ல. நான் வளர்ந்தது அப்படி. அவர் என்னைச் சில சமயங்களில் கோபித்துக் கொள்வார். அவர் என்னுடன் உட்கார்ந்து வார்த்தையாடுவதில் சிறிதும் சந்தோஷப் படுவதில்லை. இரவில், படுக்கையில் படுத்துக்கொண்டு தூக்கம் வரும்வரையில் ஏதாவது ஆங்கிலப் புஸ்தகம் படித்துக்கொண் டிருப்பார். தூக்கம் வந்தால் தூங்கிவிடுவார். ஒரு நாள் அவர் இரவில் வாசித்துக் கொண்டிருந்தார். நான், "என்ன வாசிக் கிறீர்கள்?" என்று கேட்டேன். அவர் என்னைப் பார்த்துக் கருணையுடன், "என்ன சொல்வது? சொன்னால் உனக்குத் தெரியப் போகிறதா? இது 'ஆஸ்கார் வைல்ட்' எழுதின முதல்தர மான நாவல்" என்று கூறினர். இதைக் கேட்ட நான், 'இவ்வளவு கற்ற அறிவாளிக்கு மனைவியாகத் தகுந்தவள் நான் அல்ல. நான் ஓர் அசட்டு மாப்பிள்ளை வீட்டுக்குப் போயிருக்க வேண்டும்' என்று மனத்திற்குள்ளேயே நினைத்துக்கொண்டேன். என்னை என் கணவர் வெறுக்காமலிருப்பதே நான் பெற்ற பாக்கியம்.

ஒரு நாள் மாலை நான் ராமாயணம் படித்துக் கொண்டிருந்தேன். பரதன் ஸ்ரீராமசந்திரனைத் தேடிக்கொண்டு போகும்போது பட்ட கஷ்டத்தையும் துக்கத்தையும் படிக்கப் படிக்க என் மனம் துடித்தது. கண்களில் கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது. இருதயம் உருகிற்று. திடீரென்று பாபுவும் வீட்டுக்குள் வந்தார். நான் உடனே புஸ்தகத்தை மூடிவிட்டேன். நான் அழுவதைக் கண்டால் அவர் கேலி செய்வார். ஆதலால் என் அறிவீனத்தை அவரிடம் காட்டப் பிரியப்படவில்லை. அவர் உடனே, "ராமாயணந்தானே?" என்றார்.

எனக்கு வெட்கம் வந்துவிட்டது. குற்றவாளிபோல் தலை குனிந்துகொண்டு, " ஆம், மெல்லப் பார்த்துக்கொண்டிருந்தேன் " என்று சொன்னேன்.

உடனே பாபு, " அதில் நல்ல கருத்துக்கள் இருப்பது உண்மைதான். ஆனால் ராமாயணத்தில் ஆங்கிலேயர் பிரெஞ்சுக் கதாசிரியர்கள்போல மனித சித்திரம் அவ்வளவு நன்றாகச் சித்திரிக்கப்படவில்லை. மனித சித்திரம் என்றால் என்ன என்பதே உனக்குத் தெரிவது சந்தேகந்தான். ஆனால் சொன்னால் என்ன நஷ்டம்? தற்காலத்தில் ஐரோப்பாவில் உன்னத தத்துவ (realism) காலமாய் இருக்கிறது. அந்நாட்டார் மனக்கருத்தை உண்மையில் உள்ளபடியே தம் நூல்களில் சித்திரிக்கின்றனர். அதைப் படித்துப் பார்த்தால் நமக்கே ஆச்சரியமாய் இருக்கிறது. ஆனால் நம் நாட்டுக் கவிஞர்கள் எழுதும் கவிகளின் ஒவ்வோர் அடியிலும் தருமம், நீதி முதலியவற்றையே போதிக்கின்றனர். ஆதலால் இயற்கைக்கு முரணான பல விஷயங்கள் வந்து விடுகின்றன. இக் குற்றத்தைத் துளஸீதாஸரும் தம் ராமாயணத்தில் செய்திருக்கிறார் " என்று பிரசங்கம்போல் கூறினார்.

அவர் பேசிய அவ்வாராய்ச்சி மொழிகள் எனக்குப் புலனாகவில்லை. " ஆங்கிலம் தெரிந்தால்தானே அவைகளைப் படித்து ரஸிக்க முடியும்? ஆங்கில்ம் எப்படிக் கற்றுக்கொள்வது?" என்று கேட்டேன். " இதில் ஒரு கஷ்டமுமில்லை. தினசரி ஒரு மணி நேரம் சிரமப்பட்டுப் படி. கொஞ்ச நாளைக்குள் ஆங்கிலத்தில் போதிய அறிவு ஏற்பட்டுவிடும். நான் சொல்வதை நீ கேட்பதே இல்லை. வேடிக்கைக்குச் சொல்லுகிறேன் என்று நினைத்துக் கொள்ளுகிறாய். சுத்தமாக இருக்கும்படி எத்தனை தரம் சொல்லி யிருக்கிறேன். கடவுள் அழகைக் கொடுத்திருக்கிறார். ஏன்? நாம் அனுபவிப்பதற்குத்தானே? உனக்கோ அழகிற்குக் குறைவில்லை. ஆனால் நீ சிங்காரம் செய்துகொள்வதில்லை. என்போன்ற அநாகரிக மனிதனிடத்தில் எப்படி யிருந்தால்தான் என்ன என்று நினைத்துக்கொள்ளுகிறாயோ, என்னவோ? நீயோ அபார அழகுடையவள். நான் இரவு பகலாகக் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறேன். அதை நல்வழியில் செலவு செய்வதே என் விருப்பம். ஆனால் உன் அறியாமை, என் உழைப்பு, கொள்கை முதலியவற்றை நாசம் செய்துவிடுகிறது. பெண்கள் சமைத்தல், குழந்தை பெறுதல், புருஷனுக்குச் சேவை செய்தல், ஏகாதசி விரதம் அனுஷ்டித்தல் முதலிய காரியங்கள் செய்வதற்கு

மாத்திரம் இவ்வுலகத்தில் பிறக்கவில்லை. அவர்களது வாழ்க்கையின் லக்ஷியம் மிகவும் உயர்ந்தது. அவர்கள் மக்களுக்குரிய பொது ஜன சேவை முதலிய பல மகத்துவமான காரியங்களில் பங்கெடுத்துக் கொள்ளும் உரிமையுடையவர்கள். பெண்களுக்கும் ஆண்களைப்போல் சரிசமானமாக வாழ்வதற்கு உரிமை உண்டு. ஆனால் நீயோ, அடிமை மனப்பான்மையையே அணிகலனாகக் கொண்டுள்ளாய். ஆண்களில் பாதி பெண்கள் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் உன்னுடைய அறிவீனமோ என் லக்ஷியத்தைப் பாழாக்குகிறது. உன்னுடைய தருமம் வேறு, என்னுடைய தருமம் வேறு; உன்னுடைய நடவடிக்கை வேறு, என்னுடைய நடவடிக்கை வேறு; உன்னுடைய ஆனந்தம் வேறு, என்னுடைய ஆனந்தம் வேறு. என் வாழ்க்கையில் உன்னிடமிருந்து நான் ஒரு பலனையும் அடையவில்லை. நான் எவ்வளவு கஷ்டத்துடன் என் வாழ்நாட்களைக் கழிக்கிறேன் என்று நீயே யோசனை செய்து பார்" என்று வருத்தத்துடனும் கருணையுடனும் கூறினர். பாபு சொல்லிய விஷயங்கள் அனைத்தும் உண்மைதான். நான் அவர் கழுத்தில் இணைக்கப்பட்ட ஒரு சங்கிலி போல்தான் இருந்தேன். அன்று முதல் நான் பாபு சொன்ன பிரகாரம் நடப்பதென்று மனத்தில் திடமான சங்கல்பம் செய்து கொண்டேன். என்னுடைய புருஷனை தெய்வத்திற்கு நான் ஏன் துக்கத்தைக் கொடுக்கவேண்டும்? பதியின் வாக்கியம் தெய்வ வாக்கியமன்றோ?

2

நாகரிக ஆடையலங்காரங்களில் எனக்குப் பிரியமில்லை என்று எப்படிச் சொல்லட்டும்? ஆம், உண்மையில் பிரியம் இருந்தது. ஆனால் வேறு பெண்கள் எவ்வளவு நாகரிக உடை அணிந்து கொள்கிறார்களோ, அவ்வளவு எனக்கும் இருக்கத்தான் செய்தது. இந்நவீன காலத்தில் குழந்தைகள் முதல் வயோதிகர் வரையிலும் நாகரிகச் சிருங்காரத்தை விரும்பும்போது ஒரு யுவதியான நான் மட்டும் ஏன் அதை வெறுக்கவேண்டும்? மனதாகிய மாயை என்ன செய்யவேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கிறது? என் தாய் வீட்டில் எல்லோரும் மோட்டாத்துணிதான் உடுத்துவார்கள். சாப்பாடும் சாதாரணமாய்த்தான் இருக்கும், அறுசுவையுடன் உண்பதில்லை. கிடைத்ததைக்கொண்டு தான் திருப்தி அடைவர். என் பாட்டி ராட்டினத்தில் நூல் நூற்பாள். அதை நாங்கள் நெசவுகாரனிடம் கொடுத்து நெய்து ஆடைகள் செய்துகொள்வோம். கடைகளிலிருந்து மிகக் குறைவான துணிகள்

தான் வாங்குவோம். நான் கொஞ்சம் மெல்லிய துணி உடுத்தலாமென்றோ, நாகரிகமாக இருக்கலாம் என்றோ, மனத்தில் நினைத்தால் போதும். அவ்வளவுதான். வெடுக்கென்று என் மாமி, "குடும்பப் பெண்கள் இப்படி மினுக்கிக் கொண்டிருந்தால் வெளியில் உள்ளவர்கள் என்ன நினைப்பார்கள்? இப்படிப் பழகுவது ஒழுங்கல்ல" என்று வசைமொழிப் புராணத்தை வரிசையாய்க் கொட்டுவாள். எப்பொழுதாவது நான் என் அழகைக் கண்ணுடியில் பார்த்துக் கொண்டிருப்பேன். அப்பொழுது என்னை மாமி கண்டுவிட்டால் உடனே வாய்க்கு வந்தபடி திட்ட ஆரம்பித்து விடுவாள். பாபு என்பேரில் பிரியம் வைத்திருப்பதால், அவைகளையெல்லாம் நான் அலக்ஷியமாகக் கருதிவந்தேன். பாபுவின் பரிபூரணக் காதலைப் பெறும்பொருட்டு நான் திட்டுக்களை யெல்லாம் பொறுத்துக் கொண்டிருப்பேன். இப்பொழுது அவருடைய கொள்கையிலும் என்னுடைய கொள்கையிலும் ஒருவிதமான ஒற்றுமை தோன்றியது. நான் கொஞ்சம் நாகரிகமாக நடக்கலானேன். அவர் என்னைக் கண்டு அளவிலா ஆனந்தம் கொண்டார். அவர் எனக்காக நாகரிகமான புடைவைகள், அழகான 'ஜாகட்'டுகள், ஜரிகை போட்ட செருப்புகள் முதலியன வாங்கினர். ஆனல் அவைகளை அணிந்து கொண்டு வேறு யார் முன்னிலையிலும் நான் செல்லமாட்டேன். பாபுவின் முன்னல் மட்டும் அணிந்துகொண்டு செல்வதற்கு அவைகளை வைத்துக்கொண்டேன். இவைகளைக் கண்ட பாபு கொஞ்சம் சந்தோஷமுற்ருர். நான் என் கணவனை மகிழ்விக்க வேண்டியே எல்லாக் காரியங்களையும் செய்துவந்தேன். இப்பொழுது வீட்டு வேலைகளில் என் மனம் செல்வதில்லை. என்னுடைய நேரம் முழுவதும் நாகரிக சிங்காரத்திலும், புத்தகம் படிப்பதிலுமே கழிந்தது. புஸ்தகம் வாசிப்பதில் அளவில்லாத பிரியம் ஏற்பட்டது.

மாமன் மாமிகளைக் கவனிக்கா விட்டாலும், அவர்கள் முன்னிலையில் பூட்ஸ், கவுன் அணிந்து செல்வதற்கு எனக்கு இன்னும் தைரியம் ஏற்படவில்லை. அவர்கள் என் நாகரிகத்தைக் கண்டு திட்டுவார்கள். அவைகள் எனக்குக் கொஞ்சமும் பிடிப்பதில்லை. 'என் புருஷன் நூற்றுக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதிக்கும்போது நான் ஏன் வீட்டைச் சேரி போல் வைத்திருக்க வேண்டும்? நான் ஏன் என் இஷ்டம்போல் நடக்கக் கூடாது? என்னை அடக்குவதற்கும், உத்தரவு கொடுப்பதற்கும் இவர்கள் யார்?' என்று நானே பல கேள்விகள் கேட்டுக்கொண்டு

கொஞ்சம் கர்வமாகவே நடக்கலானேன். நான் என் சுயமரியாதையைப் பெருக்கலானேன். என் மாமி எனக்கு ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டே யிருப்பாள். ஆனால் நான் அதைக் கவனிக்காததுபோல் இருந்துவிடுவேன். ஒரு நாள் காலையில் மாமி, "குளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்" எனக் கூறினாள். நான் அதைக் கேட்காதவள்போல் இருந்து விட்டேன். மாமி என் வருகையைக் கொஞ்ச நேரம்வரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். நான் ஒரு வேலையும் செய்யாமல் என் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். என் மாமி இயற்கையிலேயே முன்கோபி. எப்போதும் சிடுசிடு வென்று விழுவாள். அற்ப காரியத்திற்கெல்லாம் பிரமாதமாகக் கோபித்துச் சண்டை பிடிப்பாள். அவளுக்கிருந்த கர்வத்தால் என்னை ஒரு வேலைக்காரி யென்றே கருதிவந்தாள்.

மாமி கோபத்துடன் என் அறைக்குள் வந்து, "உன்னிடம் நான் என்ன சொன்னேன்? குளிப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்யச் சொல்லவில்லையா?" என்றாள்.

இவ்வார்த்தைகளை நான் பொருட்படுத்தாமல், "இப்பொழுது எனக்கு நேரம் இல்லை" என்றேன்.

மாமி—என்ன? உன் மனத்தில் நாள் முழுவதும் சும்மாவே உட்கார்ந்திருக்கலாம் என்று நினைத்துக்கொண்டாயோ? நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். சில நாளாக இப்படிச் சும்மாவே இருக்கிறாயே? எந்தக் கர்வத்தில் இப்படிச் சும்மா இருக்கிறாய்? 'என் புருஷன் சம்பாதிக்கிறான். நான் ஏன் சும்மா இருக்கக்கூடாது?' என்று நினைத்துக் கொண்டாயோ? உன் புருஷன் லக்ஷ ரூபாய் சம்பாதிக்கட்டுமே! அதைப்பற்றி எனக்கென்ன கவலை? உன் புருஷன் இன்று நாலு காசு சம்பாதித்தால், வீட்டுக்கு நீ எஜமானி ஆய்விடலாம் என்று நினைத்துக்கொண்டாயோ? உன் புருஷனைக் குழந்தையிலிருந்து வளர்த்துக் காப்பாற்றிப் படிக்கவைத்தது நீ அல்ல! அவனைப் படிக்கவைத்து இந்த அந்தஸ்துக்குக் கொண்டுவந்தது நான்! பேஷ், நேற்று வந்த சிறுக்கிக்கு என்ன வாய்க்கொழுப்பு! என்ன கர்வம்!

இவ்வார்த்தைகள் என் இதயத்தில் அம்பெனத் தைத்தன. நான் அழுதேன். பேசுவதற்கு நா எழவில்லை. அப்பொழுது நடந்தவற்றை யெல்லாம் என் கணவர் மேல்மாடியில் உட்கார்ந்து கவனித்துக்கொண்டிருந்தார். அவர் மிகவும் வருத்தப்பட்டார்.

தம் தாயைக் கடிந்து பேசக்கூடாது என்று நினைத்தார். யாரை நொந்துகொள்வது என்று நினைத்துக்கொண்டு மனத்திற்குள்ளே என்ன செய்வது என்று யோசனை செய்துகொண்டிருந்தார். இரவு என் அறைக்கு வருத்தத்துடன் வந்தார். என்னைப் பார்த்ததும் துக்கத்துடன், "பார்த்தாயா, இன்று என் அம்மாவின் காரியத்தை. நாம் என்ன செய்வது? அம்மாவைக் கடிந்து பேசினால் ஊரார் ஏதாகிலும் சொல்வார்கள். இன்று அம்மா உன்னைக் கண்டபடி பேசினதை நான் கேட்டுக்கொண்டு தான் இருந்தேன். அவ்வார்த்தைகள் என் உள்ளத்தில் அம்புபோல் பாய்ந்து வருத்தத்தைக் கொடுத்தன. எனக்கே இவ்வாறு இருக்குமானால் உன் மனத்தை அவை எவ்வளவு வாட்டி யிருக்கும்? குடும்பத்தில் நடக்கும் இத்தகைய நிகழ்ச்சிகள்தாம் பெண்கள் சில சமயங்களில் தற்கொலை புரிந்து கொள்ளவும் காரணமாகின்றன. அவர்கள் வாழ்க்கையை மலைபோல் கருதச் செய்கின்றன. இதய கமலத்தை வெடிக்கச் செய்கின்றன. தண்ணீர், காற்று, உஷ்ணம் இவைகள் இல்லாமல் செடிகள் எவ்வாறு வாடுகின்றனவோ, அதேபோல் நம் வாழ்க்கையின் முன்னேற்றமும் தடைப்பட்டு விடுகிறது. எத்தனை நாட்கள் இந்தப் பந்தத்தில் கட்டுப்பட்டு இருப்பது? இந்தக் கஷ்டத்தி லிருந்து விடுபடுவதற்கு இரண்டே மார்க்கங்கள்தாம் உண்டு. அவர்கள் சொல்லும் திட்டுவார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு ஒன்றும் பேசாமல் இருந்துவிடவேண்டும். இல்லையானால் வேறு வழி பார்க்கவேண்டியதுதான். அம்மாவின் இயற்கைக் குணம் ஒருகாலும் மாறாது. ஆதலால், நான் சொல்வதைச் சொல்லி விட்டேன். உன் விருப்பம் என்னவோ?" என்று பிரசங்கம் செய்வதுபோல் வருத்தத்துடன் கூறினார். நான் உடனே சற்றுத் தயக்கத்துடன், "தங்கள் உத்தரவு எப்படியோ அப்படி நடக்கத் தயார். ஆனால் உங்கள் தாயாரை ஏன் வருத்தப்படுத்தவேண்டும்? நான் படித்து என்ன பிரயோசனம்? அவர் மனம் குளிரும் வண்ணம் நான் சதா என் வீட்டு வேலைகளைச் செய்கிறேன்" என்று சொன்னேன். உடனே பாபு, "மறுபடியும் அந்தப் பழைய கந்தல் வார்த்தைகளையே பேசுகிறாயே? இன்று என் தாயார் உன்னைக் கண்டிக்க ஆரம்பித்திருக்கிறாள். இனிமேல் தினசரி சண்டைச் சச்சரவுகள் பெருகிக்கொண்டே போகும். நான் உனக்கு நாகரிகத்தையும் நல்லறிவையும் புகட்ட முயற்சிசெய்தால் அத்துணையும் என் தாயாருக்கு விரோதமாகத் தெரியும். அந்தக் கோபத்தையெல்லாம் உன்மேல்தான் காட்டுவாள். என்ன செய்வது? இவ்வளவு நாள் சென்றபின் அவளுக்குப் புது

எண்ணங்கள் தோன்றுவது அசாத்தியந்தான். பகுத்தறிவும், காலப்போக்கும் அவளுடைய பார்வையில் அதர்மங்களாகவே தோன்றுகின்றன. ஆதலால் இனிமேல் நாம் இங்கே இருப்பது உசிதமல்ல. வேறு ஏதாவது நல்ல நகருக்குச் சென்று வசிக்க வேண்டியதுதான். இதுவோ கிராமமாக இருக்கிறது. வக்கீல் தொழிலும் நன்ருக நடப்பதில்லை. நல்ல நகரில் சென்ருல் நமது தொழிலும் நன்ருக நடைபெறும்" என்று கூறிமுடித்தார்.

3

என் மாமி என்னிடத்தில் இப்பொழுது அதிகம் பேசுவதில்லை. அண்டை வீட்டார்களிடமும், பந்துக்களிடமும் என்னைப்பற்றிப் புகார் சொல்வதும் பரிகசிப்பதுமாக இருந்தாள். இப்படி அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் புகார் சொல்வது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. எதிரில் இரண்டு திட்டுத் திட்டினுலும் பொறுத்துக்கொள்வேன். இம்மாதிரி மாமி நடந்து கொள்வதால் எனக்கு அவள்மேல் உள்ள மரியாதையும் சிறிது குறைவுபடலாயிற்று. நான் என் சிநேகிதிகளுக்கு மரியாதை செய்தால் நான் ஏதோ தன்னை அவமதிப்பதாக அவள் நினைத்துக் கொள்வாள். என்னிடம் பாபு அன்பாக இருப்பதைக்கண்டு நான் ஏதோ வசியம் செய்துவிட்டேன் என்று எண்ணியிருந்தாள்.

ஆடி மாதம் ஜன்மாஷ்டமிப் பண்டிகை வந்தது. வீட்டில் எல்லோரும் விரதம் அனுஷ்டித்தார்கள். நானும் வழக்கம்போல் விரதம் அனுஷ்டித்தேன். அன்றிரவு நாங்கள் அனைவரும் ஆடுவதும் பாடுவதுமாக இருந்தோம். பாபு இந்த அநாகரிகக் கொள்கைக்கு முற்றிலும் விரோதமானவர். அவர் ஹோலிப் பண்டிகையன்றுகூடச் சாயம் வீசி விளையாடமாட்டார்.

இரவு ஒரு மணிக்கு ஆட்டம், பாட்டு எல்லாவற்றையும் முடித்துவிட்டு, நான் பாபுவின் அறைக்குத் தூங்கச் சென்றேன். அவர், "இந்த விதமாக உடம்புக்குக் கஷ்டம் கொடுப்பதனுல் என்ன பிரயோசனம்? கிருஷ்ணன் உண்மையானவர். அவரைப் பூஜிப்பதும் நல்லதுதான். அது நமது கடமையும் ஆகும். ஆனுல் இவ்வாறு ஆடுவதிலும் பாடுவதிலும் என்ன பிரயோசனம்? இவைகள் எல்லாம் ஏமாற்று வித்தைகள். இவை தர்மத்தின் உண்மை அல்ல. தர்மத்தின் தத்துவம் உண்மையும் நம்பிக்கையுமே யாகும். ஏமாற்றும் வெளிப்பகட்டும் அல்ல" என்ருர்.

பாபு சீர்திருத்த மனப்பான்மை உடையவர். சீர்திருத்தக் கொள்கையை நடைமுறையில் காட்டும் தைரியமும் அவருக்குண்டு.

அவர் வேத பாடங்களைப் பொறுமையாக அர்த்தத்தோடு படிப்பார். ஆனால் அதை மனப்பாடம் செய்து ஒப்பிக்கமாட்டார். பாபு உபநிஷதங்களைப்பற்றிப் பேசினால் மலர் மாரி பெய்வதைப்போல் இருக்கும். அவர் உபநிஷதங்கள் படித்துக்கொண்டிருப்பதை நான் பார்த்ததில்லை. அவர் ஹிந்து தர்மத்தின் முக்கியக் கொள்கைகளில் நம்பிக்கை உடையவர். ஆனால் அவைகள் காலதேச வர்த்தமானங்களுக்குப் பொருந்தியவை என்று சொல்லமாட்டார். 'மூட வேதாந்தந்தான் இப்பாரத நாட்டை இத்துர்ப்பாக்கியத்தில் ஆழ்த்தியது. உலகப் பொருள்களையெல்லாம் அற்பமென்று கருதச் செய்ததும் அதுவே' என்று கருதியிருந்தார். "மூடத்தன்மையாக இருந்து வந்த பலனை இன்று அடிமைகளாகி நாம் அனுபவித்து வருகிறோம்" என்று அவர் கூறுவார். "இப்பொழுதுதான் நாடு முன்னேறும் சமயம். மூடப் பழக்க வழக்கங்களை, ஒழித்தால் அல்லாமல் நாடு விருத்தியடையாது" என்று அவர் அடிக்கடி கூறுவார். அவர் கூறும் புரட்சிகரமான தர்க்கங்களுக்கு என்னால் பதில் கூறமுடியாமல் விழிப்பேன். ஆனால் அவர் தம் சுய அறிவால் அவைகளைக் கூறவில்லை. ஆங்கில நாகரிகமே அவரை அவ்வாறு கூறச்செய்தது என்று நான் கருதினேன்.

4

சில நாட்களுக்குப் பின்னர் அலகாபாத் சென்றோம். பாபு இரண்டு அழகிய பங்களாக்களை வாங்கினார். அதில் சகலவிதமான சௌகரியங்களும் நிறைந்திருந்தன. எங்களிடத்தில் ஐந்து வேலையாட்கள் இருந்தனர். அவர்களுள் இரண்டு பேர் ஆண்கள், இரண்டு பேர் பெண்கள், சமையற்காரன் ஒருவன். இப்பொழுது நான் வீட்டு வேலை செய்வதே இல்லை. எப்பொழுதாவது மனச்சலிப்பாய் இருந்தால் ஏதாவது நாவலை எடுத்துப் படிக்க ஆரம்பித்துவிடுவேன். எங்கள் வீட்டில் பித்தளை, மண்பாத்திரங்கள் குறைவு. வெள்ளிப் பாத்திரங்கள் விலைபெற்ற அலமாரிகளில் அலங்காரமாக அடுக்கப்பட்டிருக்கும். பாபு மேஜை மேல்தான் சாப்பிடுவார். எப்பொழுதும் நாங்கள் அறுசுவையுடன்தான் சாப்பிடுவோம். முதலில் மேஜைமீது போஜனம் செய்வது எனக்கு வெட்கமாய் இருந்தது. ஆனால் மெல்ல மெல்ல நானும் கூச்சமின்றி மேஜைமேல் சாப்பிட ஆரம்பித்துவிட்டேன். வெளியில் கால் நடையாக எங்கும் செல்லமாட்டோம். யாரையாவது பத்து அடி தூரத்தில் சென்று பார்க்க வேண்டுமானாலும் மேனாவில்தான் செல்வோம். இப்படி நடப்பதுதான் 'பாஷன்' என்று பாபு கூறுவார்.

பாபுவுக்கு வருவாய் மிகக் குறைவு. ஆனால் தடபுடலாகச் செலவு செய்வார். இதனால் சில சமயங்களில் தம் வருவாயை நினைத்து வியாகுலப்படுவார். அப்பொழுது நான், "வருவாய் மிகக் குறைவாய் இருக்கும்போது செலவை ஏன் இவ்வளவு அதிகம் செய்யவேண்டும்? ஏதாவது சிறிய வீடு வாங்கிக் கொள்வோமே. இரண்டு வேலைக்காரர்கள் இருந்தால் போதுமே" என்று பாபுவுக்கு யோசனை கூறுவேன். ஆனால் அவர், "நம்முடைய தரித்திரத்தை நாமே ஏன் தம்பட்டம் அடித்துக் கொள்ளவேண்டும்? தரித்திரத்தை வெளியே காட்டுவது தரித்திரத்தைக் காட்டிலும் துன்பத்தைக் கொடுக்கும். முதலில் நாம் ஏழைகள் என்பதை மறந்துவிட வேண்டும். அப்பொழுது லக்ஷ்மி தானே ஓடிவருவாள். செலவு பெருகுதல், தேவைக்கு மேற்பட்டுச் செலவு செய்தல், இவைகள் செல்வம் பெருகுவதற்கு முதற்படியாகும். இரண்டாவது, நம்முடைய மனோசக்தியும் இதனால் விருத்தியடைகிறது. உலகத்திலுள்ள கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்து, அதைச் சகிக்கும் சக்தியும் நமக்கு ஏற்படுகிறது. கவலை கொள்ளவே கூடாது. கவலை தரித்திரத்தின் வேறு பெயர்" என்று உபதேசிப்பார்.

இஃது இவ்வாறு இருக்க, எங்களுடைய செலவு தினசரி அதிகரித்துக்கொண்டே சென்றது. நாங்கள் வாரத்திற்கு மூன்று முறை தியேட்டர்களுக்குச் செல்வோம். வாரத்திற்கொருமுறை நண்பர்களுக்கு விருந்தளிப்போம். இல்வாழ்க்கையின் லக்ஷியம் சுகமனுபவித்தல் என்பதேயாம். இப்பொழுதுதான் எனக்கு அது தெரியவந்தது. விரதம் அனுஷ்டிப்பதற்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லை என்பதை நான் தெரிந்துகொண்டேன். நமது உபவாஸம் கடவுளுக்குப் பிடித்தமில்லை என்பதையும் உணர்ந்தேன். நாம் உண்டு களித்தின்புறவே கடவுள் பல பொருள்களை உலகில் படைத்திருக்கிறார் என்பதையும் உணர்ந்தேன். அவ்வாறு சுகமனுபவிப்பதே கடவுளுக்குச் செய்யும் ஆராதனை என்றும் அறிந்தேன். எனக்கு ஒரு கிறிஸ்தவ மங்கையைச் சங்கீதம் கற்பிக்கவும், ஆங்கிலம் கற்பிக்கவும் பாபு நியமித்தார். வீட்டில் ஒரு பியானாவும் வந்தது. இந்த நவீன சங்கீதத்தில் மூழ்கியதால் ராமாயணத்தையும், பகவத் கீதையையும் நான் முற்றிலும் மறக்கலானேன். நாவல்களில் எனக்கு அளவுகடந்த பிரியம் ஏற்பட்டது. நாளடைவில் எனக்குக் கடவுளின்பேரில்கூட நம்பிக்கையில்லாமற் போய்விட்டது. மெல்ல மெல்ல எனக்குப் பெரிய மனிதர்களின் சிநேகம் ஏற்பட்டது. இப்பொழுது நான்

இருக்கும் இடத்தில் ஒரு புதிய சங்கம் ஏற்பட்டது. அவர்களின் நடவடிக்கைகள், பாவனைகள், கொள்கைகள் எல்லாம் எனக்கு அற்புதமாய் இருந்தன. நான் அவர்களுக்குள் மயில் கூட்டத்தில் காக்கைபோல் இருந்தேன். அவர்கள் எப்போதும் தியேட்டர்களைப் பற்றியும் நாவலாசிரியர்களைப் பற்றியுமே சம்பாஷணை செய்து கொண்டிருப்பார்கள். அவர்களுடைய புத்திசாதுர்யமும், நோக்கமும் என்னைக் காந்தம்போல் இழுத்தன. அவர்களிடத்தில் அறிவும் தீக்ஷண்யமும் சேர்ந்து பிரகாசிக்கலாயின. அவர்கள் முக்காடு போட்டுக்கொள்ளாமல் தாராளமாக வெளியே செல்கின்றனர். அவர்களுடைய தைரியத்தைக் கண்டு நான் பிரமித்துவிடுவேன். அவர்கள் என்னைத் தங்களுடன் அழைத்துச் செல்ல முயலுவார்கள். ஆனால் வெட்கத்தால் நான் அவர்களுடன் செல்லமாட்டேன். அவர்கள் முகத்தில் கவலையோ துக்கமோ இருந்ததை நான் பார்த்ததே இல்லை. என் தோழியின் கணவர் மிஸ்டர் தாஸ் காய்ச்சலாக இருந்தார். ஆனால் மிஸஸ் தாஸின் முகத்தில் கொஞ்சமேனும் வருத்தக்குறி இல்லை. மிஸ்டர் பாக்டீ கோடைக்கால வாசஸ்தலத்தில் நோயாளிகளுக்கு மருத்துவம் செய்துகொண்டிருக்கிறார். ஆனால் மிஸஸ் பாக்டீ மாலையானதும் டென்னிஸ் விளையாடுவதற்கு வந்துவிடுவார். என் நண்பர்கள் இந்த நிலைமையில் இருக்க, என் நிலைமை எவ்வாறு இருக்கும்? அது எனக்குத்தானே தெரியும். அந்த நவீன கிளப்பில் இருக்கும் பெண்களின் பழக்க வழக்கங்களில் ஒரு புதிய சக்தி இருந்தது. அது என்னையும் இழுக்கலாயிற்று. நான் அவர்களை மகிழ்விப்பதற்கு வேண்டிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நாளடைவில் அவர்களைப்போல் நானும் வெட்கமின்றி நடக்கலானேன். அவர்கள் தங்குதடையின்றி ஆங்கிலத்தில் பேசுகின்ற சம்பாஷணையைக் கண்டு நான் அவர்கள் தெய்வப் பிறப்பே எனக் கருதினேன். நானும் அவர்களைப்போலவே ஆங்கிலம் பேச முயன்றேன்.

இதற்கிடையில் எனக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டாயிற்று. பாபு ஆரம்பத்திலிருந்தே என்மேல் அன்பு வைத்திருந்தது உண்மைதான். ஆனால் அவர் என்னை அன்பே, (Darling) என்று அடிக்கடி கூறுவது, இப்பொழுது மேற்பகட்டு வார்த்தைகளே என்று தோன்றிற்று. உள்ளன்புடன் கூறவில்லை. வெறும் வாய்ப் பேச்சே என்று தோன்றிற்று. அவருடைய உள்ளன்பும் காதலும் அலங்காரத்தில் மயங்கியிருந்தன. பாபுவின் வாயிலிருந்து வரும் மொழிகள் அனைத்தும் அலங்காரமும் பகட்டுமே என்று

தோன்றவே, அவர்மேல் எனக்குள்ள அன்பு சிறிது குறையலாயிற்று. சுயமரியாதை சிறிது தோன்றலாயிற்று. நான் ஒருவனுக்கு மனைவியாக இருக்கிறேன் என்று அலங்காரம் செய்து கொள்ளவில்லை. ஆனால் பெண்களுடைய கடமை நாகரிகமாக இருத்தல் என்றே நான் நாகரிக வாழ்க்கை நடத்தலானேன். என் அழகைப்பற்றி நானே கர்வங்கொண்டேன். நான் கணவனுக்கு அடிமை அல்ல; யாருக்கும் அடிமை அல்ல. நான் எனக்காகவே இருக்கிறேன் என்று எண்ணினேன். நான் கணவனுக்குச் செய்யவேண்டிய தியாகம், சேவை அனைத்தையும் மறந்தேன்.

நான் பர்தா போட்டுக் கொண்டுதான் இருந்தேன். ஆனால் என் அழகின் பெருமையை உலகம் புகழ வேண்டுமென்று மனது விரும்பிற்று. ஒரு நாள் மிஸ்டர் தாஸும் அவருடைய நண்பர்களும் என் கணவருடன் பேசிக்கொண்டிருந்தனர். எனக்கும் அவர்களுக்குமிடையே ஒரே ஒரு திரைதான் குறுக்கே இருந்தது. நான் திரை மறைவில் நின்றுகொண்டிருந்தேன். திரை மறைவில் நின்று கொண்டிருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. அவர் தம் நண்பர்களிடத்தில், "என் மனைவி அழகிலோ அல்லது உடையிலோ குறைந்திருக்கிறாள். ஆதலால்தான் திரை மறைவில் இருக்கிறாள் என்று நினைத்துவிட வேண்டாம். வெட்கத்தால்தான் மறைந்து நிற்கிறாள்" என்று சிரித்துக்கொண்டே கூறினார். என் அழகை நண்பர்கள் பார்க்கும் பொருட்டு அடிக்கடி ஏதாவது எனக்குச் சொல்லி என்னைப் பக்கத்தில் அழைப்பார். நானும் அதுவே சாக்காகச் செல்வேன். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. நாளடைவில் என் வெட்கம் மறைந்தது. தாராளமாக முக்காடு இல்லாமலும் வெளியே செல்லத் தொடங்கினேன்.

5

அலகாபாத்திற்கு வந்து இரண்டு வருடங்கள் ஆயின. பாபுவுடன் நான் முக்காடின்றித் தாராளமாக வெளியே உலாவச் செல்வேன். உலாவிய பின்னர் டென்னிஸ் விளையாடி விட்டு கிளப்பில் சிறிது நேரம் இளைப்பாறுவேன். முதலில் டென்னிஸ் விளையாடுதல் வேடிக்கையாகத் தோன்றிற்று. அவர்கள் தேகாப்பியாசத்திற்காக விளையாடுவது இல்லை. ஒரு பேஷனுக்காகவே விளையாடுகிறார்கள் என்று தோன்றிற்று. டென்னிஸ் விளையாடுபவர்கள் குதிக்கும்பொழுதும், ஆடும் பொழுதும், குனியும் பொழுதும் பார்த்தால் ஒரு புது முறையாகவே

இருக்கிறது. எல்லாம் செயற்கை மயங்கள். வேண்டுமென்றே புதிய முறையாகக் குனிகிருர்கள், ஆடுகிருர்கள்! இவற்றை யெல்லாம் பார்க்கும்போது தேகாப்பியாசத்திற்காக விளையாடுவ தில்லை; வெறும் பேஷனுக்காகவும் பகட்டுக்காகவுந்தான் விளையாடுகிருர்கள் என்று தோன்றிற்று.

இது மாத்திரந்தானு? கிளப்பில் இன்னும் அநேக விசித்திரங்கள் உண்டு. அங்கே முழுவதும், டாம்பீகம், விகார அலங்கோலம், ஒழுக்கக் குறைவு முதலியன நிறைந்திருந்தன. அவர்கள் பொறுக்கி யெடுத்த சில அர்த்தபுஷ்டியில்லாத ஆங்கிலச் சொற்களை அடிக்கடி உபயோகிப்பார்கள். ஒருவர் சொல்லும் வார்த்தைகள் மற்ருெருவருக்குத் தெரியாது. ஆனுல் எல்லோரும் காரணமில்லாமல் சிரிப்பார்கள், கேலி செய்வார்கள். அவர்கள் சிரிக்கும் சிரிப்பு மனப் பூர்ணமாக வெளிவரும் சிரிப்பு அன்று; வேண்டுமென்றே சிரிக்கும் சிரிப்பு. அங்கே அனைவரும் ஆங்கில நாகரிகத்தைக் காப்பி அடிக்கும் களிக் கூத்தர்கள்தாம். இம்முறையை நானும் மெல்ல மெல்லப் பின்பற்றலானேன். ஆடம்பரத்தின் அனுபவம் இப்பொழுதுதான் எனக்கு ஏற்படுகிறது. கிளப்பில் உள்ளவர்கள் கண்ணைக் கவர்வதற்காக நான் தினந்தோறும் புதுப் புது உடைகள் உடுத்துக் கொண்டு செல்வேன். நான் என் கணவருக்குச் செய்கிற வேலையைக் காட்டிலும் அதிக நேரம் சிங்காரித்துக் கொள்ளச் செலவிடுவேன். நான் செய்கின்ற நாகரிகப் பழக்கம், நாளடைவில் ஒரு குடிகாரனுக்கு உண்டாகிற போதையைப் போலவே ஆயிற்று. குடிகாரர்கள் குறித்த நேரத்தில், எப்படியாவது குடித்து விடுவார்கள். அதைப்போலவே நானும் நாகரிகப் பழக்கத்தை என் தினசரி வாழ்க்கையில் குறித்த நேரத்தில், குறித்த பிரகாரம் நடத்தலானேன். நான் செய்கின்ற இக்கோலங்களைக் கண்டு பலர் என்னைப் புகழ்ந்தனர். ஒரு சிலர் இகழவும் இகழ்ந்தனர். என் அழகைக் கண்டு அநேகர் மயங்கினர், புகழ்ந்தனர். இதனுல் எனக்குச் சிறிது கர்வமும் தோன்றலாயிற்று.

என்னைப் பற்றி நானே சில சமயங்களில் யோசனை செய்து கொண்டிருப்பேன். நான் நேரான வழியில் போகிறேனு அல்லது முட்பாதையில் நடந்து செல்கிறேனு என்று யோசனை செய்வேன். அப்போது எனக்கே வருத்த முண்டாகும். பல தடவை என் அந்தராத்மா, "நீ இவ்வாறு நடப்பது சரியன்று" என்று கூறிற்று. நான் என் நடவடிக்கைகளை மாற்றி நேரான பாதையில் நடக்க முயன்றேன். இனிமேல் கிளப்பிற்கும் போகக் கூடாது என்று

சங்கல்பம் செய்துகொண்டேன். ஆனால் கிளப்பிற்குச் செல்லும் சமயம் வந்தவுடன் போவதற்குத் தயாராய் விடுவேன். சுருங்கக் கூறின் நான் என் வசத்தில் இல்லை. நான் எண்ணிய பிரகாரம் ஒன்றும் நடக்கவில்லை. நான் நாகரிகத்தை வசப்படுத்தவில்லை; ஆனால் நாகரிகம் என்னை வசப்படுத்திற்று. என் ஏவலை நாகரிகம் கேட்கவில்லை; நாகரிகத்தின் ஏவலுக்கு நான் அடிபணிந்து நடந்தேன்.

பாபு முன்போல இப்பொழுது கிளப்பிற்குச் செல்வதில்லை. இந்த ஒரு மாதத்திற்கு முன்னர் அவர் கிளப்புக்குப் போகாமல் இருந்ததில்லை. ஆனால் இப்பொழுது சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு புத்தகமும் செய்தித்தாளும் படித்துக் கொண்டே இருந்தார். அவர் ஏன் கிளப்பிற்குச் செல்லவில்லை என்ற காரணம் எனக்குத் தெரியவில்லை.

ஒரு நாள் பாபுவுக்குத் திடீரென்று கடும் ஜுரம் கண்டது. நாள் முழுவதும் உணர்ச்சியற்றுக் கிடந்தார். அப்பொழுது நான் ஒரு நாவலை மிகவும் ரஸமாய் படித்துக்கொண்டிருந்தேன். நாவல் படிப்பதை விடுத்து, கணவருக்கு வேண்டிய காரியங்களைச் செய்ய என் மனம் இடம் கொடுக்கவில்லை. நாவலைப் பற்றியே என் எண்ணமெல்லாம். பிறகு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு அவரை ஒரு வினடி கவனித்தேன். கிளப்பிற்குப் போகும் நேரம் வந்தது. உடனே டென்னிஸ் விளையாடக் கிளப்பிற்குச் செல்லலாமா வேண்டாமா என்று அதிக நேரம் வரையில் யோசனை செய்தேன். 'நான் வீட்டிலேயே எவ்வளவு நேரமாக இருக்கிறேன்? நோய் ஏன் சொஸ்தமாகவில்லை? நான் இங்கே இருப்பதற்கும் நோய் சொஸ்தமாவதற்கும் என்ன சம்பந்தம்? நோய் குணமடையும் காலம் வந்தால் குணமடைகிறது. அதற்கு நான் ஏன் அனுவசியமாகப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டே இருக்கவேண்டும்?' என்று எண்ணி நான், ஆடைகள் அணிந்து, டென்னிஸ் பாட்டை எடுத்துக்கொண்டு கிளப்பிற்குச் சென்று விட்டேன். அங்கே சென்றவுடன் என் சினேகிதிகளான மிஸஸ் தாஸ், மிஸஸ் பாக்டீ முதலியவர்களிடம் என் கணவரின் தேக நிலையைப்பற்றி வருத்தமாகக் கூறுவேன். "விளையாட என் மனம் இடம் கொடுக்கவில்லை" என்பேன். பிறகு எல்லோரும் எனக்கு ஆறுதல் கூறுவார்கள். நண்பர்கள் அனைவரும் விளையாட எழுவர். நானும் அவர்களுடன் சென்று விளையாடுவேன். இவ்வாறே என் தினசரி வாழ்க்கை நடந்தது. மூன்று வருஷங்கள் கடந்தன. பாபுவுக்கு உடல் நலம் ஏற்பட

வில்லை. மிகவும் பலவீனமாய் இருக்கிறார். நான் இராப் பகலாக விசிறி கொண்டு வீசிக்கொண்டிருந்தேன். அவருக்குப் பதிலாக எனக்கு நோய் வரட்டுமே என்று நினைப்பேன். பாபு அப்பொழுது எழுந்து உட்கார்ந்துகொண்டார். நான் அவரைக் கண்டு உள்ளூற வருந்தவில்லை; காதலிக்கவில்லை. வெறும் பகட்டுக்காகவே முகத்தைச் சிறிது மலரச் செய்தேன். என் உள்ளத்தே தோன்றும் எண்ணங்களை அவர் நன்கு உணர்ந்து கொண்டார். மறுபடியும் படுத்துக்கொண்டார்.

நான் எப்பொழுதும் இரவு ஒன்பது மணிக்குத்தான் கிளப்பி லிருந்து வீட்டுக்கு வருவேன். ஒருநாள் இரவு பாபு சிறிது புன்முறுவலுடன் இருந்தார். அவர் என்னைப் பார்த்ததும் புரண்டு படுத்துக்கொண்டார். எனக்குக் காரணம் ஒன்றும் புலனாகவில்லை. நான் என் படுக்கையில் படுத்துக்கொண்டேன். தூக்கம் வரவில்லை. என் சுயநலமும், டாம்பீகமும் என் மனத்தையே வாட்டின. என் நடவடிக்கையைப்பற்றி வருந்தினேன். ஆனால் அதைத் திருத்திக்கொள்ள என்னால் முடியவில்லை.

இப்பொழுது எனக்கு ஆங்கில நாவல் படித்து ரஸிக்கும் ஆற்றல் உண்டாய்விட்டது. என் சம்பாஷணையில் புதுமைகள் அதிகம் கலந்துவிட்டன. ஆங்கிலப் பதங்களை அடிக்கடி உபயோகித்தேன். நாகரிகத்தின் உச்ச நிலையை அடைந்து விட்டேன். என் நண்பர்களைத் தவிர்த்து வேறு ஜனங்களிடம் பேசுவது எனக்கு மரியாதைக் குறைவாகத் தோன்றிற்று. கீழ்த்தரமான மக்களிடமும், படிப்பில்லாதவர்களிடமும் பழக்க வழக்கமே செய்து கொள்வதில்லை. கல்வியில்லாதவர்களைக் கண்டதும் என்னை நான் மிகக் கௌரவமாகக் கருதிக்கொள்வேன். இவர்களிடம் அதிகாரங்கள் செலுத்துவேன். அவர்கள் என்னை ஒரு மேனாட்டுப் பெண் என்று கருதவேண்டுமென்பதுதான் எனது விருப்பம். நம் நாட்டுப் பெண்களைக் கண்டால் எனக்குக் கொஞ்சமும் பிடிப்பதில்லை. அவர்களை வெறுப்பேன். அவர்களது நாகரிகம், கொள்கைகள் முதலியவற்றைச் சமயம் வாய்த்த போதெல்லாம் கண்டனம் செய்வேன். இது நிற்க,

ஒரு நாள் பாபு நோயால் மிகவும் கஷ்டப்பட்டார். அன்று கிளப்பிற்கு நான் போகவில்லை. தொடர்ச்சியாகப் பாபுவுக்கு மூன்று நாள் ஜுரம் விடவில்லை. தொந்திரவும் குறையவில்லை. என் நண்பர் மிஸஸ் தாஸ், நர்ஸை அழைத்துக் கவனிக்கும்படி யோசனை கூறினார். நானும் அதன் பிரகாரம் நர்ஸை அழைத்துப்

பாபுவைக் கவனிக்கச் செய்தேன். இரண்டு நாள் ஆகியும் வருத்தம் குறையவில்லை. நான் இரண்டு நாட்களாகக் கிளப்பிற்குச் செல்லாததால், என் மனம் அங்கேயே இருந்தது. என்ன பெரும் தொல்லையாய் இருக்கிறது என்று சில சமயம் நினைப்பேன்.

ஒரு நாள் மாலை நான் நாற்காலியில் உட்கார்ந்து பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென்று பாபுஜிக்கு அதிகக் காய்ச்சல் வந்துவிட்டால் என்ன செய்வது என்று யோசனை செய்தேன். மறுபடியும் ஓர் அளவற்ற வருத்தகரமான கற்பனையை மனத்திற்குள்ளே நினைந்து மகிழ்ந்தேன். என் கணவர் இறந்துவிட்டால் மிஸஸ் தாஸ், மிஸஸ் நாயுடு, மிஸஸ் ஸ்ரீவாஸ்தவ், மிஸஸ் சர்மா முதலியவர்கள் அவர் இறந்ததற்குத் துக்கம் விசாரிக்க வருவார்கள். அவர்களை நான் பார்த்தவுடனே எழுந்து வருத்தத்துடன், “ சகோதரிகளே! நான் இன்று ஓர் அனாதையானேன். எனக்கு ஆதரவு ஒருவரும் இல்லை. என் வாழ்க்கையானது, மயானத்தே எரியும் விளக்கைப்போல் ஆகிவிட்டது. நான் என் செய்வேன்? நீங்கள் அனைவரும் எனது வருத்தத்தைத் தணிக்கும்பொருட்டு எழுந்தருளியிருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் வருத்தத்தைத் தெரியப்படுத்தி, எனக்கு ஆறுதல் அளித்தமைக்கு நான் வந்தனம் அளிக்கிறேன். எனக்கு எந்த நிலைமை ஏற்படினும் என் கணவருக்காகச் சகித்துப் பொறுமையுடன் இருப்பேன்” என்பேன் என்று மனத்திற்குள் கற்பனைக் கோட்டை கட்டினேன். என் கணவர் இறந்துவிட்டால் நான் எந்தச் சேலையை உடுத்த வேண்டும்? அந்தச் சேலையை எப்படி உடுத்திக்கொள்வது? என்றெல்லாம் யோசனை செய்தேன். இன்னும் என் கணவர் இறந்த விஷயம் நகர் முழுவதும் பரவினால், முக்கியமான பிரமுகர்களிடமிருந்து அனுதாபத் தந்திகள் வரும். நான் அவர்களுக்கெல்லாம் தனித்தனியே பதில் கொடுக்க அசக்தமாக இருப்பதால் பத்திரிகையில், “ தாங்கள் கொண்டுள்ள அனுதாபத்திற்கு வந்தனம். என் கணவரின் ஆன்மா “சாந்தி”யடைய இறைவனைப் பிரார்த்தனை செய்வீர்களாக” என்று விளம்பரம் செய்துவிடுவேன்—என்று தீவிரமாக யோசனை செய்துகொண்டிருக்கையில், “ தங்களைப் பாபு அழைக்கிறார்” என்று நர்ஸ் வந்து கூறினாள். இதைக் கேட்டதும் எனக்கு வருத்தம் அதிகம் ஏற்பட்டது. அப்பொழுது கிளப்பிற்குச் செல்லும் சமயம். அவர் அழைப்பது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. ‘ இதென்னடா பெரிய தொல்லையாய் இருக்கிறது?’ என்று எண்ணிக்கொண்டே பாபுவின் அருகில் சென்றேன். அவர்

மிகவும் பலவீனமாய் இருந்தார். அவர் என்னை ஆர்வமும் கவலையும் கலந்த பார்வையுடன் நோக்கினர்; கண்ணீர் விட்டார். இதைக் கண்டு என் மனம் இரங்கிற்று. உடனே, "என்ன, வேறு டாக்டரையாவது அழைக்கட்டுமா?" என்று கூறி அருகில் அமர்ந்தேன். பாபு, "இங்கே எனக்குச் சௌகர்யம் ஏற்படாது. தாயார் வீட்டிற்குச் சென்றால்தான் சொஸ்தமாகும்" என்று மெல்லிய குரலில் கூறினர். "இங்கே இருப்பதைக் காட்டிலும் உங்கள் ஊரில் அவ்வளவு நன்ருக வைத்தியம் செய்கிறவர்கள் இருக்கிருர்களா? இது பட்டணம், அது கிராமம். இங்கேதான் வைத்திய வசதிகள் அதிகம் உண்டு" என்று அவரது உட்கருத்தை அறிய எண்ணிக் கேட்டேன்.

அவர், "என் அம்மாவைப் பார்க்கவேண்டுமென்று மனம் விரும்புகிறது. தாயைக் கண்டால் சூரியனைக் கண்ட பனிபோல் என் நோய் போய்விடும். இங்கே என்ன மருந்து கொடுத்தாலும் வியாதி சொஸ்தமாகாது. நீ ஏன் அதிகச் சிரமம் எடுத்துக் கொள்ளவேண்டும்?" என்ருர்.

"அங்கே சென்றால்தான் சொஸ்தமாகும் என்று தாங்கள் நினைத்துக் கொண்டீர்கள் போலும்! இது என்ன மனக்கோட்டையா, உண்மைதானு?" என்று மறுபடியும் அவரது உள்ளக்கருத்தைத் தெள்ளெனத் தெரியவேண்டி நான் கேட்டேன்.

அவர் உடனே மிக்க வருத்தத்துடன், "பாவி! நான் இந்த நோயால் மாத்திரம் வருந்தவில்லை. இந்த வாழ்க்கையிலேயே மிகவும் வருந்துகிறேன். ஏன் விவரித்துக் கூறவேண்டும்? நான் சொல்வதை மறுக்கவேண்டாம். தயவு செய்து என் விருப்பத்துக்கு இணங்கு" என்று கூறினர். அவர் கூறின அம்மொழிகள் எனக்கு ஓர் ஆச்சரியத்தைக் கொடுத்தன. மறுபடியும் பாபு என்னை நோக்கி, "நான் இந்த வாழ்க்கையில் சொல்லொணுத் துயரையும் துன்பத்தையும் அனுபவிக்கிறேன். இது நாள் வரையிலும் எதைப் பரிசுத்தமான செழிப்பான பூமி என்று கருதி எதன்மேல் நடந்தேனே அது இன்றுதான் பெரிய பாலை நிலம் என்று தோன்றுகிறது. இது நாள் வரையிலும் எதை உண்மையான இன்பம் என்று கருதினேனே அது இன்று கொடிய விஷம்போல் தோன்றுகிறது. இனிமேல் இவ்வாழ்க்கையை அறவே விரும்பேன். இனி நான் உலகில் வாழ்வதும் நியாயமல்ல. இந்த நான்கு வருடங்களாக வாழ்க்கை

எனும் பூந்தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தேன். அவற்றில் நறுமணம் தரும் மெல்லிய புஷ்பங்கள் காணவில்லை. ஆனால் வெறும் முட்களே நிறைந்து கிடக்கின்றன. இந்த வாழ்க்கையில் ஆனந்தம் இல்லை, சாந்தி இல்லை. ஆனால் சஞ்சலமும் துன்பமும், சுய நலமும், டாம்பீகமும்தான் உண்டு. இவ்வாழ்க்கையில் நீதி இல்லை, தர்மம் இல்லை, நட்பு இல்லை, தொடர்பு இல்லை. ஆதலால் தயவு செய்து என்னை இக்கொடிய வாழ்க்கையிலிருந்து காப்பாற்றுவாயாக. உனக்கு என்னை அங்கே அழைத்துச் செல்ல மனம் இல்லையானால் என் தாயாருக்கு நீ ஒரு கடிதம் எழுது. உடனே அவர்கள் கண்டிப்பாய் வருவார்கள். துர்ப்பாக்கியனாகிய எனக்கு உதவி செய்வார்கள். என் தாயாருக்கு இந்த நவீன 'ஸொஸைடி' யின் காற்று இன்னும் படவில்லை. என் தாயாரின் கருணைத் தோற்றமும், உள்ளன்பும் ஆயிரம் மருந்துக்குமேல் வேலை செய்யும். என் தாயாரின் இதயத்தில் அன்பும் அருளும் உண்மையும் நம்பிக்கையும் நிறைந்துள்ளன. ஆதலால் ஒரு சமயம் எனது தாயாரின் மடியில் நான் இறந்துவிட்டாலும் எனது ஆன்மா சாந்தி அடையும்" என்று கூறினார். இம்மொழிகளிலிருந்து இவருக்கு மனோ வியாதிதான் என்று தெரிந்து கொண்டேன். எனக்கு என்ன செய்வது என்று ஒன்றும் புலனாகவில்லை. உடனே நர்ஸை அழைத்து 'டெம்பரேசர்' எடுக்கச் சொல்லிவிட்டு, 'டாக்டரிடம் சென்று வருகிறேன்' என்று பாபுவிடம் கூறினேன். நர்ஸும் தர்மாமீடரை எடுத்துக்கொண்டு பாபுவருகில் சென்றாள். பாபு தர்மாமீடரைப் பிடுங்கித் தரையில் ஓங்கி அடித்தார். தர்மாமீடர் சுக்குச் சுக்கலாய் உடைந்தது. பாபு என்னை வெறுப்புடன் பார்த்தார். உடனே, "உன்னுடைய நோக்கம் என்ன என்பதைத் தெரிந்துகொண்டேன். நீ எதற்காக கவுன் அணிந்திருக்கிறாய் என்பதையும் தெரிந்துகொண்டேன். சரி, அப்படியே உலாவி விட்டு, டாக்டரிடம் 'டெம்பரேசர்' நெருப்புப் பற்றினால் எவ்வளவு இருக்குமோ அப்படியிருக்கிறது என்று கூறிவிடு" என்று பாபு வருத்தத்துடன் கூறினார். என் இதயம் நடுங்கிற்று. அவரிடம் என்ன பதில் கூறுவது என்று தோன்றவில்லை. அவர்மேல் கருணை உண்டாயிற்று. அவரும் கண்களை இறுக மூடிக்கொண்டார். பெருமூச்சு எழுந்தது. என்ன நேருமோ என்று எனக்குப் பயம் உண்டாய்விட்டது. டாக்டரை அழைத்துவரலாம் என்று கதவண்டை சென்றேன். உடனே பாபு படுக்கையிலிருந்து எழுந்து, "ச்யாமா! உன்னிடம் சில வார்த்தைகள் சொல்ல நினைக்கிறேன். இரண்டு வாரங்களாகச் சொல்லவேண்டுமென்று

மனத்திற்குள் நினைத்திருந்தேன். ஆனால் உன்னிடம் கூற எனக்குத் தைரியம் வரவில்லை. இன்றைக்கு எப்படியாவது கண்டிப்பாகக் கூறலாம் என்று நிச்சயம் செய்துவிட்டேன். நான் என் கிராமத்திற்குச் சென்று முன்போலவே எளிய வாழ்க்கை நடத்தலாம் என்று விரும்புகிறேன். இந்த வாழ்க்கையில் எனக்கு வெறுப்பும் சலிப்பும் தோன்றிவிட்டன. என் நோய்க்கு முக்கிய காரணம் இந்த வாழ்க்கையில் உள்ள தொல்லைகளேயாகும். எனக்கு உடம்பு வேதனை அன்று; மனோ வேதனைதான். நான் உன்னை நாகரிகப் பெண்ணாகப் பார்க்க விரும்பவில்லை. ஆனால் உன்னை முன்போல், பணிவுடையவளாகவும், பூஜை செய்பவளாகவும், ராமாயணம் படிக்கிறவளாகவும், வீட்டுவேலைகளை எல்லாம் செய்கிறவளாகவும், ராட்டை நூற்பவளாகவும், கடவுளிடத்தில் பயபக்தி உடையவளாகவும், பதிபக்தி உடையவளாகவும் பார்க்க விரும்புகிறேன். இந்தக் கஷ்டகாலத்தில் உன்னை நான் வேண்டுவது இதுவே. என் ஆசையைக் கண்டிப்பாக இந்தச் சமயத்தில் பூர்த்தி செய்வாய் என்று நம்புகிறேன். எளிய வாழ்க்கையில்தான் உண்மையான சுகமும் இன்பமும் இருக்கின்றன. என்ன! சம்மதந்தானா? என் வார்த்தைகள் அனைத்தையும் தட்டாது நடந்த நீ, இன்றும் அவ்வாறு செய்வாய் என்று நம்புகிறேன். என்ன, விருப்பந்தானா இல்லையா? இந்தச் சமயத்தில் மறுத்தா யானால், இந்தக் கஷ்ட வாழ்க்கையின் முடிவு எந்தப் பயங்கர நிலைமைக்கு உன்னைக் கொண்டுபோய் விடுமோ, தெரியவில்லை!" என்று வருத்தத்துடன் கூறினார்.

இவ்வார்த்தைகளுக்கு உடனே என்னால் பதில் கூற முடியவில்லை. கொஞ்சநேரம் சிந்தனையில் ஆழ்ந்தேன்.

இந்தச் சுயேச்சையான வாழ்க்கையில் எவ்வளவு சுகம் இருக்கிறது! இங்கே இருக்கும் மேஜைகள் அங்கே ஏது? இவ்வளவு சுதந்திரத்துடன் இருந்துவிட்டு மறுபடியும் அந்தப் பழைய கூண்டிலா போய் அடைவது? நான் முன்பிருந்ததைப் போல மறுபடியும் வேலைக்காரி போலவா வாழ்க்கை நடத்துவது? இந் நாகரிகங்களை யெல்லாம் நானாகவா கற்றுக்கொண்டேன்? இவர்தானே எனக்கு வருஷக் கணக்காகப் போதித்தார்? வருஷக் கணக்காகப் பூஜாவிதிகளையும், விரதம் அனுஷ்டிப்பதால் உண்டாகும் கெடுதல்களையும் எடுத்துக் கூறிக் கேலி செய்தார். நான் அவைகள் எல்லாம் மூடக்கொள்கைகள் என்று கருதி விடுத்தேன். இப்பொழுது அவைகள்தாம் நல்ல கொள்கைகள்

என்று சொல்லுகிறார். மறுபடியும் அந்தகாரத்தில் ஆழ்த்த நினைக்கிறார். நான் இவர் இஷ்டப்பிரகாரந்தானே நடந்தேன். என்மேல் தப்பிதம் என்ன இருக்கிறது? என்று பலவாறாக யோசனை செய்துகொண்டிருந்தேன்.

என் வாயிலிருந்து என்ன பதில் வருமோ என்று பரிதாபத்துடனும் ஆர்வத்துடனும் என்னை அவர் நோக்கினார். திடீரென்று அவரது வார்த்தைகளை மறுத்தால் மனம் உடைந்து வருந்துவார் என்று எண்ணி, "இங்கே இருப்பதில் தங்களுக்கு என்ன கஷ்டம்?" என்று கேட்டேன். அவர் மெல்ல எழுந்து உட்கார்ந்துகொண்டு, "என்னிடம் கேட்கிற இக்கேள்வியை உன் மனத்திற்குள்ளேயே கேட்டுப் பதில் தெரிந்துகொள். நான் மூன்று வருஷங்களுக்கு முன் எவ்வாறு இருந்தேனோ அவ்வாறாகவே இருக்கிறேன். உண்மையில் நான் சகல விதத்திலும் உன்னைக் காட்டிலும் அறிவாளி; அனுபவசாலி. ஆனால் இன்று நான் இந்த வாழ்க்கையை வெறுக்கிறேன். நான் ஏன் வெறுக்க வேண்டும்? காரணமில்லாமலா வெறுக்கிறேன்! நாகரிகம், சுயேச்சை முதலியன பெண்களின் இளகிய மனத்தைத் தம் வசப்படுத்துகின்றன. அவர்கள் நாகரிகத்தைத் தம் வசப்படுத்துவதில்லை. ஆனால் நாகரிகம் அவர்களை ஆட்டுவிக்கிறது. இந்த மூன்று வருடங்களுக்கு முன்னால் நீ எவ்வாறு இருந்தாயோ அவ்வாறா இன்றும் இருக்கிறாய்? முன்பு நான் நோய்வாய்ப்பட்டு கஷ்டத்துடன் படுக்கையில் படுத்திருக்கும்பொழுது நீ நண்பர் வீடுகளுக்குச் சென்று குதூகலமாக இருப்பாயா? பெண்கள் இதயத்தில் அன்பு நிறைந்துள்ளது என்று கூறுவார்கள். ஆனால் இந்த நவீனகாலத்தில் யதேச்சாதிகாரமும் கொடூரமுந்தான் நிறைந்திருக்கின்றன. நீ மிஸ்டர் தாஸுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, நான் உன்னைக் கொலை செய்துவிட வேண்டும்; இல்லையானால் நான் விஷமருந்தி உயிர்நீத்துவிட வேண்டும் என்று எண்ணினேன். இப்பொழுது உன்னிடம் அடக்கம் என்பது சற்றும் இல்லை. பெண்களுக்கு அடக்கம் மிக முக்கியமானது. இந்த ஒழுங்கீனமான நடவடிக்கைகளை எல்லாம் நான் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன். ஆனால் நான் பொறுமையுடன், 'என்ன நடக்கிறது? எல்லாவற்றையும் பார்ப்போம்' என்று சகித்துக் கொண்டிருந்தேன். இதோ இப்பொழுதுங்கூட உன் மனம் இங்கே இல்லை. வேறு எங்கோ அலைகிறது. என் மனம் மிகவும் வருந்துகிறது. நான் சொல்வது நிஜந்தானே?" என்றார்.

பாபு கூறின விஷயங்கள் என் உள்ளத்தை இடிபோல் தாக்கின. அவர் கூறின வார்த்தைகள் அனைத்தும் மனப்பூர்வமாகக் கூரிய வார்த்தைகள்தாம். இன்னும் என் மனத்தில் பழைய மானுபிமானம் கொஞ்சம் இருக்கிறது. என் மானுபிமானமும் வெட்கமும் புத்துணர்ச்சி பெற்று எழுந்தன. முன்பு என் கண்களுக்குப் பாபு ஒரு தெய்வமாகத் தென்பட்டார். இன்று அவர் ஒரு சாதாரண மனிதனுகத் தென்படுகிருர். இதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை. என் கண்முன் மிஸ்டர் தாஸின் உருவம் தோன்றிற்று. நான் பாபுவை நோக்கினேன். பாபுவின் முகத்தில் ஒருவிதமான புதிய ஒளி பிரகாசித்தது. அந்தக் கணமே மனம்போன போக்காக நடக்கக்கூடாது என்று கூறி எனது உள்ளம் என்னுடன் உறவாடியது. "நீ நாகரிகம் உடையவள் தான். உன்னிடத்தில் தன்னம்பிக்கை உண்டு. வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்கும் திறமையும் பெற்றிருக்கிருய். ஆனல் உனது ஆத்ம சக்தி மிகவும் குறைந்துகொண்டு வருகிறது. ஏனென்ருல், நீ உன் கடமையை மறந்துவிட்டாய்" என்று மறுபடியும் எனது உள்ளம் எனக்கு அறிவுறுத்தியது.

நான் உடனே இரு கைகளையும் கூப்பி, சாஷ்டாங்கமாக பாபுவின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினேன். பேசுவதற்கு நா எழவில்லை. தொண்டை வறண்டுவிட்டது. கண்களில் தண்ணீர் தாரை தாரையாக வடிந்தது. "நாதா! இன்றுமுதல் நான் உங்கள் இஷ்டப்பிரகாரம் நடக்கிறேன். பாவியை மன்னிக்கவேண்டும்" என்று கூறினேன். எனது இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் பாபு அளவில்லா மகிழ்ச்சி யடைந்தார். எழுந்து உட்கார்ந்தார். என்னைக் கட்டித் தழுவினர்! அன்றே நாங்கள் எங்கள் சொந்த ஊருக்குச் சென்ருேம்.

இப்பொழுது என் மாமி எனக்கு மரியாதை செய்கிருள். நானும் மாமியிடம் மரியாதையுடன் நடந்துகொள்கிறேன். பாபு சந்தோஷத்துடன் வாழ்க்கை நடத்துகிருர். இப்பொழுது அவர், நாள் தவறினுலும் நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்யத் தவறுவதில்லை.

மிஸஸ் தாஸின் கடிதம் சில சமயம் இங்கே வருவதுண்டு. அதில் அலகாபாத்தின் நவீன சங்கத்தின் புதுப்புது சமாசாரங்கள்தாம் இருக்கும். இன்னும் மிஸ்டர் தாஸ் மிஸஸ் பாடியாவை எப்படிக் கேலிசெய்தார் என்ற விஷயமும் இருக்கும். நான் இந்தக் கடிதங்களுக்கெல்லாம் பதில் கொடுத்துவிடுவேன்.

ஆனால் இனிமேல் கடிதங்கள் வராமல் இருந்தால் மிகவும் நல்லது என்று கருதுவேன். ஏனென்றால் நான் எந்த விஷயங்கள் கூடாது என்று மறந்துவிட்டேனோ, அதே விஷயங்களை அக்கடிதங்கள் எனக்கு ஞாபகப்படுத்துகின்றன.

நேற்று பாபு மிகப் பழைய ஆங்கிலப் புத்தகங்களை அக்னி தேவனுக்கு அர்ப்பணம் செய்தார். அதில் ஆஸ்கார் வைல்ட் எழுதின நாவல்கள் அநேகம் அடங்கியுள்ளன. இப்பொழுது அவர் ஆங்கிலப் புத்தகங்கள் அதிகமாகப் படிப்பதில்லை. ஒரு சமயம் படித்தாலும், கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியவர்கள் எழுதின புத்தகங்களைத் தவிர வேறு புத்தகங்கள் படிக்க மாட்டார்.

நான் முன்போலவே என் பழைய ராமாயணத்தைப் படித்துப் படித்து ரஸித்தேன். முன்னிலும் அதிகமாக இப்பொழுது கைராட்டையைச் சுற்றலானேன். நான் நாகரிக வாழ்க்கையில் இருக்கும்பொழுது கைராட்டைப் பிரசாரம் அதிகம் நடைபெற்றது. என் ராட்டை சுழல்கிற வேகத்தைப் பார்த்தால், அந்தப் பிரசாரம் அனைத்தையும் ஒன்றுவிடாமல் அது கேட்டிருப்பதுபோலத் தோன்றும்!

4. பச்சாத்தாபம்

பச்சாத்தாபம்

1

பண்டித துர்க்காநாத்திற்குக் கல்லூரிப்படிப்பு முடிவடைந்தது. இனிமேல் எவ்விதமாக வாழ்க்கையை நடத்துவது என்ற பிரச்னை அவர் மனத்தில் எழுந்தது. துர்க்காநாத் நல்லொழுக்கமும் இரக்கமும் வாய்ந்தவர். எனவே ஏழைகளின் நன்மைக்காகவே சேவை செய்து அவர்களுடன் பழகி எளிய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்பது அவரது பலநாள் விருப்பம்.

ஏதாவது காரியாலயத்தில் குமாஸ்தாவாக அமர்ந்தால்தான் தன் ஜீவனம் நடக்கும். ஆனல் ஏழைமக்களுடன் பழகும் சந்தர்ப்பம் இருக்காது. வக்கீல் தொழிலை மேற்கொண்டால் ஏழைகளுடனும் பழகலாம். வாழ்க்கையையும் நடத்தலாம். ஆனல் இத்தொழிலில், எவ்வளவு முயன்ருலும் எப்போதும் நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பது கஷ்டம். போலீஸ் இலாகாவில் சேர்ந்தால், பரோபகாரமும் ஏழைகளுக்கு உதவி செய்யும் சந்தர்ப்பமும் உண்டு. ஆனல் சில சமயம் சுதந்திர வேட்கை கொண்டவர்களையும், ஏழைகளுக்கு உதவி செய்ய எண்ணும் ஸாது ஊழியர்களையும் கஷ்டத்திற்கு உள்ளாக்க நேரிடும். அதிகார தோரணையில் இருந்தால் சில சமயத்தில் நியாயத்தையும் நீதியையும் கைவிடவும் வேண்டிவரும். அதிகார ஆணவமும், அதிகார தோரணையும் கண்டிப்பான உத்தரவு வார்த்தைகளும் இல்லாமல் காரியம் நடத்த முடியாது.

இவ்வாறு பலபல யோசனைகள் செய்தபின்னர், பாபு ஒரு ஜமீன்தாரிடம் கணக்குப்பிள்ளையாக அமர்ந்து வேலை பார்க்க

நிச்சயித்தார். ஜமீன் உத்தியோகத்தில் சம்பளம் குறைவாகத்தான் கிடைக்கும். ஆனால் குடியானவர்களிடம் அடிக்கடி நெருங்கிப் பழகும் பாக்கியமும் கிடைக்கும். எண்ணியதுபோல், கிராமத்தில் எளிய வாழ்க்கை நடத்தவும் முடியும்.

குமார் சிங் செல்வாக்கு வாய்ந்த பெரிய ஜமீன்தார். பண்டித துர்க்காநாத் அவரிடம் சென்று தமக்கு ஒரு வேலை கொடுக்கும்படி கேட்டார். குமார் சிங் பண்டிதரை ஏற இறங்கப் பார்த்தபின், "தங்களை இங்கே வைத்துக்கொள்வதில் எனக்குச் சந்தோஷமே. ஆனால் தங்கள் யோக்கியதைக்குத் தகுந்த வேலை எதுவும் இல்லையே!" என்றார்.

துர்க்காநாத்—எனக்கு விசேஷமான வேலையொன்றும் தேவையில்லை. எந்த வேலையாயினும் செய்யத் தயாராயிருக்கிறேன். தாங்கள் அன்புடன் கொடுக்கும் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளுகிறேன். ஒரு கிராமாதிகாரியாய் இருந்து வேலை பார்க்கவும் தயார். அதுவும் இல்லையெனில் அதற்கும் கீழான உத்தியோகமாயினும் சரியே.

குமார் சிங்—கிராமாதிகாரி சாதாரண ஊழியனெனக் கருத முடியாது. தன் கிராமத்தில் அவனே அரசன். நான் என் சமையல்காரனுக்கு இரண்டு ரூபாய் சம்பளம்தான் தருகிறேன். ஆனால் அவன் வெளியில் செல்லும்போது அணிவதோ விலையுயர்ந்த ஆடைகள்தாம். அவன் வீட்டு வாயிலில் குதிரைகூடக் கட்டப் பட்டிருக்கும். என்னுடைய ஊழியர்களில் யாரும் ஐந்து ரூபாய்க்கு அதிகமாகச் சம்பளம் பெறுவதில்லை. ஆனால் அவர்கள் வக்கீல் வீட்டில் சம்பந்தம் வைத்திருக்கின்றனர். அவர்களுக்கு எப்படி அவ்வளவு வரும்படி கிடைக்கிறதோ தெரியவில்லை. வருஷமானாலும் அவர்கள் சம்பளத்தைப்பற்றிக் கவலைப் படுவதே கிடையாது. என்னிடம் சம்பளம் இல்லாமல் வேலை செய்வதற்கும் எத்தனையோ பேர் காத்திருக்கின்றனர். ஆனால் உம்மை அப்படியிருக்கச் சொல்லவில்லை. கோயில் கணக்குப் பிள்ளைகூடத் தன் மான்யக் கிராமத்தில் எவ்வளவோ அதிகார தோரணையில் வாழ்கிறான். அவனுடைய ஆடம்பரங்கள் ஒரு சிற்றரசனுக்குக் குறைந்ததல்ல. இந்தக் கணக்குப்பிள்ளையைக் கண்டால் தாலூகா தாசில்தார்கூடச் சற்று மரியாதையுடன் இருக்கவேண்டும். இவன் மனசு வைத்தால் மெய்யைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் செய்துவிடுவான்.

ஜமீன்தார் சொன்னவற்றைப் பண்டிதர் ஒப்புக்கொண்டு, “எனக்கு இதுவரை உலகானுபவம் இல்லை. அதுவும் கிராமாந்தர நிர்வாகத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாதவன் நான். சமீபத்தில்தான் நான் காலேஜ் படிப்பை முடித்துக்கொண்டு வெளியில் வந்தேன். தாங்கள் இதுவரை வர்ணித்ததைக் கேட்கும்போது எனக்கு இங்கே வேலை செய்ய மனம் இடங் கொடுக்கவில்லைதான். இவ்வளவு குறைந்த சம்பளத்தில் எப்படி வாழ்க்கை நடத்துவது? ஒரு சமயம் இப்போதுள்ள உத்தியோகஸ்தர்கள், குடியானவர்களை ஏமாற்றியும், வருத்தியும் லஞ்சம் பெற்று வரலாம். ஆனால், நான் என் உயிர் போவதாயினும் இம்மாதிரிக் காரியங்களில் இறங்க மாட்டேன். உண்மையும் ஊக்கமுமுள்ள உத்தியோகஸ்தன் தங்களுக்குத் தேவையாயின், என்னை வைத்துக்கொள்ளுங்கள். என்னால் தாங்கள் மிகுந்த லாபத்தையும் நன்மையையும் அடைவீர்களென்பது உறுதி” என்று பணிவுடன் தெரிவித்துக் கொண்டார்.

ஜமீன்தார்—உண்மையானவர்கள் எனக்குத் தேவையாக இருக்கலாம். ஆனால் சம்பள விஷயந்தான் யோசிக்கவேண்டி யிருக்கிறது. மேலும் உண்மையானவர்களால் அதிகாரத்தை நடத்திப் பொது ஜனங்களை ஆளமுடியாது. அதிக லாபம் கிடைக்காது. இதைத்தான் கவனிக்க வேண்டும். எனக்கு அதிக லாபம் சம்பாதித்துக் கொடுக்க முடியாதவருக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதும் சாத்தியமில்லைதான்.

இதைக் கேட்டதும் துர்க்காநாத்திற்கு அதிக வருத்த முண்டாகிவிட்டது. அவருடைய மனத்தில், தம் ஆசை முறிந்து விடுமோவெனப் பயப்படலானார். இருந்தாலும் தம் தைரியத்தை விடாது ஜமீன்தாரைப் பார்த்து, “நான் ஆதரவற்றவன். என்னைப்போல் உண்மை உழைப்பாளி குறைந்த சம்பளத்திற்குக் கிடைப்பது கஷ்டம் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்” என்றார்.

ஜமீன்தாரின் மனத்திற்குள்ளாகப் பற்பல யோசனைகள் எழுந்தன. ‘என்னிடமோ பல கேசுகள் இருக்கின்றன. அந்தக் கேஸ் பத்திரங்கள் எல்லாம் பெரும்பாலும் ஆங்கில பாஷையில்தான் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றை அறிந்து கொள்ள, நம் பாஷையில் மொழிபெயர்த்துக்கூற, வேறு ஓர் ஆள் வேண்டியிருக்கிறது. அதற்கும் தனியாகப் பணம் கொடுக்க வேண்டும். இந்த அனுவசியச் செலவு அடிக்கடி நேரிடுகிறது.

நம் பக்கத்திலேயே ஓர் ஆள் இருந்தால் நல்லதுதானே? சௌகரியப்பட்டபோது கேஸ் விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். இவரோ ஆங்கிலத்திலும் உயர்தரப் பட்டதாரி. சூது வாது இல்லாதவர். இவருக்கு ஏதாவது ஒரு வேலை கொடுத்து நம்மிடமே வைத்துக்கொண்டால் இரட்டை லாபம். உத்தியோகத்தில் கிடைக்கும் சொற்ப சம்பளத்துடன் திருப்தி அடைவார். மொழிபெயர்த்துக் கூறத் தனியாகப் பணம் கேட்க மாட்டார். மேலும் உண்மைவாதி. விஷயங்களை ஒளிக்காமல், உள்ளது உள்ளபடி கூறிவிடுவார். வக்கீல்கள் செய்யும் பித்தலாட்டங்களையும் தெரிந்துகொண்டு தகுந்தபடி நடந்து கொள்ள முடியும். எனவே இவரை வைத்துக்கொள்வதே உசிதம்.

'உண்மை உழைப்பாளிக்கு எவ்வளவு குறைவான சம்பளம் கொடுத்தாலும் உண்மையினின்றும் மாறமாட்டான். ஏமாற்று பவனுக்கு எவ்வளவு அதிகமாகக் கொடுத்தாலும் அவனுடைய மோசடி அவனைவிட்டுப் போகாது.'

இப்படித் தீர்மானித்த ஜமீன்தார் பண்டிதரைப் பார்த்து, "உண்மைக்கும் பணத்திற்கும் சம்பந்தமில்லை. நானும் இதுவரை எத்தனையோ உண்மையான உழைப்பாளிகளையும், நாணய மிழந்தவர்களையும் பார்த்தாயிற்று. ஆனால், நீங்களோ படித்த மனிதர். உமக்குச் சம்மதமானால் இங்கே சந்தோஷத்துடன் இருக்கலாம். உங்களை ஒரு பிர்க்காவுக்கு அதிகாரியாக நியமிக்கிறேன். உங்களுடைய வேலைத் திறமையைப் பார்த்து, உயர்ந்த உத்தியோகம் தரப்படும். இப்போது மாதம் இருபது ரூபாய் ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

பண்டிதரும் அந்த உத்தியோகத்தை ஒப்புக்கொள்ளச் சம்மதித்தார். ஜமீன்தார் வசிக்கும் கிராமத்திலிருந்து இரண்டரை மைல் தூரத்தில், "சாந்த்பார்" என்ற கிராமம் இருந்தது. துர்க்காநாத் அந்தப் பிர்க்காவில் வரிவசூல் அதிகாரியாக நியமனம் பெற்று அங்கே சென்று தம் உத்தியோகத்தை ஏற்றுக் கொண்டார்.

2

துர்க்காநாத் சாந்த்பார் பிர்க்காவிற்குச் சென்று, தம் வாச ஸ்தலத்தைப் பார்வையிட்டார். ஜமீந்தார் சொன்ன விஷயங்கள் யாவும் உண்மை என்பதை உணர்ந்தார். உண்மையில், குடிகளின்

உழைப்பு, அதிகாரிகளின் சுகபோகங்களுக்கு உதவியாக இருந்தது.

அது ஓர் அழகிய பங்களா. தரையில் விலையுயர்ந்த ரத்ன கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. அவருக்கு ஊழியம் செய்ய ஏராளமான வேலைக்காரர்களும் சமையற்காரர்களும், சவாரி செய்ய அழகிய கோச் வண்டியும் இன்னும் ஆடம்பரத்திற்கு வேண்டிய சகல சாமான்களும் இருந்தன. அம்மாதிரி அலங்காரங்களும், நாகரிக சுகபோகங்களும் துர்க்காநாத்திற்கு மகிழ்ச்சி யளிக்கவில்லை. ஏனெனில், அம்மாளிகையின் நாற்புறங்களிலும் ஏழைக் குடிகளே காட்சியளித்தனர். ஓலை வேய்ந்த வீடுகளும் மண் பாண்டங்களுமே அவர்களுக்குச் சுகபோகங்கள். வேறு ஆடம்பரம் இல்லை.

குடிகள் அப்பங்களாவை அரண்மனை என அழைத்து வந்தனர். பையன்கள் அதைப் பயத்துடன் பார்ப்பர். அந்த விடத்தில் கால் வைப்பதற்கும் அவர்களுக்குத் தைரியம் இல்லை.

இவ்வித ஏழ்மை நிலையுடையவர்கள் முன்னிலையில், சுகபோகங்களுடன் வாழ்வதற்குப் பண்டிதர் வருத்தமுற்றார். மேலும் குடிகள் இவர்முன்னர் வருவதற்கும் நடுங்கினர். இவருடைய வேலைக்காரர்களோ அக்குடி ஜனங்களை மிருகங்களைப் போல் நடத்திவந்தனர்.

பண்டிதர் உத்தியோகமேற்று மாளிகையை அடைந்த முதல் நாளே, குடிஜனங்கள் பலவிதக் காணிக்கைகளுடன் அவரைப் பேட்டிகாண வந்தனர். அவர்களின் ஏழ்மை நிலை அவருடைய கண்களுக்கு முன்னால் நர்த்தனமாடிற்று. அவர் மனம் மிகுந்த சஞ்சலத்தில் ஆழ்ந்தது. ஏழைகளிடம், மேலும் பரிசுகளைப்பெற்று, அவர்கள் ஏழைமையைப் பின்னும் அதிகப்படுத்த அவருடைய தயாள உள்ளம் சம்மதிக்கவில்லை. எனவே, அவர் அப்பரிசுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள மறுத்து, அவர்களுடைய அன்பிற்காகத் தமது சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொண்டார். இத்தயாளச் செய்கையைக் கண்டு குடிமக்கள் எல்லோரும் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்தனர்.

ஆனால், அரண்மனை வேலைக்காரர்களோ, ஏமாற்றமும் வயிற்றெரிச்சலும் கொள்ளலாயினர்.

நாவிதர்களும் வண்ணார்களும் இலவசச் சேவை செய்ய முன்வந்தனர். ஆனால் பண்டிதரோ அதனையும் தடுத்துவிட்டார்.

நாள்தோறும் பால், தயிர், நெய் முதலியனவும் இலவசமாகக் கொண்டுவந்தனர். அவைகளும் மறுக்கப்பட்டன. வெற்றிலே பாக்குக்கூட பரிசாக வாங்கிக்கொள்ள அவர் மறுத்துவிட்டார்.

இதனைக்கண்ட ஜனங்கள் யாவரும் அவரைத் தர்மாத்மா வென்றும், மகாபுருஷனென்றும் புகழலாயினர்.

இந்தப் புதிய விவகாரங்களெல்லாம் அரண்மனை வேலைக்காரர் களுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவர்கள் இதுவரையில் அற்பச் சம்பளம் பெற்றும் பெருமலும், அரண்மனைப் போகங்களை அனுபவித்ததெல்லாம், குடிகளின் பரிசாலும், அவர்களை அடிக்கடி நிர்ப்பந்தித்து வாங்கிய பொருள்களைக் கொண்டுந்தான். இப்போதோ அவர்கள் சுகபோகங்களில் திடீரென இடி விழுந்தது. அரண்மனை நிழலில் மேனி வாடாது அமோகமாய்ப் போகங்களை அனுபவித்து வந்தவர்களைத் திடீரென வனவாச வாழ்க்கையை மேற்கொள்ள நிர்ப்பந்தித்தால் அவர்கள் மனம் எப்படித்தான் தவிக்காது? கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோலத்தான் அவர்கள் நிலைமை ஆயிற்று.

எனவே அரண்மனைப் பணியாளர்கள் யாவரும் ஒன்றுகூடி யோசித்தனர். தமது புதிய தலைவரை அடைந்து, "எசமான்! தாங்கள் இப்பரிசுகளைத் திருப்பி அனுப்புவது சம்பிரதாயத்திற்கு விரோதம். தங்களுக்கு வேண்டாமாயின், எங்களுக்காவது கொடுத்துவிடுங்கள். இவைகள் இல்லாவிட்டால் எங்கள் பெண்டு பிள்ளைகள் பட்டினியாய்த் தவிக்கவேண்டியதுதான். சம்பிரதாயத்திற்கு விரோதமாக நடப்பது எப்போதும் ஆபத்துத் தான். வழக்கத்தை அழித்துவிடாதீர்கள். உங்களுக்குப்பின் வேறு யாராவது, புதிதாக இவ்வுத்தியோகத்திற்கு வந்தால் அவர்களிடம் இந்த வழக்கத்தை ஏற்படுத்துவது கஷ்டத்தில் முடியும்" என்று விண்ணப்பித்துக் கொண்டனர்.

பண்டிதர் இம்முறையீட்டை அமைதியுடன் கேட்டார். சிறிதுநேரம் மௌனமாக இருந்தபின் தம் சிப்பந்திகளைப் பார்த்துப் புன்முறுவலுடன், "நாம் யார் தலையில் கை வைக்கிறோமோ, அவர்களாலேயே பின்னல் கண்டிப்பாகக் கஷ்டம் அடைவோம். பின்னல் வரப்போகிறவர்களைப்பற்றிக் கவலைப்பட வேண்டு மென்பது என்ன அவசியம்?" என்றார்.

ஒரு சிப்பந்தி தைரியத்துடன், "துரையே! தாங்கள் எண்ணிக் கொண்டிருப்பதுபோல் இவர்கள் அவ்வளவு

ஏழைகள் அல்லர். இதெல்லாம் வெறும் வேஷம். இவர்கள் வழக்கமே இப்படித்தான். பார்த்தால் கொம்பில்லாத மாடுகளைப்போல்தான் இருப்பார்கள். ஆனால் உண்மையில் இவர்கள் ஒவ்வொருவரும் ஹைக்கோர்ட் வக்கீலைப்போல் செல்வ வாழ்க்கை நடத்துகின்றனர்" என்றான்.

ஆனால், அச் சிப்பந்தியின் தர்க்கவாதம் பண்டிதரிடம் பயன்பெற முடியவில்லை.

பண்டிதர் குடிமக்களின் க்ஷேமத்தையே கருத்தில் கொண்டார். அவர்கள் நோய் நொடியில்லாமல் இருக்க, வைத்திய உதவிகளும் செய்தார். காலை எட்டு மணிவரை நோயாளிகளைக் கவனித்து அவர்களுக்கு மருந்து முதலியவைகளை இலவசமாகக் கொடுப்பார். பிறகுதான் உத்தியோகக் காரியாலயக் கணக்கு வழக்குகளைக் கவனிக்கச் செல்வார்.

குடிகளின் விவசாய முன்னேற்ற விஷயத்திலும் அவர் இதே மாதிரியான சிரத்தையைக் காட்டினார்.

இதுவரை, ஜமீன்தாரின் நடவடிக்கைகளும் குடிகளுக்கு உதவி செய்யும் முறையும், சிறியதைக் கொடுத்துப் பெரியதை அபகரிக்கும் ரீதியில்தான் இருந்தது. ஆனால் இவரோ குடியான வர்களுக்கு விதைத் தானியங்களைக் கடனாகக் கொடுப்பார். ஏர் எருது வாங்கவும் கடன் தருவார். இதனால், சாந்த்பாரிலுள்ள குடிகள் யாவரும் இவருடைய கடன்காரர்களாகவே இருந்தனர். அறுவடைக் காலமானதும் இவர் கடனை வசூலித்துவிடுவார்.

அடை மழைக்காலம். எங்கும் ஜலப்பிரவாகம். நீர்நிலைகள் உடைப்பெடுத்து வெள்ளம் பெருகி, தோட்டம் துரவுகளைப் பாழ்படுத்திற்று. வேளாண்மை நாசமாயிற்று. குடிமக்கள், உண்ண உணவும் இருக்க இடமுமின்றித் தவித்தனர். வெள்ளத்திற்கு இரையாகாமல் தப்பித்தவறியிருந்த சொற்ப அறுவடையை அடுத்த பருவகாலம் வரை நம்பியிருந்தனர்.

ஆனால் ஜமீன்தார் நிலவரி வசூலையோ கடன் வசூலையோ கைவிடவில்லை. ஜனங்களும் கஷ்டப்பட்டு, சக்திக்கு ஏற்ற அளவு கொஞ்சம் கொஞ்சமாகச் செலுத்தலாயினர். சிலர் செலுத்த முடியாமலும் தவித்தனர்.

ஆனால் அதிகாரச் சக்கரம் சும்மா இருக்குமா? பூரா வரியையும் ஜமீன்தாரின் கடனையும் குறித்த காலத்தில் வசூலித்து

விடும்படி கண்டிப்பான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டனர். குடிகளோ தத்தளிக்கலாயினர். தங்கள் நிலை அப்போது படுமோசமாக இருந்ததால் தவணை கொடுக்கவேண்டுமென்று முறையிட்டனர். முறையீடு அதிகமாக அதிகமாக, வசூல் கொடுமைகளும் அதிகமானதுதான் கண்ட பலன். இக்கொடுமைகளைச் சகிக்க முடியாது குடிகள் ஜமீன்தாரிடம் நேரிலும் முறையிட்டுக்கொண்டனர். ஜமீன்தாருக்கோ தம் பணந்தான் பெரிதாகத் தோன்றிற்று. குடிகள் மனமுடைந்து எதிர்த்துப் பேசவும் துணிவுகொண்டனர். நாட்டாண்மைக்காரக் கிழவன், ஜமீன்தார் முன் சென்று, "மகாராஜ்! எங்கள் கஷ்ட நஷ்டம் தங்களுக்குத் தெரியாததல்ல. இப்போது எங்களைச் சித்திர வதை செய்தாலும் பணம் கிடைக்காது. இவ்வருடத்து விளைச்சலை வெள்ளம் அழித்துவிட்டது. அதுதானே எங்களுக்குச் சொத்து. அச்சொத்தே போனபின்பு எங்களால் கடனை எப்படிச் செலுத்த முடியும்? சாமி கண்திறந்தால் அடுத்த வருடம், இவ்வருடக் கடனையும் சேர்த்து, வட்டி முதலுடன் செலுத்திவிடுகிறோம். உத்தரவாகவேண்டும். இப்போது வரி செலுத்த எங்களுக்குச் சக்தியில்லை" என விண்ணப்பித்துக் கொண்டான்.

இதுகாலம் வரை, இம்மாதிரி ஜமீன்தார் உத்தரவை யாரும் எதிர்த்துப் பேசியது கிடையாது. அதனால் அவருக்கு அடங்காக் கோபமுண்டது.

ஜமீன் — கடனைச் செலுத்தாவிட்டால் நிலங்களைப் பிடுங்கி விடுவேன். பிரதிதினமும் இம்மாதிரிச் சாக்குப்போக்குகள் சொல்லி அழுவதே உங்களுக்குப் பிழைப்பாகிவிட்டது. வரி செலுத்தத் தடை சொன்னால் தண்டனை கிடைக்கும்.

ஒரு குடியானவன் — (வணக்கமாக) சிறைத் தண்டனையா? பேஷாய்க் கொடுங்கள். எங்களுக்கு வயிறு இருக்கிறது. சிறையில் சாப்பாடு இருக்கிறது. எங்களுக்கு வேறு என்ன வேண்டும்?

குடியானவர்கள் இப்படிக் குத்தலாகப் பேசினது ஜமீன்தாரால் பொறுக்க முடியவில்லை. கோபம் பொங்கிற்று. தலைமைக் கிழவனை வாய்க்குவந்தபடி திட்டி, "யாரது அங்கே! இந்தக் கிழவன் வாய்க்குவந்தபடி உளறிக்கொண்டிருக்கிறான். இவனை உதைத்து விரட்டுங்கள். எங்கே, ஒருவரும் இல்லையா?" என்று கர்ஜித்தார்.

குடியானவனைப் பயமுறுத்த எண்ணியே இவ்விதம் ஜமீன்தார் கூறினார். ஆனால், அவர் சிப்பந்திகளில் ஒருவனை

காதிர்கான், அவர் உத்தரவை உண்மையென எண்ணிக் கிழவன்மீது பாய்ந்து அவன் கழுத்தைப் பிடித்து, நெட்டித் தள்ளினான். தள்ளாத கிழவன் தரையில் தடாலென விழுந்தான். கிழவனின் இரண்டு குமாரர்களும் இதுவரை ஒன்றும் பேசாமல் பக்கத்தில் நின்றிருந்தனர். தங்கள் தகப்பன் கீழே தள்ளப்பட்டதும், அவர்களுடைய வாலிப ரத்தம் கொதித்தது. இருவரும் காதிர்கான்மேல் பாய்ந்து அவனை நையப் புடைத்தனர். அவன் அதிகாரத் தலைப்பாகை தரையில் உருண்டது. ஆடையும் கிழிந்தது. ஆனால் அவனுடைய அதிகார சப்தம் மாத்திரம் அடங்காது ஆக்ரோஷத்துடன் கிளம்பிற்று.

காரியம் முற்றிவிட்டதைக் கண்டு கிழக் குடியானவன் துடித்தான். தன் மக்களிடமிருந்து காதிர்கானைத் தப்புவித்து அவர்களைக் கண்டித்து அடக்கினான்.

காதிர்கான், ஜமீன்தார் காலில் விழுந்து அழுதான். கிழவன், நன்மை செய்யத்தான் தேடினான். அதிகார ஆதிக்கத்தைக் காப்பாற்றத்தான் தன் மக்களைக் கண்டித்து அடக்கினான். ஆனால் மூடரான ஜமீன்தாருக்கோ கிழவனின் இரக்க குணம் விஷமமாகத் தோற்றிற்று. மக்களைக் கிளப்பி விட்டுவிட்டுக் கிழவன் வேஷம் போடுவதாக அவர் எண்ணினார்போலும்.

ஜமீன்தார், கண்களில் நெருப்புப் பொறி பறக்கக் குடியானவனைப் பார்த்து, "துரோகி! என் கண்முன் நிற்காதே. போ வெளியே. இங்கே நின்றால் உன் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்துவிடுவேன். போ, போ வெளியே" என்று அதட்டினார்.

இந்த அநீதச் செய்கையைக் கண்டு, கிழவனின் இரத்தமும் கொஞ்சம் கொதிக்கலாயிற்று. ஜமீன்தார் நியாயம் வழங்குவாரென முதலில் அவன் எதிர்பார்த்தான். ஆனால் இப்போதோ அதற்கு முற்றிலும் விரோதமாக முடிந்தது. இருந்தும் கிழவன் தன் ஆத்திரத்தைக் காட்டவில்லை.

கிழவன்—எசமான்! இந்தத் தள்ளாத கிழவன் தங்கள் தலைவாசலில் விழுந்து கண்ணீர் விடுவதைக் கண்டும், தங்கள் மனமிரங்காது தூஷிக்கிறீர்களே!

ஜமீன்—இங்கே இனியும் தாமதித்தால் இருக்கும் மரியாதையும் கெட்டுவிடும். போ அப்பால்!

கிழவனுடைய மக்களின் உள்ளம் மீண்டும் கொதித்தது. இருவரும் ரோஷத்துடன் ஒரே சமயத்தில் ஜமீன்தாரைப் பார்த்து,

"எசமான்! எங்களிடமிருந்து பணத்தைத்தான் வாங்குவீர்களா, அல்லது எங்கள் மரியாதையைக்கூட வாங்கப்போகிறீர்களா?" என்றனர்.

ஜமீன்—(ஆக்ரோஷத்துடன்) பணம் பின்னுல் வாங்கத் தெரியும். முதலில் உங்களுடைய மரியாதையும் யோக்கியதையும் எவ்வளவிருக்கின்றன என்பதைப் பார்க்கப் போகிறேன்.

சாந்த்பார் குடியானவர்கள் மனமொடிந்து தம் கிராமம் திரும்பினர். பண்டித துர்க்காநாதரிடம் தங்கள் துரதிருஷ்டத்தையும் கொடுமையையும் முறையிட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது ஜமீன்தாரால் அனுப்பப்பட்ட சேவகன் அங்கே வந்து, பண்டிதரை ஜமீன்தார் அழைப்பதாகத் தெரிவித்தான். அவரும் உடனே குதிரையேறிச் சென்று அவர் முன் ஆஜரானர்.

துர்க்காநாத்தைக் கண்டதும் குமார் சிங்கின் கண்களில் நெருப்புப்பொறி பறந்தது. கோபத்தால் முகத்தில் ரத்தம் கொதித்தது. அப்போது அவருடைய முகத்தோற்றம் பயங்கரமாக இருந்தது. அவருக்கு முன்னுல் பற்பல அதிகாரிகளும் சிப்பந்திகளும் நின்று, ஜமீன்தாரின் கோபமாகிய அக்னிக்குத் தங்கள் கோள் வார்த்தைகளாகிய எண்ணெயை ஊற்றிக்கொண்டிருந்தனர்.

ஜமீன்தார் பண்டிதரைக் கண்டவுடன், "பார்த்தீரா! சாந்த்பார் குடியானவர்களின் நடத்தையை" என்ருர்.

துர்க்காநாத் வணக்கத்துடன், "கேள்விப்பட்டு மிகவும் வருத்த மடைந்தேன்" என்ருர்.

ஜமீன்—இது உங்கள் வேலையின் பலன்தான். நீர் இன்னும் பள்ளிக்கூடத்துப் பையனுகவே இருக்கிறீர். உலகம் எப்படி இருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியுமா? என்ன நடக்கிறதென்று அறிவீரா? நீர் இப்படிக் குடியானவர்களிடம் கையிரக்கமாக நடந்துகொண்டு வந்தால் நான் ஜமீன் வேலை பார்த்து ஒப்பேறின மாதிரிதான். இந்தப் போக்கிரித்தனத்துக்கு நீர்தான் காரணம். உம்முடைய வேலைதான் இதெல்லாம். இதோ, இதே கையால் எத்தனையோ பேரைக் கட்டியடித்திருக்கிறேன். அப்போது ஏனென்று கேட்டவர் யாருமில்லை. ஆனுல் இன்றைக்கோ, அதே பயல்களுக்கு எம்முடைய சிப்பந்திகளையும் கைதொட்டு அடிக்கத் தைரியம் வந்துவிட்டது.

துர்க்கா—(தயக்கத்துடன்) எஜமான்! இதில் என்மேல் என்ன குற்றம் இருக்கிறது? இச்சம்பவத்தைக் கேட்டதுமுதல் நான் கவலையில் ஆழ்ந்திருக்கிறேன்.

ஜமீன்—இது உங்கள் தப்பிதமல்லவானுல் பின் யாருடையது? அந்தப் பயல்களுக்கு இவ்வளவு தைரியத்தை உண்டாக்கினது நீர்தானே? அவர்கள் உம்மோடு பிறந்த அண்ணன் தம்பிகளென எண்ணி, உத்தியோக மரியாதையோ, கட்டுப்பாடோ இல்லாமல் நீர் நடந்துகொண்டீர். உம்முடன் சமமாக எண்ணி அவர்களுடன் நீர் கேலி விளையாட்டுகளும் விளையாடுகிறீர். யார் யாரிடம் எப்படி எப்படி நடக்க வேண்டுமென்பது உமக்கு எப்படித் தெரியும்? பள்ளிப்படிப்பு புள்ளிக்குதவுமா? உலக விவகாரப் படிப்பு வேறு. (சற்றுநேரம் மௌனமாயிருந்து) சரி, நடந்தது நடந்துவிட்டது. இந்தப் போக்கிரிகளுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும். தீர்வை செலுத்தினதற்கு அவர்களுக்கு ரசீது கொடுக்கவில்லை யல்லவா?

துர்க்கா—(பயத்துடன்) இன்னும் இல்லை. ரசீதுகள் தயாராக இருக்கின்றன. தங்களுடைய கையெழுத்துதான் பாக்கி.

ஜமீன்—(சிறிது சந்தோஷமுற்று) நல்லதாயிற்று. இதுவும் நல்ல சகுனந்தான். இவர்களிடம் மறுபடியும் வரிவசூல் செய்ய வேண்டும். பணம் தந்தவர்களிடம், தானியங்களும் வாங்கிவிட வேண்டும்.

துர்க்காநாத்தின் முகம் சடக்கெனக் கவலைத் தோற்றத்தைக் கொண்டது. அவர் ஆழ்ந்த யோசனையில் மூழ்கினுர்.

'இங்கேயும் கூடவா இவ்வளவு ஆபத்திருக்கிறது? ஏழைகளுக்கு உதவிசெய்ய வேண்டுமென எவ்வளவோ யோசித்தும் கடைசியில் இந்த வேலைக்குத்தானு வந்துசேர்ந்தோம்? நேருக்குநேர் ஏழைகளை வாட்டும் வேலையைத்தானு ஏற்றுக் கொள்ளவேண்டும்?'

இவ்வாறு எண்ணிய துர்க்காநாத் ஜமீன்தாரைப் பார்த்து, "என்ன! வேண்டுமென்ரு ஏழைகளின் கழுத்தில் கைவைப்பது? இந்த வேலை இதற்குத்தானு? இதை என்னுல் செய்ய முடியாது" என்ருர்.

ஜமீன்—இவ்வளவு சொல்லியுமா ஆக்ஷேபனை செய்கிறீர்?

துர்க்கா—ஐயா! என்ன செய்வதென்று எனக்குத் தோன்றவில்லை. நான் தங்களுடைய உப்பைத் தின்றவன். ஆனுல்,

நியாய விரோதமாக அடிமைப்புத்தி காட்ட என்னுல் முடியாது. இந்தமாதிரிக் கெடுபிடி வேலையை என்னுல் செய்ய முடியாது என்று நினைக்கிறேன். என்னை மன்னிக்கவேண்டும்.

ஜமீன்—(அதிகார தோரணையில்) இதை நீர்தான் செய்தாக வேண்டும். அப்படியிப்படி யென்று சாக்குச் சொல்லவேண்டிய அவசியமே இல்லை. (சற்று அன்பான குரலில்) அப்பனே, இது நியாயவிரோதமல்ல. இதில் பொய்யொன்றுமில்லை. நான் எப்போதும் பொய்யான காரியத்தில் பிரவேசிக்க மாட்டேன். ரூபாய் வசூலானதை வரவு வைத்துக்கொள்ள வேண்டாமென்ருே வாங்கவில்லையென்று மறுத்துப் பொய் சொல்லும்படியோ நான் கூறவில்லை. எனக்கு அவர்களால் ஏராளமான கடன் வசூலாக வேண்டியிருக்கிறது. அத்தொகையை அவர்கள் ரொக்கமாகக் கொடுத்துத் தீர்க்க முடியாவிட்டால், தானியமாக வசூலிக்கவோ, அல்லது அவர்கள் சொத்தைச் சுவாதீனம் செய்து கொள்ளவோ எனக்கு அதிகாரம் இருக்கிறது. இந்தச் சட்ட ரீதியான நடவடிக்கையை நீர் தவருக அர்த்தம் செய்துகொண்டால் அது உமது அறியாமையே யாகும். இன்னும் நீர் உலகத்தைச் சரிவர அறிந்துகொள்ளவில்லை. அந்த அனுபவம் இருந்தால் நீர் இப்படிக் குதர்க்கமாகப் பேசமாட்டீர். உண்மைக்கு இவ்வுலகம் தகுந்த இடமல்ல.

நீர் எம்மிடம் சிப்பந்தியாக உத்தியோகம் பார்க்கிறீர். ஒரு கீழ்த்தர உத்தியோகஸ்தன் மேலதிகாரியிடம் எவ்விதம் நடந்து கொள்ளுவானே அம்மாதிரி நீர் எம்மிடம் நடந்துகொண்டால் போதும். நீரோ கற்ற அறிஞர்; வாலிபர். உலக அனுபவத்தை அதிக நாள் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். இப்போதே நியாயத்தையும் சத்தியத்தையும் அச்சுப் பிசகாமல் கையாண்டால், வாழ்க்கையில் துன்பத்தையும் சஞ்சலத்தையும் தவிர்த்து வேறு பலன் பெறமுடியாது.

உண்மையாக நடப்பது நல்லதுதான். ஆனுல் அதற்கும் ஓர் அளவு வேண்டும். அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சாகும். இப்போது சத்தியம் நியாயம் இவைகளைப்பற்றி யோசிப்பதற்கு அவகாசம் இல்லை. நிலைமையோ மோசமாக இருக்கிறது. அதனுல், இந்நிலைமையைச் சமாளித்துத் தகுந்தபடி நடந்துகொள்ள முயற்சி செய்யும்.

* * *

குமார் சிங் பழம்புலி. குடிகளிடம் தயை காட்டினுல் தம் கஜானு காலியாகக் கிடக்கவேண்டிவரும் என்பதை

அறிந்தவர். நயத்தாலோ, பயத்தாலோ பணத்தை வசூல் செய்யும்படி செய்வதே அவர் நோக்கம். பலர் கஷ்டப்பட்டால் தானே ஒருவர் சுகிக்க முடியும்?

இச்சம்பவம் நடந்து மூன்று நாட்களுக்குப்பின், வரி நிலுவைக்காகச் சாந்த்பார் குடியானவர்கள்மேல் தாவா செய்யப்பட்டது. சம்மனும் பட்டுவாடா செய்யப்பட்டது. சம்மனைக் கண்டு குடியானவர்கள், ஆண் பெண் யாவரும் துக்கத்தில் ஆழ்ந்தனர். தங்களை இக்கஷ்டங்களிலிருந்து தப்புவிக்கும்படி கடவுளை வேண்டினர். பெண்களோ, புருஷர்களைக் கடிந்து கொண்டனர். புருஷர்களோ தங்கள் துரதிருஷ்டத்தை நினைத்து மனம் நொந்தனர்.

விசாரணைக்குக் குறிப்பிட்ட நாள் வந்தது. சாந்த்பார் குடியானவர்கள் எல்லோருமே கடலைப் பொரிகளை வாங்கித் துணியில் முடிந்துகொண்டு கோர்ட்டுக்குச் சென்றனர். நூற்றுக் கணக்கான பெண்கள் குழந்தை குட்டிகளை கையில் பிடித்துக் கொண்டு புருஷர்களைப் பின்தொடர்ந்து வந்தனர்.

'இந்தக் கேஸில் தண்டனைதான் கிடைக்கும். இனிமேல் நம்முடைய புருஷனையோ, மக்களையோ, தகப்பனையோ சந்திக்க முடியாது' என்று பெண்கள் எண்ணிவிட்டனர். ஆண்கள் சிறைசெல்லும் முன்னர் அவர்கள் முகத்தைக் கடைசியாகப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆசைகொண்டே பெண்களும் கோர்ட்டுக்கு வந்தனர்.

பண்டித துர்க்காநாத்திற்கோ இந்த மூன்று நாட்களும் பெரிய சோதனை நாட்களாக இருந்தன. ஒரு பக்கம் குமார் சிங்கின் அதிகாரம். மற்றொரு பக்கம் ஏழைக் குடியானவர்களின் கண்ணீர்.

பண்டிதரின் ஆத்மாவிற்கு இது முதல் பரீட்சை. இந்தப் பரீக்ஷையில் தோல்வியுற்றால் இந்தப் பலவீனம் எப்போதும் இருக்கும். தம் ஒருவர் சொந்த லாபத்திற்காக இத்தனை ஏழைக் குடியானவர்களுக்குத் துன்பம் விளைவிக்கலாமா என்று நிதானமாக யோசித்து நியாயத்தை அறிந்து நடக்கும்படி அவருடைய அந்தராத்மா அறிவுறுத்தியது.

காலை மணி பத்து இருக்கும். கச்சேரியின்முன், தேர்க் கூட்டம்போல ஜனங்கள் கூடிவிட்டனர். எங்கே பார்த்தாலும் தெய்வத்தைப் பூஜிப்பவர்களும், நிந்திப்பவர்களுமே. கச்சேரிக்கு

வெளியே மரத்தடிகளில் சாந்த்பார் குடியானவர்கள் விசாரணை நேரத்தை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தனர்.

கச்சேரி மண்டபத்திற்குச் சமீபத்தில் குமார் சிங், அவருடைய கணக்குப் பிள்ளைகள், சிப்பந்திகள், சாக்ஷிகள் முதலியோர் உட்கார்ந்திருந்தனர். தண்ணீரில் மீன்கள் குதூகலிப்பதுபோல் ஜமீன்தார் கோஷ்டியினர் ஆனந்தமாக இருந்தனர். இவர்களில் சிலர், வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டும், சிலர் பக்ஷணங்களை வாங்கித் தின்றுகொண்டும் குதூகலமாக இருந்தனர்.

ஏழைக் குடியானவர்களோ, தங்கள் கதி யாதாகுமோ எனத் திகிலும் கவலையுங்கொண்டு தவித்துக்கொண்டிருந்தனர்.

கடவுள்மேலும், தலைவிதியின்மேலும் பாரத்தைப் போட்டு விட்டு, வருவது வரட்டும் என்று தைரியம் பேசிக் கொண்டிருந்தனர் சிலர். கோர்ட்டு கூடி விசாரணையும் ஆரம்பமாயிற்று. வாதி தரப்பில், குமார் சிங்கும் சிப்பந்திகள் முதலியோரும் விசாரிக்கப்பட்டனர். அவர்கள் எதிரிகளான சாந்த்பார் குடியானவர்கள் வரியைச் செலுத்த மறுத்துக் கலகம் செய்து அடித்ததாகக் கூறித் தங்கள் தங்கள் தேகத்தில் ஏற்பட்ட காயங்களையும் காட்டினர். காதிர்கான் தன் தலையில் பட்ட காயத்தைக் காட்டி அழுதுகொண்டு சாக்ஷி கூறினான்.

பின்னர் பண்டிதர் துர்க்காநாத் விசாரிக்கப்பட்டார்.

பண்டிதர் என்ன கூறப்போகிறாரோ எனக் குடியானவர்கள் ஆவலுடன் அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தனர். விசாரணைக்கு முன்னர், வாதி தரப்பு வக்கீல், மற்ற சிப்பந்திகளுக்குப் போதித்ததுபோலவே பண்டிதருக்கும் இப்படிச் சாக்ஷி கூறவேண்டுமெனத் தெரிவித்திருந்தார்.

பண்டிதர் பேசிய முதல் வார்த்தையைக் கேட்டவுடனேயே, மாஜிஸ்திரேட் அவரைக் கூர்ந்து கவனிக்கலானார். வக்கீலுக்கோ திகில் உண்டாய்விட்டது. மற்ற ஜமீன் சிப்பந்திகளும் ஜமீன்தாரும் அவரைத் திகிலுடன் பார்த்தனர். கோர்ட்டிலிருந்த அனைவரும் ஆச்சரியத்துடன் அவரை நோக்கினர்.

மாஜிஸ்திரேட் — (அதிகார தோரணையில்) நீர் கோர்ட்டார் முன் விசாரணையிலிருக்கிறீர் என்பதைத் தெரிந்து கொண்டிருப்பீர்.

துர்க்காநாத் — ஆம், நன்றாகத் தெரியும்.

மாஜிஸ் — உம்மீது நம்பிக்கை மோசடிக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

துர்க்கா — ஆம், என் வாக்குமூலம் பொய்யாய் இருக்கும் பக்ஷத்தில்.

வாதி வக்கீல் — இவர் பிரதிவாதிகள் கொடுத்த நெய் பால் முதலிய பொருள்களைச் சாப்பிட்டிருப்பதால் அவர்களுக்கு விரோதம் செய்யக்கூடாதென இப்படிக் கூறுகிறார்.

துர்க்கா — உங்களுக்கு இந்தப் பொருள்களின்மீது அதிக ஆசையிருக்கலாம். ஆனால் எனக்கோ, காய்ந்த ரொட்டியின் பேரில்தான் பிரியம்.

மாஜிஸ் — சாந்த்பார் குடியானவர்கள் வரிப் பாக்கிகளை எல்லாம் கொடுத்துவிட்டார்களா?

துர்க்கா — ஆம். இனி அவர்கள் கொடுக்கவேண்டிய வரி ஒரு தம்பிடிகூட இல்லை.

மாஜிஸ் — அப்படியானால் ரசீது ஏன் கொடுக்கவில்லை?

துர்க்கா — எங்கள் எஜமான் கட்டளை அப்படி.

பின்னர் இருதரப்பையும் தீர விசாரித்து, மாஜிஸ்திரேட் கேஸைத் தள்ளுபடி செய்துவிட்டார். இந்தத் தீர்ப்பைக் கேட்டவுடனே குமார் சிங்குக்கு அளவுகடந்த கோபமும் ஆத்திரமும் உண்டாயின. பண்டிதரை மட்டுமரியாதையில்லாமல் திட்ட ஆரம்பித்தார்.

"அயோக்கியன்! துரோகி! என் உப்பைத் தின்றுவிட்டு எனக்கே படுதுரோகம் செய்தான். நான் அவனை எவ்வளவோ மரியாதையாக நடத்தினேன். நாய்வாலை, எவ்வளவு முயற்சி எடுத்து நேராக இருக்கும்படி நிமிர்த்தினாலும் நிமிரவா போகிறது? படு துரோகிப் பயல்!" எனக் கூறிப் பிரலாபிக்கலானார்.

மாஜிஸ்திரேட்டின் தீர்ப்பைக் கேட்டதும், பண்டிதர் தன் உத்தியோகச் சின்னங்களையெல்லாம் கணக்குப் பிள்ளை மூலம் ஜமீன்தாரிடம் சேர்ப்பிக்கும்படி அனுப்பிவிட்டுத் தமக்கு அவ்வுத்தியோகம் வேண்டாமென்று ராஜிநாமாவும் எழுதியனுப்பி விட்டார்.

ஜமீன்தாருக்குக் கொடுக்கல் வாங்கல்கள் சாந்த்பார் பிர்க்காவில்தான் அதிகமிருந்தன. ஏனெனில், அதுதான் அந்த ஜமீனில் பெரிய பிர்க்கா. ஆயிரக்கணக்கான ரூபாய் அப்போது அவர்களிடம் கடனாக நின்று கிடந்தது. இந்தக் கேஸ் முடிவிற்குப்பின் அக்குடியானவர்கள் கடனையும் கொடுக்கக் கூடாதென அபிப்பிராயம் கொண்டனர்.

"இந்தத் துர்க்காநாத் துரோகிப் பயல், குடியானவர்களை யெல்லாம் கெடுத்து விட்டான். இனிமேல் அவர்கள் என்னைக் கண்டு பயப்படப் போவதில்லை. நம் சிப்பந்திகளும், 'அவர்களிடம் கடன் வசூலிப்பது கஷ்டந்தான்' என்று கூறிவிட்டனர். அந்தோ! கொஞ்சமா? ஆயிரக்கணக்கான ரூபாய்கள்! அடியோடு போகவா? கோர்ட்டில் தாவா செய்தால், ஸ்டாம்ப் பீஸ் வேறு கொட்டியழவேண்டும். அப்படிச் செலவு செய்தாலும் வசூலாவது கஷ்டமென்றுதான் தோன்றுகிறது. இந்தப் பள்ளிக்கூடப் பயலை, யோசனையில்லாமல் வேலைக்கு வைத்துக்கொண்டதால் எவ்வளவு தொல்லைகளும் கஷ்டநஷ்டங்களும் வந்துசேர்ந்தன!"

இவ்வாறு எண்ணி எண்ணி மனம் புண்ணாகித் தவித்துக் கொண்டிருந்தார் ஜமீன்தார் குமார் சிங்.

அச்சமயம் ஒரு பெருங்கூட்டம் அவர் மாளிகையை நோக்கி வந்தது. கூர்ந்து பார்த்தார். ஐயோ! சாந்த்பார் குடியானவர்கள். அவருக்குத் திகில் உண்டாகிவிட்டது. தன்னை அடித்துக் கொல்லத்தான் அவர்கள் வருகிறார்கள் என எண்ணிப் பயந்தார். அவர்களும் நெருங்கி வந்துவிட்டனர். ஆனால் அவர்கள் கையில் கொலை செய்வதற்கான ஆயுதங்களாவது தடிகளாவது இல்லை. அவர் மனம் கொஞ்சம் தைரியம் கொண்டது. இவைகள் எல்லாம் அவருக்குக் கனவுபோல் தோன்றின.

குடியானவர்கள், ஜமீன்தாரை நெருங்கிப் பயபக்தியுடன் நின்று, "எஜமான்! நாங்கள் தெரியாத்தனத்தால் செய்த தப்பிதங்களை மன்னிக்கவேண்டும். நாங்கள் எப்போதும் தங்களுடைய ஊழியர்கள்தாம். தங்கள் சௌக்கியமே எங்கள் பாக்கியம். எங்களைக் காப்பாற்றும் தெய்வமும் தாங்களே. இனிமேலும் எங்களைக் கைவிடக்கூடாது" என்று விண்ணப்பித்துக்கொண்டனர்.

ஜமீன்தார் சிறிது சந்தோஷமுற்றார். 'அந்தப் பண்டிதர் போன பின்பு இவர்களுக்குப் புத்தி வந்தது. அந்தப் பொடிப் பயலின் பேச்சைக் கேட்டல்லவா இவர்கள் புத்திகெட்டு நடந்து

கொண்டனர். இப்போது உதவியாக நிற்க யாரும் இல்லையென்று கண்டதும் நம் காலடியில் வந்து சரணடைகிறார்கள். இருந்தும் இவர்களைச் சிறிது விரட்டிப் புத்தி கற்பிக்கவேண்டும்' என்று மனத்துள் எண்ணி, அவர்களை நோக்கி, "எங்கே உங்கள் பண்டிதர்? அவன் பேச்சைக் கேட்டதன் பலனைக் கைமேல் கண்டீர்களா? இப்போதாவது புத்தி வந்ததே! அதுவே உங்கள் அதிர்ஷ்டம். அந்தப் பயலுடன் உங்களைப் பிடித்த சனியனும் ஒழிந்தது. இனி மேல் அவன் இந்தப் பக்கம் வந்தால் என்னிடம் தெரிவியுங்கள்" என்றார்.

பண்டிதரை இழிவாகப் பேசியதைக் கேட்டதும், அக்குடியானவர்கள் கண்களில் கண்ணீர் பெருக, "எசமான்! அவரை இழிவாகச் சொல்லவேண்டாம். அவர் சாதாரண மனிதப் பிறவியல்ல. எங்களை நல்வழிப்படுத்த வந்த தெய்வம். நீதியை நிலைநாட்ட வந்த மகாத்மா. அவர் எங்களைவிட்டுப் பிரியும்போது, 'எசமானுக்குக் கொடுக்கவேண்டிய பாக்கியைக் கணக்குப் பார்த்துச் செலுத்திவிடுங்கள்' என்று உத்தரவிட்டுப் போனார். நாங்கள் அவர் உத்தரவைத் தெய்வ வாக்காகக்கொண்டு மரம் மட்டை ஆடுமாடு இவைகளையும் விற்றுக் கடன் பாக்கியைக் கொண்டு வந்திருக்கிறோம். இதோ வாங்கிக் கொள்ளுங்கள். எங்கள் கடனைத் தம்பிடி பாக்கியில்லாமல் செலுத்திவிடுகிறோம்" என்றனர்.

இதைக் கேட்டதும் குமார் சிங்கின் மனத்தில் பெரியதொரு மாறுதல் ஏற்பட்டது. பணம் பணம் என்று தவித்த பித்தம் இறங்கிவிட்டது. பண்டிதரின் பரிசுத்த உருவம் அவர் அகக்கண் முன் தோன்றிற்று. கடின சித்தத்தில் பச்சாத்தாபம் ஆனந்தக் கூத்தாடத் தொடங்கிற்று.

'முன்பெல்லாம் இந்தப் பணத்துக்காக எத்தனை வயல்களை அழிக்க நேர்ந்தது! எத்தனை வீடுகளை நெருப்பிட்டு நாசம் செய்தோம்! எத்தனை பேரைச் சித்திரவதை செய்தோம்! எத்தனை பேர் கடுந்தண்டனை அடைந்தனர்! நம்மால் கொடுமைக்குள்ளான அவர்களே, இப்போது நம்மீது பச்சாத்தாபங்கொண்டு நமக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைப் பைசா பாக்கியில்லாமல் செலுத்த முன்வந்திருக்கின்றனர்' என்று எண்ணி மனம் உருகினார்.

கணக்குப் பிள்ளைகள், கணக்குப் பார்த்துப் பணத்தை வாங்கினர். ஒரு பைசா பாக்கியின்றிச் செலுத்தப்பட்டது. ஒரு

விநாடிக்குள் கடன் பூராவும் வசூலாகிவிட்டது. இது உண்மையின் வெற்றி; அன்பின் பரிசு. கொடுங்கோன்மையும் பலவந்தமும் எக்காலத்தும் வெற்றி பெறு. நியாயமும் நீதியும் பச்சாத்தாபமுமே எப்போதும் வெற்றி பெறும்.

அன்று அநியாயமாகக் குடியானவர்கள் கோர்ட்டிற்கு இழுக்கப்பட்டனர். வழக்கு நியாயமற்றதென விளங்கவே தீர்ப்பும் குடியானவர்களுக்குச் சாதகமாகக் கிடைத்தது.

ஆனல் அவர்கள் கடனைச் செலுத்தக்கூடாதென மனப் பூர்வமாக எண்ணவில்லை. கொஞ்சநாள் கழித்தாயினும் எசமான் கடனைச் செலுத்திவிடவேண்டு மென்றுதான் தீர்மானித்தனர். அவர்களுக்குத் தெய்வம்போல் உதவிபுரிந்த பண்டிதரும் கடனைச் செலுத்திவிடும்படி கேட்டுக் கொண்டார். பண்டிதர் வாக்கு அவர்களுக்குக் கடவுள் வாக்கு. அதனல் அந்த நிமிஷம் முதல் கடனைச் செலுத்தத் தீவிர ஏற்பாடுகள் செய்தனர். விற்கக் கூடியவைகளையெல்லாம் விற்றுப் பணமாக்கினர். சிலர், தங்கள் சாப்பாட்டுக்காக வைத்திருந்த தானியங்களையும் விற்றனர். சிலர் ஆடுமாடுகளை விற்றனர். நகை நட்டுகளை விற்றும் பணம் ஆக்கினர். வெகு சீக்கிரத்தில் பணம் தயாரித்து ஜமீன்தாரிடம் வந்து பைசாவாரியாகக் கடனைச் செலுத்திவிட்டனர்.

இந்த ஆச்சரிய சம்பவத்தைக் கண்டதும், ஜமீன்தாருக்குப் பண்டிதர் மேலிருந்த கெட்ட அபிப்பிராயம் ஓடி மறைந்தது. பணம் செலுத்தியதுமல்லாமல், ஜமீன்தாருக்குத் தொண்டு செய்யவும் சிலர் முன்வந்தனர். உண்மையிலும் நேர்மையிலும் ஜமீன்தாருக்கு இதுவரை நம்பிக்கை இருந்ததில்லை. இப்போதோ உண்மையிலும் நேர்மையிலும் அன்பிலும்தான் விசேஷ சக்தி யிருக்கிறதென்பதை பிரத்தியக்ஷமாகக் கண்டுகொண்டார். இருந்தும், அவருடைய பழைய மனப்பான்மையும், தன் தப்பிதத்தை ஒப்புக்கொள்ளாத அதிகார ஆணவமும் அவரை அடியோடு விட்டு நீங்கவில்லை.

'பண்டிதர் ஏன் உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்து விட்டுப்போனர்? அவருக்கு நான் என்ன கொடுமை செய்தேன்? தப்பிதம் கண்டு கண்டித்தாலும் அடுத்தபடி அன்பும் காட்டி ஆதரவளித்தேனே. அவருக்கும் அதிர்ஷ்டம் அவ்வளவுதான். நன்மையைவிட்டுக் கஷ்டத்தை விலைக்கு வாங்குவதுதான் சாதாரண மனிதர்களின் சுபாவம். சிலருடைய இயற்கைக் குணம் அப்படித்தான். ஆனல் பண்டிதர் நேர்மையும்

நாணயமும் வாய்ந்தவர் என்பதில் சந்தேகமில்லை' என்று எண்ணமிட்டார்.

எவ்வளவு நல்ல பொருளாக இருந்தாலும் சரி; எப்போது நமக்கு அவசியம் நேரிடுகிறதோ அப்போதுதான் அதைக் கவனிக்கிறோம். அவசியம் நேரும்போது கேவலம் சாதாரணமான ஒரு பச்சை இலைகூடப் பவுனைப்போன்ற மதிப்பைப் பெறுகிறது. பண்டிதரின் உத்தம குணத்தைக் கவிஞனுல்கூடச் சித்திரிக்க இயலாது. சாந்த்பார் குடியானவர்கள் இப்போது தங்கள் எஜமானனை எந்த விதத்திலும் தொந்தரவு செய்வதில்லை. ஆனுல் அடுத்துள்ள மற்றக் கிராமவாசிகளோ சதா சண்டையும் சச்சரவும் செய்தவண்ண மிருந்தனர். தாவாக்களுக்கும் அடிதடிகளுக்கும் அங்கே குறைவே இல்லை. இவைகளெல்லாம் ஜமீன்தாரின் லீலா விநோதச் சூழ்ச்சிகளென்றும் கூறலாம். ஏனெனில், இவைகள் இல்லாவிட்டால் ஜமீன்தாருக்கு வேலை ஏது? நாள் முழுவதும் சோபாக்களில் சாய்ந்துகொண்டு புத்தகங்களைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கவேண்டும். இதுதான் குமார் சிங்கின் உத்தியோக ரகசியம்.

இவ்வாறு பல வருடங்கள் கடந்தன. ஜமீன்தாரின் செல்வமும் பலவிதங்களிலும் பெருகிக்கொண்டே வந்தது. தம் ஐந்து பெண் குழந்தைகளுக்கும் அவர் தடபுடலாகக் கல்யாணம் செய்துவைத்தார். இருந்தும் அவர் செல்வம் கொஞ்சமும் குறையவில்லை. ஆனுல், அவருடைய உடம்புதான் பலஹீனமடையத் தொடங்கிற்று. வயது ஏறினுல் உடம்பும் தளரும் அல்லவா? தமக்குப்பின் தம் செல்வத்தை அனுபவிக்க ஓர் ஆண் குழந்தை இல்லையே என்ற கவலை அவரை வாட்டி யுருக்கி வந்தது. அவருடைய மருமக்களும் தாயாதிகளும் அவருடைய செல்வத்தைக் கவரச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர். இவர் சீக்கிரம் கண்மூட மாட்டாரா என்பதே அவர்களுக்குக் கவலை.

'ஐயோ! நாம் எவ்வளவோ கஷ்டப்பட்டுச் சேர்த்த செல்வத்தைப் பிறர் அனுபவிக்க அநியாயமாக விட்டுவிட்டுச் செல்ல நேர்ந்ததே!' என்ற பெருங் கவலையே ஜமீன்தாரை வாட்டி வந்தது. கண் கெட்டபின் சூரிய நமஸ்காரமா? இப்போது இந்தக் கடைசிக் காலத்தில் வருந்திப் பயன் என்ன?

இந்தக் கவலையின் பயனுல்தானே என்னவோ, இப்போது குமார் சிங்கின் வாழ்க்கையில் புதியதொரு மாறுதல் ஏற்பட்டது.

யாராவது சாதுக்களைக் கண்டால், உடனே பகவத் கீதையையும் ராமாயணத்தையும் எடுத்து வாசிக்கத் தொடங்கிவிடுவார். தெய்வ பக்தியிலும் ஆராதனைகளிலும் தீவிரப் பற்றுக்கொண்டு விட்டார்.

இந்தப் பக்தியைக் கண்டுதான் கடவுள் இரக்கம் கொண்டாரோ என்னவோ? அவருடைய வயோதிக காலத்தில் அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அவருடைய லக்ஷ்யமும் பூர்த்தி யடைந்தது. இந்தச் சந்தோஷம் கொஞ்ச நேரந்தான் இருந்தது. மறுபடியும் அவரைக் கவலை பிடித்துக்கொண்டது. நோய் நொடிகள் அவரைப் பிடித்து வாட்டலாயின. மருத்துவரும் வைத்தியர்களும் பக்கத்தில் இருந்துகொண்டே யிருக்கவேண்டி யிருந்தது. வைத்தியர்களின் உதவியால் அவர் எந்தவிதப் பயனும் அடைய முடியவில்லை. தம்முடைய அந்தியகாலம் நெருங்கி விட்டதென்பதையும் தெரிந்துகொண்டார். தம் சிறு மகனைப் பற்றிய கவலை பாசம்போல் அவரைப் பற்றிக்கொண்டது.

'அவனோ சிறு குழந்தை. இப்போது திடீரென நான் கண்மூடிவிட்டால் அவனைக் கவனிப்பார் யார்? ஜமீனையும் சொத்துக்களையும் காப்பாற்றி, அவனை நல்ல வழியில் வளர்த்து முன்னுக்குக் கொண்டுவரக் கூடியவர்கள் யாரிருக்கின்றனர்? அவனுடைய மழலைச் சொற்களைக் கேட்டு மகிழவும் அதிக நாட்கள் கொடுத்து வைக்கவில்லையே. என் ஆருயிர்ச் செல்வனை யாரிடம் ஒப்புவிப்பேன்? தாயோ உலகம் அறியாத பெண்பிள்ளை. இந்த ஜமீனைப் பராமரிக்க அவளால் எப்படி முடியும்? நிர்வாக வியவகாரம் என்ன என்பதே அவளுக்குத் தெரியாதே. பெண்பிள்ளையின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டோ, அல்லது அவளிடம் பரிதாபப்பட்டோ உண்மையாகப் பாடுபடுபவர்கள் யார் இருக்கின்றனர்? இப்போதுள்ள குமாஸ்தாக்கள், கணக்குப் பிள்ளைகள், மற்றச் சிப்பந்திகள் அவ்வளவு பேரும் சுயநலமிகள்தாம். இவர்களை நம்பினால் வெகு சீக்கிரத்தில் சொத்துக்களைச் சூறையாடி ஜமீனை அழித்தே விடுவார்கள். கொஞ்சமும் நம்பிக்கை கொள்வதற்கு ஒற்றை ஆள்கூடக் கிடையாது. எல்லாம் வடிகட்டி எடுத்த படு துரோகிகள். ஜமீனைக் கோர்ட் - ஆப் - வார்ட்ஸில் ஒப்புவித்தால் அதுவும் தொல்லைதான். அடிக்கடி மாறும் உத்தியோகஸ்தர்களே இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சமாக அதிகார தோரணையில் தட்டிக்கொள்ளுவார்கள்.

'ஐயோ, கொடுமையே! என் பச்சிளங் குழந்தையையும் கஷ்டப்பட்டுச் சேர்த்த செல்வத்தையும் ஜமீனையும் அநாதரவாக விட்டுச் செல்ல நேர்ந்ததே! அவனைப் பராமரிப்பவர்கள் யார்? சூழ்ந்துள்ள துரோகிகளின் கையில் பட்டுத் தவிக்கும்படி அவனை அநாதையாகவா விட்டுச் செல்வேன்?

'எனக்கு ஒரு நல்ல மாணிக்கம் கிடைத்தது. ஆனால் அதை நான் செல்லாக் காசாக மதித்துவிட்டேன். எவ்வளவு உண்மையான உழைப்பாளி! களங்கமற்ற தொண்டன்! எவ்வளவு நம்பிக்கையான ஊழியன்! ஐயோ! அந்தப் பண்டிதரை என் துரதிருஷ்ட வசத்தால் இழந்துவிட்டேனே. அவர் மறுபடியும் கிடைத்தால் அவரிடம் என் செல்வனையும் சொத்தையும் தைரியமாக ஒப்புவித்துச் செல்லலாம். ஆனால் அவர் இனிக் கிடைப்பாரோ? கிடைத்தாலும் அவர் மனம் எப்படியிருக்கிறதோ? நான் செய்த அநீதிக்காக என்மேல் இன்னும் வெறுப்புக் கொண்டிருப்பாரோ? இல்லை, இல்லை; இராது. அவருடைய புனித உள்ளத்தில் சினம் இடம்பெற முடியாது. அவர் உள்ளத்தில் கருணை உண்டு; இரக்கம் உண்டு. அவர் இந்த அநாதைச் சிறுவனைக் காப்பாற்றத் தடையில்லாமல் ஒப்புக்கொள்ளுவார். தம் சொந்த உயிரைப்போல் பராமரிப்பார்.

'அந்தப் புண்ணியவானின் தரிசனம் எப்போது கிடைக்குமோ? அவருடைய திருவடிகளில் பட்ட தூசியையும் திருநீருக அணிந்துகொள்வேனே? அவருடைய பாதங்களில் நமஸ்கரித்துக் கண்களில் ஒற்றிக்கொள்ளவும் தயார். அவருடைய திருவடிகளுக்கு அபிஷேகம் செய்து பூஜிப்பேன். ஆனால் அவர்.......அகப்படுவாரோ? அகப்பட்டால் கொந்தளிக்கும் கவலைக் கடலிலிருந்து நான் கரையேறுவேன்' என்று எண்ணி எண்ணி ஜமீன்தார் துயரக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தார்.

குமார் சிங்கின் நிலைமை தினேதினே மோசமாகிக் கொண்டே வந்தது. கடைசிக் காலமும் நெருங்கிவிட்டது. பண்டிதரைப்பற்றிய ஞாபகமோ அவர் மனத்தைவிட்டு நீங்கவே இல்லை. தம் ஏகபுத்திரனை, பச்சிளங் குழந்தையைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, அவனுடைய அநாதரவு நிலைமையை எண்ணி எண்ணிப் பெருமூச்சுவிட்டுத் தளர்கிருர். அவனை அடிக்கடி தன் மார்போடணைத்து மனச் சாந்தியை அடைய முயலுகிருர். ஆனல் கவலையோ, இவற்ருல் அக்னியில் நெய் வார்த்ததுபோல் அதிகமாகத்தான் வளருகிறது.

"ஹா! அந்த உருவத்தை என்று காண்பேன்? அவரைத் தேடிப் பிடித்து அழைத்துவந்தால் என் செல்வத்தில் பாதியையும் கொடுத்துவிடலாமே. உண்மை அன்புள்ள பண்டிதரே! என் குற்றத்தை மன்னிப்பீராக. நான் அறிவிலி. ஞானக்கண் கெட்ட குருடன். என்னை இந்தச் சங்கடத்தினின்றும் காப்பாற்றும். இந்த அநாதைச் சிறுவனுக்கு ஆபத்து நேராமல் ரக்ஷிக்கக் கருணைபுரிவீர்" என்று கண்ணீர்விட்டுப் பரிதவிக்கலானார். தாயாதிகளும் சம்பந்திகளும் அவரைச் சுற்றி நிற்கின்றனர். குமார் சிங் ஒவ்வொருவர் முகத்தையும் கூர்ந்து கவனிக்கிறார். ஆனால், அவருக்கு நம்பிக்கை தரக்கூடியவர்கள் அங்கே யாரும் இல்லை என்ற குறி அவர் முகத்தில் பிரதிபலித்தது. ஒருவர்மீதும் அவருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. எல்லோருடைய முகத்திலும் சுயநலத்தைத்தான் கண்டார். வெறுப்பால் கண்ணை மூடிக்கொண்டார். அவருடைய இளம் மனைவி, விம்மி விம்மி அழுதுகொண்டிருக்கிறாள். அவள், சமீபத்தில் பலர் இருப்பதையும் எண்ணாது, "பிராணநாதா! என்னையும் என் பச்சைக் குழந்தையையும் யாரிடம் ஒப்புவித்துச் செல்லப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

ஜமீன்தார் மெல்லிய குரலில், "பண்டிதர் துர்க்காநாதரிடம் ஒப்புவிக்கிறேன். அவர் விரைவில் வந்துவிடுவார். அவர் வந்தவுடன் சகல சொத்துக்களையும் அவரிடம் ஒப்புவித்துவிடுங்கள். இதுவே என் கடைசிக் கோரிக்கை; என் மரண சாஸனம் (உயில்). இதன்படி தட்டாது நடவுங்கள்" என்றார்.

5. பிரார்த்தனை

பிரார்த்தனை

1

அரசாங்க அநாதாலயத்திலிருந்து வெளி வந்ததும், நான் சேனையில் சேர்ந்து தொண்டாற்றலானேன். நான் கட்டுமஸ்தான ஆஜானுபாகுத் தோற்றத்தை யுடையவன். என் கைகால்கள், நன்றாக உருண்டு திரண்டு வலிமையுடையவை. சாதாரண ஜனங்களைவிட உயரமுடையவன். என் உயரம் சுமார் ஆறடி ஒன்பது அங்குலம்.

சேனையில் சேர்ந்தவுடன் என் வாழ்க்கையில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டது. வீரலக்ஷ்மியின் அருள் எனக்குப் பூர்ணமாக ஏற்பட்டது. வீரலக்ஷ்மி என்னிடம் விளையாடினாள் என்றும் கூறலாம். நான் எந்த வேலையில் பிரவேசித்தாலும் வெற்றிமேல் வெற்றி கிடைத்தது. அதனால் எனக்கு வேலை உயர்வும், சம்பள உயர்வும் விரைவில் கிடைத்துவந்தன.

சேனையிலுள்ள ஒவ்வொரு சிப்பாயும் என்னை நன்றாக அறிவான். சேனைத்தலைவரான மேஜர் சர்தார் ஹிம்மத்சிங் என்மேல் அதிக அன்பாய் இருந்தார். ஒருநாள் நான் அவரை ஒரு பேராபத்திலிருந்து காப்பாற்றினேன். அன்று முதல் அவர் என்னை உயிர் ரக்ஷகனாகக் கருதிக் கௌரவத்துடன் நடத்தினார். இதேயன்றி, நான் அவரைக் காணும்போதெல்லாம் எனக்கு அவர்மீது ஒருவித விசேஷ அன்பு ஏற்பட்டு வந்தது.

எனக்கு, என் தாய் தந்தையர் யாரென்று தெரியாது. பந்துக்களின் அடையாளங்கூட அறியேன். சில சமயங்களில் நான் என் பிறப்பு இரகசியங்களைப் பற்றி யோசிப்பதுண்டு. நான் குழந்தைப் பருவத்தில் இருந்த பிரதேசத்தின் தோற்றந்தான் என் ஞாபகத்தில் இருந்தது. பெரிய பெரிய மலைகள் சூழ்ந்த இடத்தில் வசித்த ஒரு குடும்பமும் ஒரு பெண்ணும் என் மனத்தில் கனவுபோல் தோற்றுகிறது. அந்தப் பெண்தான் என் தாயாராய் இருக்கலாம். அவளுடைய உருவம் ஒரு மாதிரியாக என் உள்ளத்தில் பதிந்திருக்கிறது.

எனக்கு அறிவு வந்தபின், நான் ஓர் அநாதாலயத்தில் வளர்க்கப்படுவதை அறிந்தேன். பெஷாவருக்குக் கிழக்கே 40 மைல் தூரத்திலுள்ள குலாஹா என்ற கிராமத்தில் இந்த அநாதாலயம் இருக்கிறது. இதுவும் மலைப்பிரதேசந்தான்.

நான் வாலிபப் பிராயமடைந்ததும் ஆசிரமத்திலிருந்து வெளியே அனுப்பப்பட்டேன். பிழைக்க வழி தேடிச் சேனையில் சிப்பாயாகச் சேர்ந்தேன். இச்சேனையிருந்த இடம் சம சீதோஷ்ணமானது. சேனையில் வேளா வேளையில் நல்ல போஷிப்புள்ள ஆகாரம் கிடைத்துவந்தது. அதனால் நான், முன்பிருந்ததைவிடத் திடகாத்திரமடைந்தேன். எல்லைப்புற மலைப் பிரதேச வாசிகளில், கிலஜயி, மஹாசூதி ஆகிய ஜாதியார்கள்தாம் மிகவும் திடகாத்திரமுள்ளவர்கள். அவர்களைப்போலவே நானும் கட்டுமஸ்தாக இருந்தேன். எனக்கும் அவர்களுக்கும் கொஞ்சம் வித்தியாசமிருந்தது. அவர்கள் கொஞ்சம் அநாகரிகமுடையவர்கள். நான் நாகரிகம் அறிந்தவன். மேலும் படிப்பும், அறிவும், தெளிவாகவும் சாதுர்யமாகவும் பேசும் திறமையும் எனக்கு ஏற்பட்டிருந்தன. நான் நாகரிகப் பழக்க வழக்கமுடையவன். ஆனால், பார்வைக்கு அந்த மலை ஜாதியார்களைப் போலத்தான் இருப்பேன்.

சில சமயங்களில், தனியாக இந்த மலைப் பிரதேசங்களில் உலவிவர அனுமதி கிடைக்கும். அப்போது, கட்டுதிட்டங்கள் கொண்ட பட்டாள வாழ்க்கையைவிட்டு, இம்மாதிரிக் காடுகளில் சதா சுதந்திரத்துடன் வாழவேண்டுமென்று என் மனத்தில் ஆசை தோன்றும். ஆனால் பாலைவனப் பிரதேசங்களைக் காணும்போது இந்த எண்ணம் மாறிவிடும். பாலை நிலங்களில் இம்மாதிரியான இயற்கை அழகு இல்லை. எங்கும் ஒரே மணற் பிரதேசம். விளை நிலங்களைக் காண்பது அரிது. உண்ணவும் உணவு கிடைக்காது.

கேவலம், சாதாரணமான ஒரு ரொட்டித் துண்டுக்காக மனிதர்களே மனிதர் கொலேயும் செய்து விடுகின்றனர். ஒரு கந்தல் ஆடைக்காகவும் கொலே நடக்கும்.

அங்குள்ள ஜாதியார்கள் துப்பாக்கி வேண்டுமென்று எண்ணினல் உடனே எங்கள் சேனேயைத் தாக்க ஆரம்பித்து விடுவார்கள். இச் சமயங்களில் கடுமையான போராட்டம் நடப்பதுமுண்டு.

இச்சாதியார்கள் என்மீது அதிகமாகக் கண் நாட்டம் வைத்திருந்தனர். அம்மலேவாசிகள் ஒவ்வொருவரும் என்னே நன்ருக அறிவார்கள். அவர்களே எதிர்த்து ஓட்டும் சக்தி என்னிடத்தில்தான் இருக்கிறதென்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். அதனுல் என்னே எந்த விதத்திலாயினும் கொலே செய்துவிடவேண்டுமென்று அவர்கள் ஒவ்வொருவரும் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தனர். தப்பித்தவறி நான் அவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டால் என் அடையாளங்கூட இந்த உலகத்தில் இல்லாமல் செய்துவிடுவார்கள்.

என்னே அவர்கள் ஜன்மப் பகைவனுக எண்ணியிருக்கின்றனர். ஏனெனில், நான் என் கையால் மலே ஜாதியார்களில் பலரைக் கொன்றிருக்கிறேன். பலரைக் கைது செய்து சிறையில் அடைத்துச் சித்திரவதை அனுபவிக்கும்படியும் செய்திருக்கிறேன். அவர்களுடைய கிராமங்கள் பலவற்றைத் தீயிட்டுக் கொளுத்தியு மிருக்கிறேன்.

இம்மலே ஜாதியினர் அதிகமாயிருக்கும் இடங்களிலெல்லாம் எங்கள் பட்டாளம் முகாம் செய்து, கடுமையான நடவடிக்கைகளேக் கைக்கொண்டு அவர்களே அடக்கிவந்தது. ‘காம்ப்’ போகும் இடங்களிலெல்லாம், நான் ஒரு வாரத்திற்கு மேல் தங்கமாட்டேன். நான் அதிக நாள் தங்கினல், அம்மலே வாசிகள் என்னேக் கொல்லச் சதிசெய்ய ஆரம்பித்துவிடுவார்கள்.

2

ஒரு நாள் நான் மேஜர் சர்தார் ஹிம்மத்சிங் வீட்டிற்குப் போய்க் கொண்டிருந்தேன். அப்போது மத்தியானம் மணி இரண்டிருக்கும். அன்று விடுமுறை நாள்.

சில நாட்களுக்குமுன்தான், இம்மலேவாசிகளின் கிராமங்கள் பலவற்றைத் தீயிட்டுக் கொளுத்தி நாசம் செய்தோம். இதற்குப்

பின் அவர்களும் அடங்கியொடுங்கி இருக்கலாயினர். அதனுல் சேனு வீரர்களான நாங்கள் யாவரும் கவலையற்று, ஆடிப்பாடி அரட்டையடித்தபடி காலத்தை ஆனந்தமாகக் கழிக்கலானேம்.

இவ்விதச் சோம்பல் வாழ்க்கையில் எனக்குச் சலிப்பு ஏற்பட்டது. அதனுல், சர்தார் பங்களாவுக்குச் சென்று, கொஞ்ச நேரம் சந்தோஷமாகப் பேசிவரலாமென்று புறப்பட்டேன். அப்படிப் போகும் வழியில் ஒரு பயங்கர சம்பவம் நடந்தது. மலைஜாதியானை ஒரு கிழவன், ஒரு சிப்பாயைத் துரத்திக்கொண்டு ஓடுவதைக் கண்டேன். அவர்கள் யாரென்று நான் நன்ருகக் கவனிப்பதற்குள், அக்கிழவன் அச்சிப்பாயை நெருங்கிக் கத்தியால் குத்திவிட்டான். சிப்பாயும் ஒரே குத்தில் கீழே விழுந்து மாண்டான். கிழவன் அச் சிப்பாயிடம் இருந்த கைத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தான். இச்சம்பவம் இமைப்போதில் நடந்துவிட்டது. அக்கிழவனைப் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென என் ரத்தம் கொதித்தது. நான் அக்கிழவனைத் துரத்திக்கொண்டு ஓடினேன். அவன் கிழவனுகத் தோற்றினுலும், அவன் ஓட்டத்தைச் சாதாரணமாக எந்தச் சிப்பாயும் பிடிக்க முடியாது. அவ்வளவு வேகமாக ஓடினுன். முதலில் எனக்கும் அவனுக்குமிடையில் அதிக தூரம் இருந்தது. நான் ரோஷத்துடன், உயிரையும் மதிக்காமல் ஓடினேன். அவன் தன் ஊர் எல்லையை அடையும்போது எனக்கும் அவனுக்குமிடையே முப்பது முழ தூரம்தான் வித்தியாசமிருந்தது. அவன் திரும்பிப் பார்த்தான். நான் ஒருவன் மாத்திரம் துரத்தி வருவதை அறிந்தான். கைத் துப்பாக்கியால் என்னை நோக்கிச் சுட்டான். நான் சடக்கெனத் தரையில் படுத்துக்கொண்டேன். குண்டுகள் என் தலைக்குமேல் பாய்ந்து சென்று பாறையில் தாக்கின. நான் திடீரெனக் கீழே விழுந்தது கண்ட கிழவன், நான் குண்டடிபட்டுத்தான் செத்து விழுந்து விட்டேன் என எண்ணி, என்னைப் பார்க்கப் பாறையருகில் வந்தான். நான் திடீரெனச் சிங்கம்போல் பாய்ந்து, அவனைக் கத்தியால் ஒரே குத்தாகக் குத்தி வீழ்த்தினேன். அந்தக் கிழவனுடைய வாழ்க்கைத் திருவிளையாடல் அத்துடன் முடிந்தது. இதற்குள்ளாக என் சேனையிலுள்ள வீரர்கள் பலரும், ஆயுதங்களுடன் அங்கே வந்துசேர்ந்தனர். நான் செய்த தீரச் செயலுக்காக எல்லோரும் என்னைப் பாராட்டிப் புகழ்ந்தனர்.

அதுவரை என் உணர்ச்சி என் வசத்திலில்லை. பின்னர் நான் அக்கிழவனின் சடலத்தைக் கவனித்துப் பார்த்தேன். ஏனே

என் மனத்தில் ஒருவிதத் திகிலும் சஞ்சலமும் உண்டாயின. அதுவரை, நான் எவ்வளவோ பேரைக் கொன்றிருந்தேன். அப்போதெல்லாம் அம்மாதிரியான பதைபதைப்பு ஏற்பட்டதில்லை.

பிறகு ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டு, எங்கள் படைவீட்டை நோக்கிப் புறப்பட்டேன். சிப்பாய்கள் அக்கிழவனுடைய சவத்தைத் தூக்கிக்கொண்டு வந்தனர். வழி நெடுக என் வீரத்தைப் புகழ்ந்து பேசிய வண்ணம் என்னைச் சூழ்ந்து வந்தனர். ஆனால், என் மனத்தில் பெருமையாவது சந்தோஷமாவது ஏற்படவில்லை. நான் ஒன்றும் பேசாமல் மௌனமாக மேஜரின் இருப்பிடத்தை அடைந்தேன்.

மேஜர், தம் அறையில் உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் அவர் சந்தோஷத்துடன் எழுந்து, "எல்லைப்புறத்தானை வேலை தீர்த்துவிட்டாயா?" என்று கேட்டார். நான், "ஆம். ஆனால் ஏனோ, என் மனத்தில் மிகுந்த கலக்கமும் திகிலும் ஏற்பட்டிருக்கின்றன. இதற்குமுன் ஒருநாளும் இதுமாதிரிப் பயம் என் மனத்தில் ஏற்பட்டதில்லை" என்று வருத்தம் கலந்த குரலில் கூறினேன்.

"என்ன? ஆஸத்கான்! உனக்காவது, பயம் ஏற்படவாவது!" என்று மேஜர் ஆச்சரியத்துடன் கூறினர்.

"சர்தார்சிங்! இங்கே இருக்க என் மனம் இடந்தரவில்லை. முற்றத்தில் சென்று உட்கார்ந்தால் தேவலை. ஏனோ என் மனம் சஞ்சலமும் திகிலும் கொண்டு தவிக்கிறது" என்று கூறிக் கொண்டே நான் வெளியில் போகப் புறப்பட்டேன். சர்தார் எழுந்து என் முதுகில் அன்பாகத் தட்டிக்கொடுத்துக் கொண்டே, "ஆஸத்! ஒன்றும் பிரமாதமில்லை. நீ வெகு தூரம் மிகவும் வேகமாக ஓடியதால் களைப்பு ஏற்பட்டிருக்கிறது. உஷ்ணத்தால் ஹிருதயமும் அதிக விரைவாகத் துடிக்கிறது. வேறு ஒன்றுமில்லை. சற்று இளைப்பாறினல் எல்லாம் சரியாய்ப் போகும். சரி, முற்றத்தில் சென்று உட்காருவோம். மாலைக்காற்று உன் உள்ளத்தைக் குளிரச் செய்யும்" என்றார்.

சர்தார் சிங்கும் நானும் முற்றத்தில் இருந்த நாற்காலிகளில் அமர்ந்தோம். ஊர்க் கோடியில் கிழவனின் சவம் கிடத்தப் பட்டிருந்தது. ஜனங்கள் அதைச் சூழ்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். நாங்கள் வெளிமுற்றத்தில் வந்து அமர்ந்ததும் ஜனங்களின் கண்கள் எங்கள் பக்கம் திரும்பின. யாவரும்

என்னைச் சுட்டிக்காட்டி ஜாடையாகப் பேசுவது தெரிந்தது. சர்தார் இக்காட்சியைக் கண்டு, "ஆஸத்கான்! அதோ, அவர்கள், உன்னைப்பற்றி எவ்வளவு கௌரவமாகப் பேசுகிறார்கள், பார். நீ சிறு குழந்தையாக இருந்தது முதல், உன் வீரத்தை எல்லாரும் கொண்டாடுகிறார்கள். நீ ஏன் இப்போது எதையோ நினைத்துக்கொண்டு பயப்பட்டுக் கலங்குகிறாய்?" என்றார்.

நான் — (புன்முறுவலுடன்) என் மனோநிலை எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. இந்தக் கிழவனைக் கொன்றது முதல் என் நெஞ்சம் ஏனோ திகில் கொண்டு துடிக்கிறது. என்னை யறியாமலே என் மனம் ஒருவகை வருத்தம் கொள்கிறது.

சர்தார் — (சிரித்துக்கொண்டே) ஒரு சமயம், ஒரு சிறந்த வீரனைக் கொன்றுவிட்டோமே என்ற பச்சாத்தாபத்தால் வருத்தம் ஏற்பட்டிருக்கலாம்.

நான், "என்னவோ, இருக்கலாம்!" என்று கூறிக் கூட்டத்தைப் பார்த்தேன். அச்சமயம் ஒரு மலைச் சாதி மங்கை, சர்தார் வீட்டின்முன் வந்து நின்றாள். அவளைக் கண்டதும் சர்தாரின் முகம் சடக்கென மாறுபட்டது. அவள் சர்தாரைப் பார்த்த பார்வையில் ஒருவிதப் பயங்கரமும் கோபமும் ஜ்வலித்தன. என்னையும் அதே பார்வையாகப் பார்த்தாள். நானும் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தேன்.

அவள் ஆண்களைப்போன்றே திடகாத்திரமாக இருந்தாள். காக்கி நிறக் கால்சராயும், நீல நிறமான மேல் சட்டையும் அணிந்திருந்தாள். அவள் நிறம் ரோஜாப்பூவை நிகர்த்திருந்தது. வாலிபப் பருவத்தின் தேஜஸும், துணிகரமும், வசீகரமும் அவள் முகத்தில் ததும்பிக் கொண்டிருந்தன. பலுசிஸ்தான் பெண்களைப்போல் தலையில் உருமால் அணிந்திருந்தாள்.

அவள் என்னைப்பார்த்த ஒருவகைப் பயங்கரப் பார்வையால் என் மனத் திகிலும் பயமும் அதிகரித்தன. அவள் மறுபடியும் சர்தாரை வெறுப்புடன் பார்த்து, நிலத்தில் காறித்துப்பினாள். பின் ஆக்ரோஷத்துடன் சென்று மறைந்தாள். அப்பெண் - வேங்கை கண்ணுக்கு மறைந்த பின்னர்தான் சர்தாருக்கு உயிர் வந்ததுபோன்று முகத்தில் களை ஏற்பட்டது.

நான் — என்ன? இவளை உங்களுக்குத் தெரியுமா?

சர்தார் — (பெருமூச்சுவிட்டு) ஆம், தெரியும். நன்றாகத் தெரியும். ஒரு காலத்தில் இவள் என்னைக் காப்பாற்றினாள்.

உண்மையைச் சொல்லுமிடத்து எனக்கு உயிரைக் கொடுத்தாள். ஆனல், இப்போதோ, என்னைக் கண்ணுல் பார்க்கவும் சகியாது வெறுக்கிருள். இவள்தான் என் மனைவியையும் கொலே செய்தவள். இவள் எப்போதாவது என் கண்ணில் பட்டு விட்டால், அன்று நடந்த பயங்கரக் காட்சி என் அகக்கண்முன் தோன்றத் தொடங்குகிறது.

நான் — (பயம் கலந்த தொனியில்) சர்தார்ஜி! அவள் என்னையும் பயங்கரமாகத்தான் பார்த்தாள். அதை நினைத்தாலே ஏனே, என் பயம் பலமடங்கு அதிகப்படுகிறது. என் உடம்பு சிலிர்க்கிறது. என்ன நடக்குமோ என்று திகில் ஏற்படுகிறது.

சர்தார் — (தலையை ஆட்டிக்கொண்டே) ஆஸத்கான்! நீயும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது அவசியம். நீ கொன்ற இக்கிழவனுக்கும் இவளுக்கும் ஏதாவது சம்பந்தம் இருந்தாலும் இருக்கலாம். இவன் அவளுடைய தகப்பனுகவாவது, நெருங்கிய சுற்றத்தானுகவாவது இருந்துவிட்டால், அவள் உன்னை எப்படியும் பழிக்குப்பழி வாங்க உபாயம் தேடுவாள். இவள் சாதாரணப் பெண்பிள்ளை அல்ல; பயங்கரமான அரக்கி.

சர்தார் சொன்ன இவ்விஷயத்தைக் கேட்டதும் எனக்கு முன்னையைவிட அதிகமான பயமும் திகிலும் ஏற்பட்டுவிட்டன. "இவளைப் பிடித்து, போலீஸார் வசம் ஒப்புவித்துவிட்டால் என்ன? மரணதண்டனை விதித்து ஒழித்து விடுவார்கள் அல்லவா?" என்றேன்.

சர்தார் — ஆஸத்! என் உயிரைக் காப்பாற்றின அவளைக் கொல்ல என் மனம் எப்படித் துணிவு கொள்ளும்? அது செய்நன்றி மறந்த மகாபாதகம் அல்லவா? ஒரு காலத்தில் அவள் என்னை எவ்வளவோ ஆர்வமாகக் காதலித்தாள். யார் கண்டார்கள், இன்னும் அவள் என்மீது விருப்பங் கொண்டிருந்தாலும் இருக்கலாம். அந்தக் காதல் கதையைச் சொன்னுல் கதை கதையாக வளரும். அவகாசம் கிடைக்கும்போது சொல்லுகிறேன்.

சர்தாரின் காதல் கதையை அறிய என் மனம் விருப்ப முற்றது. விஷயம் பூராவையும் அப்போதே கேட்கவேண்டுமென என் மனம் தூண்டிற்று. ஆனல் அவர் முதலில் கூற மறுத்தார். கண்டிப்பாகச் சொல்லித்தான் ஆகவேண்டுமென வற்புறுத்தவே, அவர் வேண்டாவெறுப்பாய்த் துக்கத்துடன் கூறினர்.

சர்தார் — உன்னை நான் என் தம்பிபோல் கருதி என் கதையைச் சொல்லுகிறேன். ஆஸத்கான்! ஐந்து வருடங்களுக்கு முன்னர், நான் இப்போது இருப்பதைவிட அதிகப் பலசாலியாகவும் வசீகரத் தோற்றத்துடனும் இருந்தேன். அப்போது எனக்கு வயது நாற்பதுக்குமேல் இல்லை. அப்போது என் தலை நரைக்கவில்லை. ஒரே சமயத்தில் இரண்டு வீரர்களை அடித்து வீழ்த்திவிடும் சக்தி அப்போது எனக்கு இருந்தது. ஜர்மானியருடனும் நான் போர் புரிந்துள்ளேன். எத்தனையோ வீரர்களை யமலோகம் அனுப்பியிருக்கிறேன். இங்கே வந்தபோது எனக்குக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் நாளடைவில் இவ்வாழ்க்கை பிடித்துவிட்டது. இங்கே வந்ததும் பஷ்தோ பாஷையைக் கற்றுக்கொண்டேன். நான் இலக்கண முறைப்படி தங்குதடையின்றித் தாராளமாகப் பஷ்தோ பாஷை பேசுவேன். பின்னர் வேறு பல நாடுகளுக்குச்சென்று யுத்தத்தில் கலந்துகொண்டேன். பலமுறை செத்துப் பிழைத்தேன் என்றும் கூறவேண்டும். மறுபடியும் இங்கேயே மாற்றுதலாகி வந்து சேர்ந்தேன். எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் பட்டும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு வந்தேன். கடவுள் கருணையால் இந்த ஒரு வருஷமாகத்தான், சிறிது சந்தோஷமாக வாழ்கிறேன். அந்தக் காலத்தில் என் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அநேகர் எனக்கு மரியாதை செய்வார்கள். ஒருமுறை கர்னல் ஹாமில்டனின் மனைவியை ஓர் ஆபத்திலிருந்து காப்பாற்றினேன். இன்னும் எத்தனையோ உள்நாட்டுப் பெண்களுக்கும் அயல்நாட்டுப் பெண்களுக்கும் ஏற்பட்ட பலவகை ஆபத்துக்களைத் தீர்த்து வைத்திருக்கிறேன். இங்கே வந்துசேர்ந்த மூன்று வருடங்களுக்குப் பின்னர் என் கதை ஆரம்பமாகிறது.

ஒரு நாள் இரவு நான் 'காம்பி'ல் படுத்துக்கொண்டிருந்தேன். அப்போது இங்கே மலைவாசிகள் கலகம் செய்துகொண்டிருந்தனர். இவர்களை அடக்கவே எங்கள் பட்டாளம் அனுப்பப்பட்டது. அன்றிரவு மற்ற சிப்பாய்கள் தூங்கிக்கொண்டிருந்தனர். நள்ளிரவு; எங்கும் நிசப்தம் நிலவுகிறது. நானும் அயர்ந்து தூங்கிவிட்டேன்.

திடீரென்று என் மார்பின்மேல் யாரோ உட்கார்ந்து அழுத்துவதாக உணர்ச்சி ஏற்பட்டு திடுக்குற்றுக் கண்விழித்தேன். ஒரு மலைவாசி என் மார்பின்மேல் உட்கார்ந்து என் கழுத்தை நெருக்கிப் பிடித்தான். அவனுக்கு வயது என்னைக் காட்டிலும்

இருமடங்கு இருக்கும். அவன் கையில் ஒரு வாள் இருந்தது. ஒரு நொடியில் என்னை வெட்டிச் சாய்த்திருப்பான். நான் அவனிடமிருந்து தப்ப எவ்வளவோ போராடிப் பார்த்தேன். ஆனால் என்னால் முடியவில்லை. பின்னர் நான் பஷ்தோ பாஷையில் அவனை நோக்கி, "என்னைக் கொலை செய்யவேண்டாம். என்னைச் சிறைப்படுத்தினால் என் விடுதலைக்கு ஈடாக அரசாங்கத்தார் பணம் கொடுப்பார்கள்" என்றேன்.

கடவுளின் கிருபையால் என் வார்த்தைகளை அவன் ஏற்றுக் கொண்டான். தன் இடுப்பில் சுற்றியிருந்த ஒரு கயிற்றை அவிழ்த்தெடுத்து, என் கைகால்களைக் கட்டித் தூக்கி, தன் தோள் மேல் போட்டுக்கொண்டு கூடாரத்தைவிட்டு வெளியேறி ஒருவகை விசித்திர சப்தம் போட்டுக்கொண்டே, என்னைச் சுமந்தபடி ஓடினான். என்னைச் சுமப்பது அவனுக்கு ஒரு சுமையாகத் தோன்றவில்லை. ஏதோ ஒரு சிறு மூட்டையைத் தூக்கிச் செல்பவன்போலவே வெகு விரைவாக ஓடலானான். அவனைச் சேர்ந்த மற்றவர்கள் வேறு இடங்களில் கொள்ளை யடித்துக் கொண்டு வழியில் வந்து சேர்ந்து கொண்டனர். மறுநாள் அதி காலையில் அவர்கள் குளக்கரையை அடைந்தனர். அக்குளத்து நீர் சுத்தமாக இருந்ததுடன், அக்குளத்தைச் சுற்றி, மரங்களடர்ந்து பார்ப்பதற்கும் வெகு ரம்மியமாக இருந்தது. அக்குளக்கரையில் அனைவரும் தங்கினோம். என்னைத் தூக்கி வந்த கிழவன்தான் அந்தக் கொள்ளைக் கூட்டத்திற்குத் தலைவன். அவன் என்னை ஒரு பாறைமீது படுக்க வைத்தான். ஆனால் அவன் அவசரத்தில் என்னை இறக்கியதால், ஒரு மூட்டையைப்போல் நான் விழுந்தேன். என் தேகத்திலும் நல்ல அடிபட்டது. எலும்பு முறிந்திருக்குமென்றே நினைத்தேன். ஆனால் கடவுள் கிருபையால் அப்படி ஒன்றும் நேரிடவில்லை.

சற்று நேரம் பொறுத்து அத்தலைவன் என்னைப் பார்த்து, "எத்தனை ரூபாய் வாங்கிக் கொடுப்பாய்?" என்றான். நான் என் வலியைப் பொறுத்துக்கொண்டு, "ஐந்நூறு ரூபாய்" என்றேன்.

தலைவன், கோபத்துடன், "இவ்வளவு குறைந்த பணம் வாங்கமாட்டோம். இரண்டாயிரம் ரூபாயில் ஒரு பைசா குறைந் தாலும் உன் உயிர் போய்விடும்" என்று அதட்டிய குரலில் கூறினான்.

நான் சற்று யோசித்துத் தயக்கத்துடன், "ஒரு கறுப்பு மனுஷனுக்கு அரசாங்கத்தார் அவ்வளவு ரூபாய் கொடுக்க மாட்டார்களே!" என்றேன்.

தலைவன் கையில் கத்தியை எடுத்துக்கொண்டு, "பின் ஏன் அரசாங்கத்தார் பணம் தருவார்களென்று கூறினாய்? சரி, இப்போதே உன்னைக் கொன்றுவிடுகிறேன்!" என்று என்னைக் கொல்லக் கத்தியை ஓங்கிக்கொண்டு நெருங்கினான். எனக்கோ திகில் உண்டாய்விட்டது. ரூபாய் இரண்டாயிரம் கொடுக்கச் சம்மதித்தாலல்லாது உயிர் தப்புவது கடினம். எனவே, நான் ரூபாய் இரண்டாயிரமும் வாங்கித் தரச் சம்மதிக்க வேண்டியதாயிற்று.

அக்கிழவன், நான் பயந்துவிட்டது கண்டு கொல்லெனச் சிரித்தான். அவன் சிரிப்பின் எதிரொலி, அம்மலைப் பிரதேசத்தையே ஆட்டுவிப்பது போன்றிருந்தது. நான் என் மனத்துள், 'இவன் ஒரு பெரிய பயங்கர மனிதன்' என்று கூறிக்கொண்டேன்.

பின்னர் மற்றவர்கள் யாவரும் தங்கள் தங்கள் கொள்ளைப் பொருள்களைத் தலைவன்முன் வைத்தனர். அதில் அநேக துப்பாக்கிகளும், ரிவால்வர்களும், பணம் நகை முதலியவைகளும் ரொட்டிகளும் இருந்தன. என்னையும் சோதனை செய்தனர். என்னிடமிருந்த ரிவால்வரையும் எடுத்துக்கொண்டனர். அந்த ரிவால்வரைக் கண்டதும் அவர்கள் அளவிலா ஆனந்தமடைந்தனர். பின்னர் கொள்ளைப் பொருள்களைப் பங்கிட்டுக்கொண்டனர். என் ரிவால்வரைத் தலைவனே வைத்துக்கொண்டான்.

சற்று இளைப்பாறிய பின்னர் மறுபடியும் புறப்படலாயினர். என் கட்டுகளை அவிழ்த்துவிட்டு, என்னையும் அவர்களுடன் நடந்து வரும்படி செய்தனர். ஆனால் என் கண்களை ஒரு துணிகொண்டு கட்டிவிட்டனர். என் கைகளையும் ஒரு கயிறறால் கட்டி ஓர் எல்லைப்புறத்தான் கயிற்றின் மறு முனையைப் பிடித்து இழுத்துக்கொண்டு சென்றான். வெகு தொலை நடக்கவேண்டியிருந்தது. என் கால்களும் தள்ளாடின. போதாததற்கு வெயிலும் கடுமையாக இருந்தது. தாகத்தால் தொண்டை வறண்டுவிட்டது. ஆனால் அந்த மலைவாசிகளோ, உல்லாசமாக ஏதோ பேசிக்கொண்டே வந்தனர். அவர்கள் தங்கள் வெற்றிகளைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்க வேண்டுமென்று அவர்களுடைய முகத்தோற்றத்தினால் ஊகித்தேன். ஒருவன் அவர்க

ளுடைய பாஷையில் மிகவும் குதூகலமாகப் பாடிக்கொண்டு வந்தான். மற்றவர்கள் அப்பாட்டை ரசித்துச் சந்தோஷமுற்றனர். அப்பாட்டின் அர்த்தம் எனக்குப் புரியாவிட்டாலும், கேட்பதற்கு இன்பமாக இருந்தது. பாட்டு முடிந்ததும் அப்பாட்டின் அர்த்தமென்னவென்று தலைவனைக் கேட்டேன்.

தலைவன் — அப்பாட்டின் அர்த்தமா? அது ஒரு கதை. மலைவாசியான ஒரு வாலிபன் எங்கோ புறப்படத் தயாரானுன். அவன் மனைவி, "எங்கே போகிறீர்?" எனக் கேட்டாள். அதற்கு அவ்வாலிபன், "உனக்காக ரொட்டியும் துணிமணிகளும் கொண்டு வரச்செல்கிறேன்" என்று பதில் தந்தான். அப்போது மனைவி, "இவ்வளவுதானு? குழந்தைகளுக்கு ஒன்றுமில்லையா?" என்று கேட்டாள். அதற்கு அவ்வாலிபன், "நம் பையனுக்கா? அவனுக்குத் துப்பாக்கி கொண்டுவருவேன். அவன் அந்தத் துப்பாக்கியைத் தன் மனைவிக்குத் துணிமணிகளும் ஆகாரமும் கொண்டுவரப் பயன்படுத்திக் கொள்வான்" என்ருன். அதற்கு மனைவி, "சரி, தாங்கள் எப்போது திரும்பி வருவீர்கள்?" என்று கேட்க, அவன் "போகும் காரியத்தில் வெற்றி கிடைத்தால் திரும்புவேன்; இன்றேல் இறப்பேன்" என்று பதில் கூறினுன். இதுதான் அந்தப் பாட்டின் கருத்து.

அந்த வீரகீதத்தைக் கேட்டு நான் ஆனந்தமடைந்தேன். அந்தப் பாட்டு முடியவும் நாங்கள் ஓரிடத்தில் சென்று நின்ருேம். என் கண் கட்டு அவிழ்க்கப்பட்டது. நாங்கள் நின்றிருந்த இடம் விசாலமானதொரு மைதானம். அந்த மைதானத்தைச் சுற்றிலும் சிறு சிறு குன்றுகள் தொடர்ச்சியாக இருந்தன. அக்குன்றுகளில் பல குகைகள் இருந்தன. அக்குகைகள் மனிதர்கள் வசிப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

மறுபடியும் என்னை ஒரு முறை சோதனை செய்தனர். என் மேல்சட்டைகளைக் கழற்றச் செய்தனர். கால் சராய் மாத்திரம் அணிந்திருந்தேன். நான் நின்ற இடத்தில் ஒரு பிரமாண்டமான பாறையிருந்தது. எல்லோரும் சேர்ந்து அப்பாறையை அப்பால் நகர்த்தினுர்கள். அந்தப் பாறையிருந்தவிடத்தில், ஓர் ஆள் செல்லக் கூடிய அறைக்கு வழி தென்பட்டது. என்னை அதற்குள் இறங்கும்படிக் கட்டளையிட்டனர். ஒரு சமயம் இது பாதாளக் கிடங்காக இருக்குமோ என்று நான் பயந்து தலைவனை நோக்கி, "தலைவா! என்னைக் கொன்றுவிட வேண்டாம். நீ கேட்ட பணம் கட்டாயம் வாங்கித் தருகிறேன்" என்று இறைஞ்சிய

குரலில் மன்ருடி வேண்டிக்கொண்டேன். ஆனல் அவர்கள் என் வேண்டுகோளை லக்ஷியம் செய்யவில்லை. என்னைப் பிடித்து அந்தச் சுரங்கத்துக்குள் தள்ளினர். அப்போது தலைவன், “இப்போது உன்னைக் கொல்லமாட்டோம். பணம் எங்கள் கைக்கு வரும்போது உன்னை விடுதலை செய்வோம். அதுவரை இந்த அறையில்தான் நீ இருக்கவேண்டும்” என்ருன்.

இதைக் கேட்டதும், என் திகில் கொஞ்சம் குறைந்தது. பின்னர் அத்தலைவன் என்னிடம் வந்து ஒரு காகிதமும் பென்சிலும் கொடுத்து, “இதோ, காகிதம் பென்சில். அந்த இரண்டாயிரம் ரூபாயையும், இக்கடிதம் கொண்டுவரும் ஆள்வசம் கொடுத்தனுப்பும்படி உன் சர்க்கார் தலைவனுக்கு எழுது. ஒரு பைசா குறைந்தாலும் உன்னை உயிருடன் பார்க்க முடியாது. ஜாக்கிரதை!” என்ருன்.

நானும் அவ்வாறே கமிஷனருக்குக் கடிதம் எழுதி அவர்களிடம் தந்தேன். பின்னர் என்னை அக்குகையிலேயே சிறை வைத்தனர்.

3

நான் அந்தச் சுரங்கத்தினுள் தள்ளப்பட்டது முதல், என் மனம் சொல்லொணுத் திகில் கொண்டு தவிக்கலாயிற்று. சுரங்கம் ஒரே இருட்டாக இருந்தது. அதன் நான்கு சுவர்களும் மேல் கூரையும் கற்பாறைகளாலானவை. பாறைகளின் இடுக்கிலிருந்த சிறு இடைவெளிகளில் சிறிது வெளிச்சம் உள்ளே பிரவேசித்தது. உயிரோடு இருப்பதற்கு அளவான காற்ருேட்டந்தான் இருந்தது. என் கதி என்ன ஆகுமோ என்ற திகில் என்னை ஓயாமல் வாட்டத் தொடங்கிற்று.

மாலை நேரம் வந்தது. அதுவரை என்னை யாரும் வந்து பார்க்கவில்லை. பசியோ அதிகரித்தது. பசிக் கொடுமையைத் தாங்க முடியவில்லை. துயரமும் அழுகையும் பொங்கின. என்னைப் படைத்த அக்கடவுளை அடிக்கடி நொந்துகொண்டேன். சகிக்க முடியாத் துன்பம் அனுபவிக்க நேரிடும்போதெல்லாம் கடவுளைத் திட்டுவதுதானே மனித இயற்கை!

அப்போது ஒரு ரொட்டித் துண்டு என் குகைக்குள் விழுந்தது. ஒரு நாயின் முன்னர் ஒரு ரொட்டித் துண்டை எறிந்தால், அது எவ்வளவு ஆர்வத்துடன் ஓடிச்சென்று அதைக் கவ்விக்கொள்ளுமோ அதைப்போன்ற ஆர்வத்துடன் நான் பாய்ந்துசென்று அந்த ரொட்டியை எடுத்துக்கொண்டு, சந்தின்

வழியாக மேலே பார்த்தேன். ஆனால் ஒருவரும் தென்படவில்லை. ரொட்டியைத் தின்றேன். இன்னும் கொஞ்சம் கிடைக்காதா வென்று அந்தச் சந்தின் வழியாக ஆவலுடன் பார்த்தேன். ஆனால் கிடைக்கவில்லை. சற்றுப் பொறுத்து ஒரு தகரக் குவளை கயிற்றின் மூலமாக உள்ளே விடப்பட்டது. அதை எடுத்துப் பார்த்தேன். தண்ணீர் இருந்தது. அதை ஆர்வத்துடன் குடித்தேன். ஆனால் தாகம் அடங்கவில்லை. இன்னும் கொஞ்சம் வேண்டுமென்று கேட்டேன். வெளியில் யாரோ இருக்கும் சப்தம் கேட்டது. "இன்னும் கொஞ்சம் தண்ணீரா வேண்டும்? நாளைக்கு ஆகட்டும்! குவளையைக் கொடு. இல்லாவிட்டால் நாளைக்கு இந்தத் தண்ணீரும் கிடைக்காது" என்று யாரோ பதில் சொன்னது கேட்டது. குவளையைக் கீழே வைத்துவிட்டேன்.

இவ்விதம் அநேக நாட்கள் கழிந்தன. தினமும் ஒரு ரொட்டித் துண்டும் ஒரு குவளைத் தண்ணீரும்தான் கொடுத்து வந்தனர். எப்படியோ நான் அந்த அற்ப உணவை உண்டு, அந்தப் பாதாள அறையில் உயிருடன் இருந்தேன். சிற்சில சமயம் சகிக்க முடியாத துக்கம் உண்டாகும். அதை மறைக்க, என் தாய்ப் பாஷையிலாவது பஷ்தோ பாஷையிலாவது பாடத் தொடங்கிவிடுவேன்.

ஒரு நாள் 'லைலா மஜ்னுன்' என்ற நாடகத்திலிருந்து ஒரு பாட்டைப் பாடிக்கொண்டிருந்தேன். அழகில் மன்மதனை யொத்தவனும், கதாநாயகனுமான மஜ்னுன் தன்னெதிரில் பாடிக்கொண்டிருந்த ஓர் அன்றில் பக்ஷியைப் பார்த்து, "அதிகமாகக் கஷ்டப்படுகிறவர்களை மேலும் மேலும் ஏன் வாட்டுகிறாய்? இதோ என்னை வாட்டு. என் இதயம் உஷ்ணத்தால் கொதித்துக் கொண்டிருக்கிறதென்று எண்ணி, என் இதயத்தை நெருங்கப் பயப்படுகிறாயா? பயப்பட வேண்டாம். இதோ என் இதயம்! தாராளமாகப் பொசுக்கிச் சாம்பலாக்கு. மோகினியான லைலாவை அடையும் பாக்கியம் எனக்கில்லை. இனி நான் உலகில் வாழ்ந்து என்ன ப்யன்? இதோ இப்போதே என்னைச் சுட்டுப் புதைத்துவிடு" என்று கூறும் கருத்தமைந்த பாட்டைப் பாடி முடித்தேன். அப்போது, "ஏன் அந்தப் பாட்டை அத்துடன் நிறுத்திவிட்டாய்? இன்னும் கொஞ்சம் பாடு" என்று வெளியிலிருந்து யாரோ கேட்டனர். இதைக் கேட்டதும் எனக்கு ஆச்சரியமும் ஆனந்தமும் உண்டாயின. பேசுவது யாரென அறிய எண்ணி, "நீங்கள் யார்?" என்றேன். "நான் தலைவனின் மகள் தூரியா" என்று பதில் வந்தது.

"இந்தப் பாட்டு உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்றேன்.

"ஆமாம், கைதியே! இன்னுமொரு முறை அதைப் பாடு. கேட்க ஆவலாய் இருக்கிறேன்."

இதைக் கேட்டதும் எனக்குக் குதூகலமும் உற்சாகமும் ஏற்பட்டன. ஆனந்தமாகப் பாடினேன். தினந்தோறும் இந்தப் பாட்டைப் பாடினால் அதிகத் தண்ணீரும் ரொட்டியும் கொண்டு வந்து தருவதாகக் கூறிவிட்டு அவள் சென்றாள்.

நான் தினமும் அந்த நேரத்தில் அந்தப் பாட்டை வெகு உற்சாகமாகப் பாடுவேன். தூரியா அதை வெகு ஆவலுடன் கேட்டு மகிழ்ச்சி கொள்வாள்.

மெல்ல மெல்ல ஒரு மாதம் கழிந்தது. அதுவரை என் விடுதலைப் பணம் வந்து சேரவில்லை. நாள் ஏற ஏற எனக்கு அந்தச் சிறை வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டது. சரியாக மாதம் ஒன்றானவுடன் தலைவனான கிழவன் என்னிடம் வந்து, "கைதி! நாளைக்குள் பணம் வந்து சேராவிட்டால் உன்னைக் கொன்றுவிடுவோம். இனிமேல் உனக்கு அந்த ரொட்டிகூடத் தர முடியாது" என்று எச்சரித்துச் சென்றான்.

'இந்த இரவு கழிந்து நாளை இரவோடு என் உயிர் நீங்கும்; இந்த வாழ்க்கை முடிந்துபோகும்' என்று நிச்சயமாக நம்பி விட்டேன்.

அன்று மாலை ரொட்டியும் தண்ணீரும் கொடுக்கப்படவில்லை. எனக்கும் அவற்றில் விருப்பம் உண்டாகவில்லை. 'நாளை சாகப் போகிறவனுக்கு இன்று ஆகாரம் எதற்கு?' என்று கருதி உணவை வெறுத்தேன்.

அச்சமயத்தில் தூரியா அங்கே வந்து பாட்டுப் பாடும்படி கேட்டாள். என் மனமோ சோகத்தாலும் திகிலாலும் குழம்பிப் போயிருந்தது. பாட்டுப் பாட எப்படி முடியும்? அதனால் நான் பாடாமல் மௌனமாக இருந்தேன்.

தூரியா — ஏ கைதி! தூங்குகிறாயா என்ன?

நான் — இன்று தூங்கி என்ன பிரயோசனம்? நாளைதான் ஒரே அடியாக ஒரே தூக்கம் தூங்கப்போகிறேனே!

தூரியா — என்ன! உங்கள் அரசாங்கத்தார் பணம் அனுப்பவில்லையா?

நான் — நான் நாளை இறப்பதற்குத் தயாராக இருக்க வேண்டுமென உன் தகப்பன் தெரிவித்துவிட்டான். அதன் பின்னர் பணம் வந்துதான் என்ன பிரயோசனம்?

துரியா — பயப்படாதே. இன்று பாடு. நாளைக்கு உன் உயிர் போகாமல் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

இவ்விதம் கூறி அவள் ஆறுதல் அளித்தாள். பாட ஆரம்பித்தேன். அவளும் ரசித்து ஆனந்தமடைந்தாள். அவள் அவ்விடத்தைவிட்டுச் செல்லுமுன் என்னை நோக்கி, "நீ இந்தக் குகையைவிட்டு ஜெயிலில் இருக்கப் பிரியப்படுகிறாயா?" என்று கேட்டாள்.

"இந்த நரகத்தைவிட்டுத் தப்புவித்தால் போதும். வேறு எந்த இடத்தில் வேண்டுமானாலும் இருக்கிறேன்" என்றேன்.

துரியா, "சரி. என் தகப்பனிடம் சொல்லி வேண்டிய ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறிச் சென்றாள்.

மறுநாளே என்னைப் பாழடைந்த குகையிலிருந்து வெளியேற்றினார்கள். அப்போது தலைவன் என்னை நோக்கி, "உனக்கு இன்னும் பதினைந்து நாள் கெடு கொடுக்கிறேன். அதற்குள் பணம் வந்து சேராவிட்டால், உன் தலை உடலிலிருந்து பிரிந்துவிடும். இன்னும் ஒரு கடிதம் உன் வீட்டுக்கு எழுது" என்று கூறிக் காகிதமும் பென்சிலும் கொடுத்தான். நானும் என் பயங்கர நிலைமையைத் தனியாக எடுத்துக் காட்டி உடனே பணம் அனுப்பும்படி எழுதினேன்.

அந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு தலைவன் சென்றான். அப்போது துரியா வந்தாள். என் உயிரை இதுவரையில் காத்து உதவிபுரிந்த உத்தமியல்லவா அவள்? அவளை உற்றுப்பார்த்தேன். அவள் என்னை நெருங்கி வந்ததும் சற்றுப் பொறுத்து, "உன் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டாள்.

நான், "இரண்டு இளங்குழந்தைகள்தான் இருக்கிறார்கள். வேறொருவரும் இல்லை" என்று துக்கத்தோடு பதில் சொன்னேன். இம் மலைவாசிகளுக்குக் குழந்தைகளின்மேல் அதிகப் பிரியமும் இரக்கமும் உண்டு என்பது எனக்குத் தெரியும்.

"அவர்களைக் காக்கத் தாய் இல்லையா?" என்றாள் துரியா.

நான் அவள் மனத்தில் இரக்கம் உண்டாக்குவதற்காக, "இல்லை. இப்போது அக்குழந்தைகள் உயிருடனாவது

இருக்கின்றனவோ, இல்லையோ; எப்படித் தெரியும்? என்னைத் தவிர அவர்களைக் காப்பாற்றுபவர் வேறு யாரும் இல்லை" என்று கூறிக் கண்ணீர் விட்டேன். தூரியாவின் மனமும் கலங்கிற்று. அவள் கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்தது.

தூரியா — ஐயோ பாவம்! ஒருவரும் திக்கில்லையா? அவர்கள் என்னமாக அழுது துடிக்கிறார்களோ?

நான்—(துக்கத்தை அதிகமாக வருவித்துக்கொண்டு) ஆமாம். அழுது அழுது இறந்து போயிருந்தாலும் இருக்கலாம்.

தூரியா — வருத்தப்படவேண்டாம். அவர்கள் இறந்திருக்க மாட்டார்கள். உன் வீடு எங்கே இருக்கிறது? சொல். நான் போய் உன் குழந்தைகளைப் பார்த்துவிட்டு வருகிறேன்.

நான் என் வீட்டு அடையாளத்தை விவரமாகச் சொன்னேன்.

தூரியா — நான் கடையில் சாமான்கள் வாங்க அநேக முறை அந்த வழியாகச் சென்றிருக்கிறேன். இனிமேல் போனால் உன் குழந்தைகளின் சௌகரியத்தைக் கவனித்துவிட்டு வருகிறேன்.

நான் — (ஆர்வத்துடன்) எப்போது போவாய்?

தூரியா — (சற்று யோசித்துவிட்டு) நாளை வியாழக்கிழமை செல்வேன். கைதியே! கொஞ்சம் பாடமாட்டாயா?

அவள் சொன்ன விஷயங்களைக் கேட்டதும் எனக்குச் சந்தோஷம் உண்டாயிற்று. உற்சாகத்துடன் பாடினேன். அவள் உள்ளம் ஆனந்தத்தால் பொங்கிக் குதூகலித்தது. கண்களில் ஆனந்த பாஷ்பம் வடிந்ததாக எண்ணினேன். ஆனால் அவள் திடீரென ஏனோ சோர்வுற்றாள். நா வறண்டது. ஆனந்தக் கண்ணீர் துயரக் கண்ணீராயிற்று. அவள் தேகத்தில் ஒருவித நடுக்கம் ஏற்பட்டது. அப்படியே அயர்ந்து உட்கார்ந்துவிட்டாள்.

அவள் உள்ளத்தில் மேலும் மேலும் இரக்கத்தை உண்டாக்கக் கருதி மேலும் அதிக உற்சாகத்தோடு பாடினேன். அவள் தேன் உண்ட வண்டைப்போல், ஸ்திரத்தன்மையை இழந்து மயங்கினாள். பாடி முடிந்ததும் அவள் மனம் சற்றுநேரம் ஏதோ கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்ததாகத் தோற்றிற்று. அப்போது நான், "தூரியா! நான் இறந்துவிட்டால் என் குழந்தைகளிடம் விஷயத்தைத் தெரிவித்துவிடு" என்றேன். நான் கூறிய அவ்வார்த்தைகள் அவள் மனத்தை உறுத்தியதுபோல் அவள் முகக்குறியால் தெரிந்தது.

துரியா — கைதி! நீ சாகமாட்டாய். உன் குழந்தைகளுக்காக உன்னை நான் தப்பவைத்துவிடுகிறேன்.

நான் — துரியா! நான் உன்னுல் விடுதலே யடைந்தபோதிலும் எனக்கு வழி தெரியாது. காடு காடாக அலேந்து திரிந்து சாக வேண்டித்தான் நேரிடும். அல்லது மறுபடியும் உங்கள் கூட்டத்தாரால் பிடிக்கப்பட்டுச் சாகவேண்டியதுதான். மேலும், உன்னேயும் உன் தகப்பனுர் கோபித்துக்கொள்வார்.

துரியா — எனக்காக நீ கவலேப்பட வேண்டாம். என்னே யாரும் சந்தேகிக்கமாட்டார்கள். நான் தலேவனின் மகள். நான் என்ன சொன்னுலும் மற்றவர் அதன்படி நடப்பார்கள். ஒரு விஷயம். நீ வீட்டுக்குப் போனதும் நீ கூறியபடி பணத்தை அனுப்பிவைப்பாயா?

நான் — கண்டிப்பாக அனுப்புகிறேன்.

பின்னர் துரியா என்னே விடுவிக்க ஏற்பாடு செய்வதாகக் கூறி அவ்விடமிருந்து அகன்ருள்.

துரியா குறிப்பிட்ட வியாழக்கிழமை வந்தது. அன்று, அக்கூட்டத்தாராவது தலேவனுவது திரும்பிவரவில்லே. அங்கே அதிக ஜன நடமாட்டமும் இல்லே. அன்று மாலே துரியா அங்கே வந்து, "கைதி! இன்னும் என் தந்தை வரவில்லே. நாளேயும் வராவிட்டால் உன்னே விடுதலே செய்துவிடுகிறேன். ரூபாயை அனுப்ப மறந்துவிடாதே. நான் உன்னேப் பூர்ணமாக நம்பி யிருக்கிறேன்" என்று தெரிவித்தாள்.

அன்று நான் என்றைக்குமில்லாத குதூகலத்துடன் பாடினேன். அவள் நள்ளிரவுவரையில் என் பாட்டை அனுபவித்து மகிழ்ந்தாள். பிறகு எழுந்து சென்ருள்.

"ஸ்வாமி பகவானே! நாளேக்கும் தலேவன் வராமலிருக்கும்படிச் செய்யமாட்டாயா?" என்று பலமுறை கடவுளேப் பிரார்த்தித்தேன். அதுவரை கஷ்டப்பட்டே இருந்ததால் சரியான இரத்த ஓட்டமில்லாமல், உடம்பு வலியெடுத்தது.

மறுநாள் விடிந்ததும் வெகு ஆவலோடு வெளி உலகத்தைக் காணும் பாக்கியத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். கொள்ளேக்குப் போன கூட்டத்தார் நல்ல காலமாக அன்றும் திரும்பி வரவில்லே.

மாலையானதும் துரியா வந்தாள். அதுவரை என் நிலைமை திரிசங்கு சொர்க்கத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

துரியா என் கட்டுகளை அவிழ்த்துவிட்டு, "நீ இப்போது வீட்டுக்குப் போகலாம். புறப்படு!" என்றாள். அதுவரையில் கஷ்டப்பட்டு ரத்த ஓட்டம் இல்லாமல் இருந்ததால் என் கைகால்கள் மரத்துப் போயிருந்தன. உடனே என்னால் நடக்க முடியவில்லை. ரத்த ஓட்டம் சரிப்பட்டவுடன் துரியாவைப் பின்தொடர்ந்து சென்றேன்.

செல்லும்போது என் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கவும், அவளை மகிழ்விக்கவும் வழிநெடுகப் பாடிக் கொண்டே போனேன். அவள் அப்பாட்டின் இன்பத்தை ரசித்து மகிழ்ந்தாள். பாட்டின் கருத்து அவள் உள்ளத்தை உருக்கி விட்டதென்றே தோன்றிற்று.

கடைசியில் ஒரு குளக்கரையை அடைந்தோம். அப்போது நள்ளிரவு. துரியா ஒரு வழியைக் காட்டி, "இதோ இந்த வழியே நேராகச் சென்றால் பெஷாவருக்கே போய்ச் சேரலாம். ஜாக்கிரதையாகப் போ. எங்கள் ஜாதியார்கள் கண்டுவிட்டால் உன்னை உயிரோடு விடமாட்டார்கள். இதோ, உன் ஆடைகள்! வாங்கிக்கொள். பணம் அனுப்ப மாத்திரம் மறந்துவிடாதே. ஜாக்கிரதை, பணம் வராவிட்டால் என் உயிர் போய்விடும். அந்தப் பணத்துக்கு நான் பொறுப்பேற்று உன்னை விடுதலை செய்தேன். பணம் வராதுபோனால் உனக்குப் பதிலாக என்னைத்தான் கொல்வார்களேயொழிய, உன்னை இனி ஒன்றும் செய்ய மாட்டார்கள். நீ அவர்களைக் கொன்றாலுங்கூட அவர்கள் உன்னைக் கொல்லமாட்டார்கள். நன்றி விசுவாசத்தை மறக்கவேண்டாம். கடவுள் உன்னைக் காப்பாராக! உன் குழந்தைகளுடன் சுகமாக வாழ்வாய்!" என்று வாழ்த்தி வழியனுப்பிவிட்டு திரும்பிச் சென்றாள். குரலிலிருந்து, அவள் என் பிரிவால் வருத்தப் படுகிறாள் என்றே தோன்றிற்று.

வழி யெங்கும் ஒரே நிசப்தம். ஜில்லெனக் குளிர்காற்று வீசிற்று. சந்திரன் பதினாறு கலைகளோடு ஆகாயத்தை அலங் கரித்து நிலவு பொழிந்து கொண்டிருந்தான். நான் நாற்புறமும் ஜாக்கிரதையாகப் பார்த்தவண்ணம் வழி நடந்தேன். அதிகாலையில் பெஷாவர் எல்லையை அடைந்தேன்.

பெஷாவர் ராணுவ எல்லையில் ராணுவச் சிப்பாய்கள் பாராக் கொடுத்துக்கொண்டிருந்தனர். என்னைக் கண்டதும் அவர்கள்

எல்லோரும் ஆச்சரியமும் குதூகலமும் அடைந்தனர். நான் இறந்துவிட்டதாகவே எல்லாரும் எண்ணியிருந்தனராம்.

கர்னல் ஹாமில்டன் நான் உயிரோடு திரும்பிவந்ததை அறிந்து, சந்தோஷச் செய்தியை விசாரிக்க வந்து சேர்ந்தார். அவர் என்னுடன் கைகுலுக்கி நான் உயிரோடு வந்ததற்காகத் தம் சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொண்டு, "சர்தார்! நான் உங்களை மறந்துவிடவில்லை. உங்களுடைய கடிதங்கள் இரண்டையும் பார்த்தேன். அவைகள் பொய்க் கடிதங்களாக இருக்கக் கூடுமென்று நினைத்துவிட்டேன். நீங்கள் எழுதியிருக்கக் கூடுமென்று எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. நீங்கள் வெற்றியுடன் வந்ததுபற்றி நான் கடவுளுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்றார்.

நான் கர்னலுக்கு வந்தனம் செலுத்தி, "கறுப்பு மனிதன் எழுதினால் அப்படித்தான். ஒரு வெள்ளையன் எழுதியிருந்தால் இரண்டாயிரம் என்ன, நாலாயிரம்கூட அனுப்புவீர்கள்" என்று குத்தலாகக் கூறினேன். கர்னல் அவ்வார்த்தைகளை எவ்விதம் எடுத்துக் கொண்டாரென்பதைப்பற்றி நான் அக்கறை கொள்ளவில்லை. அதன்பின் ஒன்றும் பேசாமல் மௌனமாக வீடு வந்து சேர்ந்தேன். என் குழந்தைகளைக் கண்டு பூரித்தேன். அன்றைக்கே ஒரு நம்பிக்கையான ஆள்வசம் ரூபாய் இரண்டாயிரத்தையும் துரியாவுக்குக் கொடுத்தனுப்பினேன்.

4

சர்தார் சிங் தம் மன ஆயாசத்தைப் போக்கிக்கொள்பவர் போல ஒரு பெருமூச்சுவிட்டு மறுபடியும் தம் கதையைச் சொல்லத் தொடங்கினார் :—

ஆஸத்கான்! என் கதை இன்னும் முடியவில்லை. துக்ககரமான படலம் இனிமேல் இருக்கிறது. இங்கே வந்த பின் நான் என் துக்கங்களை மறந்தேன். ஆனால் அந்தத் துரியாவை மறக்க முடியவில்லை. அவள் கிருபையால்தானே நான் என் குழந்தைகளைக் கண்ணால் பார்க்க முடிந்தது? நான் உயிரோடு இருப்பதற்கும் அவள்தானே கர்த்தா? ஆதலால் நான் அவளை எவ்வாறு மறக்க முடியும்?

மாதங்களுடன் வருடங்களும் கழிந்தன. விடுதலையடைந்த சம்பவத்திற்குப் பின்பு, நான் துரியாவையோ அல்லது அவளுடைய தகப்பனையோ மறுபடியும் பார்க்கவில்லை. அவள்

இங்கே வருவதாகக் கூறினுளே தவிர, வரவில்லை. நான் அங்கிருந்து வந்தவுடன் என் மனைவியை அவள் தாய் வீட்டுக்கு அனுப்பிவிட்டேன். துரியாவுக்காகவே அவ்விதம் செய்தேன். என் மனைவி இறந்துவிட்டாளென்று நான் அவளிடம் சொல்லி யிருந்தேனல்லவா? அவள் திடீரென வந்துவிட்டால் என்னைப் பொய்யன் என்றும் அயோக்கியனென்றும்தானே கருதுவாள்?

வருடங்கள் மூன்று கழிந்தன. துரியா வரவே இல்லை. இனிமேல் அவள் வரமாட்டாளென்று தீர்மானித்து என் மனைவியை மறுபடியும் வீட்டுக்கு அழைத்துவந்தேன். எங்கள் வாழ்க்கையும் சுகமாகவே கழிந்தது. ஆனுல் துர்ப்பாக்யம் மீண்டும் என்னைத் தொடரலாயிற்று.

ஒரு நாள் மாலை நேரம். நான் என் மனைவியுடன் உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. வேலைக்காரன் கதவைத் திறந்தான். ஒரு காபூலிப் பெண் தைரியத்துடன் உள்ளே வந்து பஷ்தோ பாஷையில், "சர்தார் அவர்கள் எங்கே?" என்று கேட்டாள்.

நான் அறையிலிருந்து வெளியே வந்து, "நீ யார்? என்ன வேண்டும்?" என்று கேட்டேன்.

அவள் தன்னிடமிருந்த பவழங்களை எடுத்துக் காட்டி, "நான் பவழங்கள் விற்க வந்திருக்கிறேன். வாங்குகிறீர்களா?" என்று கேட்டாள்.

பவழங்களைப் பார்க்க என் மனைவியும் அங்கே வந்தாள். பவழங்களைக் கையிலெடுத்துப் பார்த்தாள். அப்போது அக்காபூலிப் பெண், "இவள் யார்? தங்களுடைய மனைவியா?" என்று கேட்டாள்.

நான் — ஆம். என் மனைவியில்லாமல் பின் யார்?

பெண் — தங்கள் மனைவிதான் இறந்துவிட்டாளே! வேறு கல்யாணம் செய்துகொண்டீர்களோ?

நான் கோபமுற்று, "ஏ முட்டாள்! நீதான் இறந்து போயிருப்பாய்" என்று கூறி அவளைக் கண்டித்தேன்.

என் மனைவிக்குப் பஷ்தோ பாஷை தெரியாது. அவள் பவழங்களை வெகு பிரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

என் வசவு மொழிகளைக் கேட்டதும், அக்காபூலிப் பெண்ணின் கண்கள் கோபத்தால் ஜ்வலித்தன. அவள் என்னைப் பார்த்து உரத்த குரலில், "நான் முட்டாளாயிருந்தால் உன்னை விடுதலை செய்திருப்பேனா? ஏ பேடி! என்னிடம் அப்போது பொய்தானே சொன்னாய்? உன் மனைவி அப்போது இறக்கவில்லையென்றால், இதோ இப்போது இறக்கிறாள் பார்!" என்று கூறிக் கொண்டே சிங்கம்போல் பாய்ந்து ஓர் இமைப்பொழுதில், என் மனைவியின் மார்பில் ஒரு கட்டாரியால் குத்தினாள். நான் தடுக்க முயன்றும், அச்செய்கை ஒரு மின்னல்போல் நடந்துவிட்டது. நான் அந்தக் காபூலிப் பெண்ணைப் பிடிக்க முயன்றேன். ஆனால் அவள் அம்புபோல் பாய்ந்து முற்றத்திற்குச் சென்று, "இப்போது என்னைத் தெரிந்துகொள். நான் துரியா. உன்னுடன் வாழ்க்கை நடத்த எண்ணி வந்தேன். உன்னைக் கல்யாணம் செய்துகொண்டு குடும்பம் நடத்தவேண்டுமென்பது என் ஆசை. உன்னை நம்பி என் வீடு வாசல், தகப்பன் சுற்றம் எல்லாவற்றையும் துறந்து இங்கே வந்தேன். ஆனால் நீ பெரும் பொய்யன், பித்தலாட்டக்காரன் என்பது இப்போதுதான் தெரிந்தது. இனி மேல் நீ உன் மனைவியை நினைத்துக்கொண்டு அழு. உன்னை நினைந்து நானும் அழுவேன்" என்று கூறிவிட்டு மறைந்தாள்.

நான் என் மனைவியின் அருகில் சென்று பார்த்தேன். அவள் அந்த ஒரே குத்தில் உயிர் நீத்தாள். டாக்டரை அவசர அவசரமாக அழைத்து வந்தேன். ஆனால் பிரயோசனமில்லை. என் மனைவி என்னைவிட்டுப் பிரிந்தாள்.

இச்சம்பவத்தைக் கூறியபோது சர்தாரின் கண்களில் கண்ணீர் பெருகிற்று. துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. சற்று நேரம் அவரால் ஒன்றும் பேச முடியவில்லை. பின்னர் அவர் மீண்டும் கூறியதாவது :—

ஆஸத்கான்! துரியா இப்படிப்பட்ட வைராக்கியம் கொண்டவளென்று நான் கனவிலும் கருதவில்லை. வந்தவள் துரியா என்று முதலில் தெரிந்திருந்தால், அந்தக் கொலை நடக்காமல் தவிர்த்திருக்கலாம். அவள் வந்தபோது அந்த அறையில் வெளிச்சம் குறைவாக இருந்ததால் நான் அவள் அடையாளத்தைக் கண்டுகொள்ள முடியவில்லை. மேலும் அவளைப் பார்த்தும் பல வருடங்களாயின அல்லவா? தவிர, என் துரதிருஷ்ட வசத்தால் அப்போது ஏனோ அவள்பேரில் எனக்குக் கோபம் உண்டாயிற்று? என் மனைவி இறந்துவிட்டதாகத் துரியாவைத் தவிர்த்து வேறு எவரிடமும் கூறியதில்லையென்பது

நினைவிற்கு வந்திருந்தால் நான் உண்மையை உணர்ந்து, முன் ஜாக்கிரதையாக இருந்திருக்கலாம்.

அந்தப் படுகொலையைச் செய்துவிட்டு மறைந்த துரியா பிறகு இந்தப் பக்கம் காணப்படவே இல்லை. தப்பித் தவறி வெளிப்பிரதேசங்களில் எங்காவது சந்திக்க நேர்ந்தால், என்னை வெறுப்புடன் பார்த்து, காறித் துப்பிவிட்டு மறைந்து விடுவாள். அவளைக் கண்டாலே எனக்கு நடுக்கம் உண்டாகிறது. அவளைப் பிடித்துத் தண்டிக்க வேண்டுமென்று எண்ணுவேன். ஆனால் அவளை நேரில் கண்டால் என் அவயவங்கள் செயலற்றுப் போய்விடுகின்றன. என் வீரம் அணைந்து மறைந்துவிடுகிறது.

அவளுடைய இச்செய்கையைக் கண்டு அவள் என்னை வெறுக்கிறாள் என்று எண்ணுவதற்கில்லை. என்னிடம் அவள் இன்னும் அன்பு கொண்டிருக்கிறாள் என்று எண்ண இடமிருக்கிறது. ஏனெனில், அவள் அடிக்கடி நான் இல்லாத சமயங்களில் இங்கே வந்து என் குழந்தைகளுக்குத் தின்பண்டங்களும் விலையுயர்ந்த விளையாட்டுப் பொருள்களும் கொடுத்துவிட்டுச் செல்லுகிறாள். குழந்தைகள் அவள் வரும்போது தென்படாவிட்டால், கொண்டுவந்த பொருள்களை எப்படியாவது வீட்டுக்குள் சேர்த்துவிட்டுப் போய் விடுவாள். அவைகளோடு 'சர்தாரின் குழந்தைகளுக்கு' என்று ஒரு சீட்டும் எழுதி வைத்திருப்பாள்.

அவளுடைய நடவடிக்கைகளே பெரும் மர்மமாக இருக்கின்றன. அவள் மனத்திலுள்ள இரகசிய அபிப்பிராயத்தையும் அறிந்துகொள்ள முடியவில்லை. அவள் தேவதையா அல்லது ராக்ஷஸியா என்பதும் நிர்ணயிக்க முடியவில்லை.

இவ்விதம் அவர் சொல்லும்போது அவருடைய பையன் அங்கே ஓடிவந்து சந்தோஷத்துடன், "இதோ பாருங்கள்! அந்த அம்மாள் இந்தத் தங்க நகையைக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறாள்" என்று சொல்லிக்கொண்டே ஆபரணத்தைச் சர்தாரிடம் கொடுக்கவந்தான்.

சர்தார் — ஆஸத்கான்! பார்த்தாயா? நான் என்ன சொன்னேன்? இதோ இன்றுகூட வந்து இந்தத் தங்க ஆபரணத்தைக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறாள். இதைப்போல் இன்னும் எவ்வளவோ விலையுயர்ந்த பொருள்களை என்

குமாரர்களான அர்ஜுனன், நிஹால் இருவருக்கும் கொடுத்திருக்கிறாள். ஆஹா! அவள் ஒரு விசித்திரமான பெண்!

5

பின்னர் நான் சர்தாரிடம் விடைபெற்று என் வீட்டுக்கு வந்தேன். சந்தியில் கிழவனின் பிணம் கிடத்தப்பட்டிருந்தது. அங்கே சென்றதும் என் தேகம் சிலிர்த்தது. என்னை அறியாமலேயே அந்த இடத்தில் ஒரு நிமிஷ நேரம் நின்று விட்டேன்.

நான் சர்தாரின் வீட்டைவிட்டுப் புறப்பட்டதிலிருந்து, ஒரு பெண் என்னை நிழல்போல் தொடர்ந்து வந்துகொண்டிருப்பதை அப்போது நான் அதிகம் கவனிக்கவில்லை. நான் அங்கே நின்றதும் அவளும் நின்றாள். என் கவனம் அவள்மீது சென்றது. அவள் பக்கத்துக் கடைக்குச் சென்று சாமான்கள் வாங்கிக் கொண்டிருந்தாள். நான் உற்றுப் பார்த்தேன். 'இவள் யார்? துரியாவா?' 'ஆம். ஒருகால் அவளாகத்தான் இருக்கலாம்' என்று என் ஹ்ருதயமே கேள்வியும் கேட்டுப் பதிலும் கொடுத்தது.

துரியா என்னை ஏன் பின்தொடர்ந்து வருகிறாள் என்பது அப்போது எனக்கு விளங்கவில்லை. பலவாறு யோசனை செய்து கொண்டே வீட்டையடைந்து போஜனமுண்டு படுக்கையில் படுத்தேன். ஆனால் எனக்குத் தூக்கமே வரவில்லை. அன்று நடந்த சம்பவங்களை நினைத்தபோது எனக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டது. தூங்க வேண்டுமென்று எவ்வளவோ முயற்சி செய்தும் தூங்க முடியவில்லை. கொஞ்சம் அரைகுறையாகக் கண்ணை மூடினேன்.

அப்போது துரியாவைப் போன்ற ஒரு பெண், கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தாள். அவள் தோற்றம் மிகவும் பயங்கரமாய் இருந்தது. கையில் ஒரு கட்டாரி பளபளவெனப் பிரகாசித்தது. அவள் மெல்ல என் அருகில் வந்தாள். அது கனவுபோல் எனக்குத் தோற்றிற்று. நான் எழுந்திருக்க முயன்றேன். ஆனால் கைகால்கள் உணர்ச்சியற்றுக் கிடந்தன. அவள் என்னை நெருங்கி வந்தாள். சிறிது நேரம் என்னை உற்றுக் கவனித்தாள். பிறகு கத்தியை ஓங்கினாள். நான் கூச்சலிட முயன்றேன். ஆனால் என் தொண்டை அடைத்துக் கொண்டது. நா எழவில்லை. அவள் என்மேல் பாய்ந்து

மார்பின்மேல் உட்கார்ந்து என் இரு கைகளையும் தன் முழங்கால்களால் அணைக்க முடியாமல் அழுத்திப் பிடித்துக் கொண்டாள். நான் திமிறினேன். அவளோ மலைவாசத்தால் உருண்டு திரண்டு வலிவு பெற்ற காபூலி மங்கை. என்னால் அவளை அசைக்கவும் முடியவில்லை.

“ யார்? துரியாவா?” என்றேன் நான். அவள் என்னைப் பலமாக அழுத்திப் பிடித்துக்கொண்டு, “ ஆம். நான் துரியாதான். என் தகப்பனை நீ கொன்றாய். அதற்காக நான் உன்னைப் பழிவாங்க வந்திருக்கிறேன்” என்று கூறிக்கொண்டே கத்தியை ஓங்கினாள். இப்போது என் நிலைமை அபாயத்தில் தத்தளிக்கிறது. உயிர் வாழ வேண்டுமென்ற ஆசை என்னைத் தைரியப்படுத்துகிறது. சாவதற்கு எனக்குத் துணிவு ஏற்பட வில்லை. உலகத்தில் நான் அநுபவிக்க வேண்டிய மனக் கோரிக்கைகள் இன்னும் அநேகம் இருக்கின்றன. திடீரெனத் திமிறி என் வலது கையை அவள் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டேன். அவள் கத்தி பிடித்திருந்த கையையும் எப்படியோ பலமாகப் பிடித்துக்கொண்டேன்.

அப்போது அவள் என் கையின் பலமான பிடிப்பை அறிய விரும்புபவள்போல் என் கையைக் கவனித்தாள். அவள் முகம் சடக்கென்று மாறியது. அவள் கட்டாரி வைத்திருந்த கையும் தளர்ந்தது. மார்பின்மீதிருந்து நகர்ந்தாள். என் கையை மறுபடியும் உற்றுப் பார்த்தாள். நான் சிரித்துக்கொண்டே, “ வந்தாயா வழிக்கு? இப்போது நீ சாகப்போகிறாய். உன் தந்தையை முதலில் கொன்றேன். இப்போது உன்னையும் கொல்லப்போகிறேன் ” என்றேன்.

ஆனால் நான் சொன்ன வார்த்தைகள் அவள் மனத்தில் உறைத்ததாகத் தெரியவில்லை. அவள் ஏதோ பிரமிப்புக் கொண்டவள்போல் கண்கொட்டாமல் என்னையே பார்த்துக் கொண்டு நின்றாள். நான் மறுபடியும் பேசத் தொடங்கி, “ ஏன் பேசாமல் இருக்கிறாய்? இப்போது உன் உயிர் என் கையில் இருக்கிறது. தெரியுமா?” என்று அதட்டிக் கேட்டேன்.

அவள் கண்களில் மளமளவென்று கண்ணீர் வடிந்தது. மனமுடைந்தவள்போல் அழத் தொடங்கினாள். அழுதுகொண்டே தழுதழுத்த குரலில், “ நீ என் உடன்பிறந்த சகோதரன். நீ உன் தகப்பனையே கொன்றாய்!” என்றாள். அவள் வார்த்தைகளைக் கேட்டு எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. “ மலைவாசிகள் சூதுவாது

தெரியாதவர்கள் என்று கூறுவார்கள். இம்மாதிரி அவர்களுக்குப் பொய் சொல்லி ஏமாற்றவும் கூடத் தெரியுமென்று எண்ண வேண்டியிருக்கிறது" என்றேன்.

துரியா — சிறு குழந்தையாக இருக்கும்போதே நீ காணமற் போனாய். நீ என் அண்ணன், நாஜிர். இதோ உன் கையில் இருக்கும் அடையாளமே நீ என் அண்ணன் என்பதைக் காட்டி விட்டது.

நான் — இது சிறு வயதிலிருந்தே என் கையில் இருக்கிறது. சேனையில் சேரும்போதுகூட இந்த அடையாளத்தைப் பதிவு செய்து கொண்டிருக்கின்றனர். (ஏளனமாகச் சிரித்து) உன்னால் என்னை ஏமாற்ற முடியாது. நீ என்ன தந்திரம் செய்தாலும், என்னிடமிருந்து தப்ப முடியாது.

துரியா கத்தியை எறிந்துவிட்டு, "உண்மையில் நீ என் அண்ணன்தான். நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லா விட்டால், இதோ என் இடது கையைப் பார். உனக்கிருப்பது போன்ற பச்சை குத்தியிருக்கிறது" என்று தன் இடது கையைக் காட்டினாள். நான் பார்த்தேன். என் கையிலுள்ளதையும் ஒத்திட்டுப் பார்த்தேன். இரண்டும் ஒரே மாதிரியாகவே இருந்தன. சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தேன்.

நான் — துரியா! இதைக்கொண்டு உன் வார்த்தையை நம்ப முடியாது. இம்மாதிரி அடையாளங்கள் சகஜமாக ஏற்படலாம்.

துரியா — சரி, சரி, போதும். என் கையை விடு. மலைப் பிரதேசத்தார் பொய் பேசமாட்டார்கள். இனியும் உன்னிடம் பேசுவது வீண்.

நான் அவள் கையை விட்டுவிட்டேன். அவள் தரையில் உட்கார்ந்துகொண்டு என்னையே கூர்ந்து பார்க்கலானாள். பின்னர் அவள் என்னைப் பார்த்து, "உன் தாயும் தகப்பனும் எங்கே இருக்கிறார்கள் தெரியுமா?" என்றாள்.

நான் — (தலையை ஆட்டிக்கொண்டே) தெரியாது. நான் அநாதாலயத்தில் வளர்ந்துவந்தேன்.

துரியா எழுந்து, "நீ, காணமற்போன என் அண்ணன் நாஜிர்தான். நான் பிறந்து ஒரு வருஷத்திற்குப் பிறகு நீ காணமல் போய்விட்டாய். வழக்கப்படி நம் பெற்றோர்கள் கொள்ளைக்குச் சென்றனர். ஒரு தடவை பட்டாளத்தோடு சண்டையிட

நேரிட்டது. அம்மா நம்மிருவரையும் எடுத்துக்கொண்டு அப்பாவோடு கூடவே போனுள். அவள் மகா கெட்டிக்காரி. சண்டை செய்வதில் கைதேர்ந்தவள். உன்னை முதுகில் கட்டிக் கொண்டே தைரியமாக எதிரிகளுடன் போராடினுள். அப்போது ஒரு குண்டு அவள் காலில் பலமாகத் தாக்கவே, கீழே விழுந்து மூர்ச்சையானுள். அப்போது யாரோ உன்னை அபகரித்துக்கொண்டு போய்விட்டார்களாம். நம் தகப்பனுர் அடிபட்ட தாயைத் தோளில் தூக்கிக்கொண்டு ஊர்வந்து சேர்ந்தார். ஆனுல் உன்னைக் கண்டுபிடிக்க முடியவில்லையாம். எங்கெங்கோ தேடினுர்களாம்; கிடைக்கவில்லையாம். அம்மா அடிக்கடி உன்னைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பாள். அம்மா கையிலும் இதேமாதிரி பச்சை இருக்கிறது" என்று மறுபடியும் தன் கையைக் காட்டினுள். என் கையையும் அவள் கையுடன் சேர்த்துவைத்துப் பரீக்ஷித்தேன். இரண்டின் உருவ அமைப்பிலும் கொஞ்சங்கூட வித்தியாசமில்லை. அதைப் பார்க்கப் பார்க்க என் தலை சுற்றத் தொடங்கிற்று. மயக்கமுற்றுக் கட்டிலில் சாய்ந்தேன்.

தூரியா என் பக்கத்தில் நகர்ந்துவந்து அமர்ந்து, என் முகத்தில் வடிந்துகொண்டிருந்த வியர்வையைத் துடைத்து விட்டாள். பின்னர் அன்பான குரலில் என்னை நோக்கி, "நாஜிர்! நீ இறந்திருக்க மாட்டாயென்றும், எப்படியாவது ஒருநாள் எங்களைச் சந்திப்பாயென்றும் அம்மா அடிக்கடி என்னிடம் சொல்லிக்கொண்டேயிருப்பாள்" என்றுள்.

இப்போது தூரியாவின் வார்த்தைகளில் எனக்கு நம்பிக்கை ஏற்படலாயிற்று. நான் யாரைக் கொன்றேனே, அவரே என்னைப் பெற்ற பிதா என்பது தெரிந்தது. ஐயோ! என்னைப்போன்ற பிதுர் துரோகியான பாவி உலகத்தில் உண்டோ?

தூரியா, "அவர் தம் புத்திரன் கையாலேயே இறக்க வேண்டுமென்று விதி இருந்தது. நாம் என்ன செய்யமுடியும்? நாஜிர், நீ உண்மை தெரியாமல் இந்தக் காரியத்தைச் செய்தாய். 'தகப்பன் இறந்ததும் நான் ஆதரவற்ற அநாதையாகிவிட்டேனே' என்று வருந்தினேன். ஆனுல் இப்போது நீ கிடைத்துவிட்டதால், தகப்பனுர் இறந்ததால் ஏற்பட்ட துன்பத்தை ஒருவாறு மறந்து விடப் பிரயத்தனம் செய்வேன். நாஜிர்! விதியின் கொடுமையால் இந்த துரதிருஷ்டச் சம்பவம் நேர்ந்துவிட்டது. இதை எண்ணி நீ வருத்தப்படாதே. தந்தை யார், தாயார் யார் என்பது உனக்கு

எப்படித் தெரியும்? நானே உன்னைக் கொல்வதாக இருந்தேனே. ஆனால் நம் அதிர்ஷ்ட வசத்தாலும் கடவுள் கிருபையாலும் நம் வம்சத்தின் அடையாளத்தை உன் கையில் பார்க்க நேர்ந்தது" என்று கூறிச் சமாதானம் செய்தாள்.

என் தகப்பனார் ஹைதர்கான், இம்மலைகளில் வசிக்கும் ஒரு கூட்டத்திற்குத் தலைவன் என்பதைத் தெரிந்துகொண்டேன். சர்தாரைப்பற்றித் துரியாவிடம் ஜாக்கிரதையாகப் பேசினேன். அவள் இன்னும் அவரைக் காதலிப்பதையும் அறிந்துகொண்டேன். இருந்தும் அவள் தன் உள்ளக் கருத்தைத் தெளிவாகக் கூறாமல், "அவர் பெரும் பொய்யர்; ஜாலக்காரர். அவரை மணந்து கொள்ள என் மனம் இனிமேல் சம்மதிக்காது. அவருடைய குழந்தைகளை வேண்டுமானால் என்னிடம் கொண்டுவந்து விட்டுவிடட்டும். தாய்போலிருந்து காப்பாற்றுகிறேன்" என்றாள். அவள் வார்த்தைகளின் உறுதியைக் கண்டு, நான் அவளைத் தட்டிப் பேச முடியவில்லை.

மறுநாள் பொழுது விடிந்தது. துரியா என் தங்கை என்பதை என் வேலைக்காரர்களுக்குத் தெரிவித்தேன்.

என் தந்தையின் சடலத்தைத் தகுந்த மரியாதைகளுடன் அடக்கம் செய்ய எண்ணி, அதை என்னிடம் ஒப்புவிக்கும்படி மேலதிகாரிக்குக் கடிதம் அனுப்பினேன். ஆனால் அவர்கள் அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை.

ஆகவே சர்தாருக்குச் சொல்லியனுப்பினேன். அவர் வந்ததும், "ஆஸத்! இவ்வளவு அவசரமாக அழைத்ததெதற்கு?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

நான் — என் பெயர் இனி ஆஸத் அல்ல; நாஜிர்.

சர்தார் — (ஆச்சரியத்துடன்) என்ன! ராத்திரி ஏதாவது கனவு கண்டாயா? பைத்தியம் பிடித்துவிட்டதா?

நான் — (சிரிப்பும் விசனமும் தோன்ற) இல்லை, சர்தார் சாகப், துரியா என் உடன் பிறந்த சகோதரி. நேற்று நான் கொன்ற கிழவனார் என் தகப்பன்.

சர்தார் — (திகைப்புடன்) என்ன ஆஸத்! என்னையும் பைத்தியமாக்குகிறாயா?

நான் — (சர்தாரின் கையைப் பிடித்து) சர்தார்! இப்படி வாருங்கள். துரியாவின் வாயாலேயே உண்மையைத்

தெரிவிக்கிறேன். அவள் தங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருள்.

சர்தாரின் கையைப்பற்றி உள்ளே அழைத்துச் சென்றேன். துரியா அவரைக் கண்டதும், "கைதி! மறுபடியும் அந்தப் பாட்டைப் பாடு" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள். நானும் அவரும் கொல்லென்று சிரித்தோம்.

சர்தார் பூரா விபரமும் அறிந்துகொண்டார்.

சர்தார் — நாஜிர்! இனிமேல் உன்னை நாஜிர் என்றே அழைக்கிறேன். துரியாவை எனக்கு விவாகம் செய்து தரும்படி உன்னிடம் யாசிக்கிறேன்.

நான் — (சிரித்துக்கொண்டே) தாங்கள் ஹிந்து, நாங்களோ முஸ்லீம்கள்.

சர்தார் — (சிரிப்புடன்) சேனையில் ஜாதி வித்தியாசம் ஏது?

துரியா — சர்தார்! நான் உங்களுக்கு மனைவியாக இருக்க முடியாது. வேண்டுமானுல் உங்கள் இரண்டு குழந்தைகளையும் என்னிடம் ஒப்புவியுங்கள். தாயாக இருந்து பராமரித்து வருகிறேன்.

சர்தார் சிரித்துக்கொண்டே விடைபெற்றுச் சென்ருர். எங்கள் தந்தையின் சடலத்தை உரிய மரியாதைகளுடன் அடக்கம் செய்தோம்.

சூரியன் மேற்கடலில் மறைந்து கொண்டிருக்கிருன். இருட்டும் மெல்ல மெல்ல வந்தது. நானும் துரியாவும் என் தந்தையின் கல்லறைமுன் மண்டியிட்டுப் பிரார்த்தனை (பாதிஹா) செய்ய ஆரம்பித்தோம்.

முற்றும்

மால்கோஷ்

(வங்காளச் சிறுகதைகள்)

★

கவி ரவீந்திரநாத டாகுர், டாக்டர் சரத் சந்த்ர சட்டர்ஜி
முதலிய பிரபல வங்க ஆசிரியர்கள் எழுதிய அருமையான

சிறுகதைகளின் தொகுதி

வங்க மூலத்திலிருந்து

த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ., அவர்களால்

மொழிபெயர்க்கப் பெற்றவை

கதைகளின் பெயர்	ஆசிரியர்களின் பெயர்
1. மால்கோஷ்	*சாரு சந்த்ர தத்*
2. குருவியின் ஸம்ஸாரம்	*அச்யுத ராய்*
3. படித்துறை சொல்லும்	*ரவீந்த்ரநாத் டாகுர்*
4. இஷ்ட தெய்வம் [கதை	*சரத் சந்த்ர சட்டர்ஜி*
5. ஹீராகுணி	*அவனீந்த்ரநாத் டாகுர்*
6. பாலை மலர்கள்	*சரதிந்து பானர்ஜீ*
7. தங்கச் சிலை	*ஸீதா தேவி*
8. யாரோ !	*பிரபோத குமார் ஸாந்யால்*
9. ஆப்பிள் பழம்	*ரவீந்திரநாத் மித்ர*
10. வளையற்காரன்	*சாருசந்த்ர பானர்ஜி*
11. கெட்ட பெயர்	*ரவீந்த்ரநாத் டாகுர்*
12. ஸ்வப்ன யாத்திரை	*"வன புல"*
13. சிறைப் பறவைகள்	*ஸாதனா கர்*
14. முடிவில் காதல்	*ஜலதர் ஸேன்*
15. கற்பனையும், வாஸ்தவமும்	*காஞ்சனமாலா தேவி*

ஆண்டிக் காகிதத்தில் அழகாய் அச்சிடப்பெற்றது.
உயர்ந்த முறையில் பைண்ட் :: ரூ. **2-4-0.**

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

மாதவீ கங்கணம்

[சரித்திர சம்பந்தமான நவீனம் : அக்பர் காலம்]

ஸ்ரீயுத ரமேச சந்திர தத்தர் இயற்றிய

"ஆக்ரா நகரத்து அடிமைப் பெண்"

என்னும் நவீனத்தின் தமிழ் வழி நூல்

வழிநூல் ஆசிரியர் : ஸ்ரீ வே. கா. ராமநாதன், பி.ஏ., பி.எல்.

1, 2-ஆம் பாகங்கள்	::	தொகுதி	I	::	ரூ. 2—0—0
3, 4-ஆம் பாகங்கள்	::	தொகுதி	II	::	ரூ. 1—4—0

பொருளடக்கம்

முதற் பாகம்

இரண்டாம் பாகம்

மூன்றாம் பாகம்

நான்காம் பாகம்

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

உல்லாஸ வேளை

“எஸ். வி. வி.” எழுதிய

ஹாஸ்ய நூல்

பேதர்வெயிட் காகிதம் :: உயரிய கலிகோ பைண்ட்

பொருளடக்கம்

விலை ரூ. 2—8—0


அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

தோட்டியை மணந்த அரசகுமாரி

தி. நா. சுப்பிரமணியன்
எழுதியவை

(சரித்திர சம்பந்தமான கதைகள்)

பொருளடக்கம்



பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாயர்

வங்காளியில் எழுதியதன் தமிழ் மொழிபெயர்ப்பு

ஸ்ரீ த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.,

மிக்க அழகாய் மொழிபெயர்த்தவர்

பத்திரிகைகளின் புகழுரைகள்

ஜோதி :—* பல சிறந்த அம்சங்கள் நிறைந்த இந்நூலை இத்தனை வருஷ காலமாகத் தமிழர்கள் சுவைக்க முடியாமலிருந்ததே என்பதுதான் நமது விசனம். அந்த விசனத்தை மாற்றி, தமிழிலக்கியக் களஞ்சியத்தில் இந்தப் புது மணியைச் சேர்ப்பித்த ஸ்ரீமான் த. நா. குமாரஸ்வாமி அவர்கட்கும், மெஸர்ஸ் அல்லயன்ஸ் கம்பெனியாருக்கும் தமிழ்நாடு பெரிதும் கடமைப் பட்டிருக்கிறது. மொழி பெயர்ப்பு கேவலம் உயிரற்ற மொழிபெயர்ப்பா யிராமல் மூலத்திலுள்ள நயத்தை அப்படியே கொணர்ந்திருக்கிறார். பங்கிம் சந்த்ரர், தமிழ் மொழியிலேயே அதனை எழுதியிருக்கக்கூடுமோ என்று எண்ணும்படியாக இஃது அமைந்திருக்கிறது என்று சொன்னால், அதுவே நமது அபிப்பிராயத்தைத் தெளிவுபடக் கூறினதாகுமல்லவா! மெஸர்ஸ் அல்லயன்ஸ் கம்பெனியாருடைய பதிப்புகள் எப்பொழுதுமே உயர்ந்த ரகமுள்ளவை. அவற்றில் இந்தப் பதிப்பு முதல்தரமா யிருக்கிறது.

மணிக்கொடி :—* கதை சுவாரஸ்யம் என்று சொல்லிவிட்டால் மாத்திரம் போதாது. அதில் அங்கங்கே சித்திரிக்கப்பட்ட வர்ணனைகளும், கம்பீரமான கற்பனைகளும் மிகவும் இன்புறுத்துகின்றன. * இலக்கிய மணம் கமழும்படி, இனிய நடையில், ரொம்ப அழகாக மூலத்திலிருந்து கொண்டு வந்திருக்கிறார்.

ஜயபாரதி :— * முதல் நூலிலிருந்த நயத்தையும், அழகையும், வர்ணனை யையும் இம் மொழிபெயர்ப்பில் இருப்பதைவிட அழகாக மொழிபெயர்க்க முடியாது.

310 - பக்கங்கள் :: விலை ரூ. **1—8—0**

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

ஆனந்த மடம்

வங்காளி மூலத்திலிருந்து

த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ., அவர்கள்

மிக்க அழகாய் மொழிபெயர்த்தது.

ரூ. 1—8—0

புதிய பதிப்பு

மதிப்புரைகளிற் சில

The Hindu:—"The translation into Tamil *has been done remarkably well.*

* * *

கலைமகள்:—வர்ணனைகள் எல்லாம் தத்ரூபமாகக் கண்முன் வந்து நிற்கின்றன. இயற்கை வர்ணனைகளை அநாயாசமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். * அரண்யத்தின் காட்சிகள், பஞ்சத்தின் கொடுமை, ஆனந்த மடம், சந்தானர்களின் போர் முதலியவை உயர்ந்த சித்திரங்கள்.

* * *

தனவணிகன்:— * தமிழ் மக்கள் அவசியம் படிக்கவேண்டிய நூல்களுள் இது ஒன்று. மொழி பெயர்ப்பு அருமையாய் இருக்கிறது. கண்கவர் முறையில் அமைந்த புத்தகம்.

* * *

கலா சேவகி:—சொல் அமைப்பு இலகுவாயும், கற்பனை வெகு நேர்த்தியாயும், கதைப்போக்கு விருவிருப்பாயும் இருக்கிறது.

* * *

நவசக்தி:—இந்தியாவுக்குச் சுதந்திர உணர்ச்சி ஊட்டியது ஆனந்த மடம். * மொழிபெயர்ப்பு நன்றாயிருக்கிறது.

* * *

ஹநுமான்:—இக் கதையின் போக்கே நூதன வசீகரம் படைத்தது. தேசீய ஆவேசத்தை ஊட்டும் இந்த நவீனத்தைப் படிக்கும்போது, ஒரு கதையைப் படிப்பதுபோன்ற உணர்ச்சியே நமக்கு ஏற்படவில்லை. மொழி பெயர்ப்பு என்ற எண்ணமும் நமக்கு உண்டாகவில்லை. எளிய லளிதமான தமிழ் நடை. உயர்ந்த நாவல். நல்ல மொழிபெயர்ப்பு.

* * *

மணிக்கொடி:—பங்கிம் பாபுவின் மூலத்திலுள்ள வேகம் பூராவையும் கொண்டு வந்திருக்கிறார். அழகான வர்ணனைகளை நன்றாக மொழிபெயர்த்திருக்கிறார்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை